Office of the Registrar of
Books & Newspapers,
23 FEB
CE

Registered at the G. P. O. as a Newspaper

வாரப்பதிப்பு விலை சதம் 15

சுதந்திரன்

SUTANTIRAN

194 A, SILVERSMITH STREET, COLOMBO—12.

USHA உஷா

கை மெஷின் ரூ. 225-00.
டிரெடல் ரூ. 315-00.
போல்டிங் ரூ. 340-00.

சோல் ஏஜண்ட்: G. H. REIMOO'
17, புதிய சோனகத் தெரு, கொழும்பு
டெலிபோன்: 6060.

புத்தகம் 9 மன்மத ௵ மாசி மாதம் 7 திகதி 19-2-56 ஞாயிற்றுக்கிழமை ரஜப் பிறை 6 இதழ் 38

பெப்ரவரி 20-ம் தேதி தமிழ்ப் பேசும் மக்கள் ஹர்த்தால் அனுஷ்டிப்பர்!

அன்றையத் தினம் எங்கும் அமைதியும் கட்டுப்பாடும் நிலவவேண்டும்

சாத்வீகமாக ஹர்த்தாலை நடத்துமாறு வேண்டுகோள்

(நமது நிருபர்)

பெப்ரவரி 20-ந்தேதி வடக்குகிழக்குமாகாணங்களிலுள்ள தமிழ்ப் பேசும் மக்கள் சாத்விக ஹர்த்தாலை அனுஷ்டிப்பார்கள் ஆனால் எங்கும் அமைதியும், கட்டுப்பாடும் நிலவ வேண்டும். மற்றவர்கள் பலாத்காரங்களில் இறங்கினாலும் அதை பொருட்படுத்தாது தமிழ்ப் பேசும் மக்கள் சாத்வீகமாகவும், அமைதியாகவும் நடந்துகொள்ள வேண்டும்.

இவ்வாறு யு. என். பியின் தனிச் சிங்கள தீர்மானத்தை ஆட்சேபித்து சாத்விகபூர்வமான ஹர்த்தாலை நடத்த திட்டமிட்டுள்ள ஹர்த்தால் கமிட்டி அறிவித்துள்ளது.

"தமிழ்ப் பேசும் தலைவர்களுக்கிடையில் ஹர்த்தால் பற்றி அபிப்பிராய பேதம் எழுந்துள்ளது. ஹர்த்தால் புசுபுசுத்துப் போகலாம்" என்ற பொருள்பட தினசரிப்பத்திரிகைகள் சில செய்திகள் வெளியிட்டுள்ளன. இது பொய்யானதென்றும் பெப்ரவரி 20ந் திகதி தமிழ்ப் பேசும் மக்கள் ஒரு சாத்விக ஹர்த்தாலை அனுஷ்டிப்பது நிச்சயம் என்றும் மேற்கூறிய செய்தி குறித்து நமது நிருபர் ஹர்த்தால் கமிட்டிபிரமுகர் ஒருவரைக் கேட்டபோது அவர் கூறினார்.

தனிச்சிங்களத்தைபுகுத்துவதற்கும் தமிழை இந்த நாட்டிலிருந்து ஒழித்துக்காட்டுவதற்கும் ஆட்சியாளர் செய்து வரும் சூழ்ச்சியை எதிர்த்து தமிழ் மக்கள் தம் சாத்விகமான எதிர்ப்பை காட்டுவது அவசியம் என்றும் அத்தகைய ஒரு ஹர்த்தாலில் மானமுள்ள தமிழ் மக்கள் கலந்துகொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ள ஹர்த்தால் கமிட்டி அதே நேரத்தில் ஹர்த்தாலில் கலந்து கொள்ளும் மக்களிடம் ஒரு கண்டிப்பான நிபந்தனையையும் பணிவுடன் முன்வைத்துள்ளது. ஹர்த்தாலை ஒட்டி எந்தவிதமான அசம்பாவிதங்களும் நிகழக்கூடாதென்பதும், தமிழ் மக்கள் எந்த நிலையிலும் சாத்விகக் கோட்பாடுகளுக்குப் புறம்பாக நடக்கப்படாதென்பதுமே அந்த வேண்டுகோள்.

"ஹர்த்தால் கமிட்டி பிரமுகர் நமது நிருபருக்களித்த பேட்டியில் தொடர்ந்து விளக்கியதாவது-

"ஹர்த்தாலை ஒட்டி நாட்டின் எந்தப் பகுதிகளில் கூட்டங்கள் நடந்தாலும் எல்லாக் கூட்டங்களும் அமைதியாகவும் கட்டுப்பாட்டோடும் நடக்கவேண்டும். மக்களின் உணர்ச்சியைக் கிளறிவிடக்கூடிய கோஷங்களும், ஆவேச ஆர்ப்பாட்டங்களும் தவிர்க்கப்படவேண்டும். சத்தியாக்கிரகத்தை ஒட்டிய கோட்பாடுகள் கண்டிப்பாகப் பின்பற்றப்படவேண்டும்.

"கடைகள் எல்லாம் ஹர்த்தால் தினத்தில் மூடப்படும். ஆனால் அது கடைச் சொந்தக்காரர்களின் இஷ்டத்தைப் பொறுத்தது. கடைகளை சாத்தச் சொல்லி யாருமே யாரையும் நிர்ப்பந்திக்கப்படாது: பள்ளிக்கூடங்களுக்கு பெற்றோர்கள் தமது குழந்தைகளை அனுப்ப மாட்டார்கள். ஆனால் பள்ளிமாணவர்கள் உணர்ச்சிவசப்பட்டு கட்டுப்பாடற்ற ஆர்ப்பாட்டங்களில் இறங்கப்படாது.

"சிங்களத்தை தனித்து ஆட்சிமொழியாக்கும் ஆட்சியாளரின் தீர்மானத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கு முகமாகவே ஹர்த்தால் நடைபெறுகிறது. இதில் பலவந்தத்திற்கு, வலுக்கட்டாயத்திற்கும் கிஞ்சிற்றும் இடமில்லை. கலந்துகொள்பவர்கள் தம் தம் மனச்சாட்சிப்படியும், இஷ்டத்தின் அடிப்படையிலுமே பங்கு கொள்ள வேண்டும்.

"உணர்ச்சிவசப்பட்டு யாரும் அமைதி நிலையிலிருந்து மாறக்கூடாது. அத்தகைய செயல்கள் ஹர்த்தாலின் உணர்விற்கே விரோதமானவை. தமிழ் மக்களுக்குச் செய்யும் துரோகமாக வெறுக்கப்பட வேண்டியவை.

"மற்றவர்கள் ஆத்திரமூட்டக்கூடிய விதத்திலும், பலாத்கார முறைகளில் இறங்கினாலும் தமிழ்ப் பேசும் மக்கள் எந்த நிலையிலும் அமைதியாக நடக்கத் தவறப்படாது. அஹிம்சை சித்தாந்த முறைகள் கண்டிப்பாக பின்பற்றப்பட வேண்டும்.

அரசாங்க ஊழியர் பற்றி இன ரீதியான புள்ளி விபரம்

தமிழர்களை படிப்படியாக குறைக்க அந்தரங்க திட்டமா?

(நமது நிருபர்)

அரசாங்க சேவையில் சேவைபுரிந்து வருபவர்களைப்பற்றிய ஜாபிதா வொன்றை இன மொழி புள்ளி விபரமுறையில் தயாரிப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டு வருவதாக நம்பப்படுகிறது. இத்தகைய ஒரு செயலைச் செய்வதற்கு அரசாங்கம் முனைந்திருப்பது இதுவே முதற் தடவையாகும்.

எதற்காக அரசாங்க சேவையாளர்களை இனவேறுபாட்டுடன் கொண்ட தனித் தனிப் புள்ளி விபரஜாபிதா வொன்றை அரசாங்கம் தயாரிக்கிறது? என்பன போன்ற கேள்விகள் அரசியல் வட்டாரங்களில் அடிபடுகின்றன.

இவ்விதமாக ஒரு ஜாபிதா வைத்தயாரிக்க அரசாங்க அந்தரங்க திட்டக் காரியதரிசியவர்கள் பணிபுரிந்து வருகிறார். அடுத்தாண்டு வரவு செலவுத் திட்டத்திற்குரிய ஒரு சாராம்சமாக அத்திட்டம் பலனளிப்பதாகவும் கருதப்படுகிறது.

இத்திட்டம் உருவாவதற்குச் சில அரசாங்க இலாகாக்கள் அந்தரங்கமாகத் தொடர்பு ஏற்படுத்தி வருவதாகவும், அரசாங்க அந்தரங்கத்திட்டத்தில் இம்முறை ஒரு புதுவித தந்திரமாகவும் நம்பப்படுகிறது.

இத்தகைய ஜாபிதா ஒன்றைத்தயாரிப்பதன் மூலம் வருங்காலத்தில் தமிழரின் எண்ணிக்கையை அரசாங்க சேவையில் குறைப்பதற்குரிய எண்ணமிட்டுச் செய்யப்படும் ஒரு திட்டமாகவும் இது நம்பப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் சபை உதவி இன ஒதுக்கலுக்கு இரையாகிறதா?

இலங்கையிடம் ஐ. நா. சபை ஸ்தாபனங்களின் கேள்வி

(நமது நிருபர்)

ஐக்கிய நாடுகள் சபையுடன் சம்பந்தப்பட்ட பல ஸ்தாபனங்கள் இலங்கையின் சிறுபான்மையினர் பிரச்னைபற்றிய உண்மைகளை அறிய முன் வந்திருப்பதாக நம்பத்தகுந்த வட்டாரங்களிலிருந்து நமக்கு ஒரு செய்தி கிடைத்துள்ளது.

இலங்கைக்கு தாம் அளித்து வரும் உதவிகள் இனப் பாகுபாடின்றி சகல மக்களுக்கும் கிடைக்கக்கூடியதாக தரப்படுகிறதா என்ற விபரங்களை சேகரித்து தமக்கு அனுப்புமாறு சர்வதேச தொழில் ஸ்தாபனமும், யூனெஸ்கோவும் தமது இலங்கை ஸ்தாபனங்களுக்கு அறிவித்திருக்கின்றன என்று மேலும் தெரிகிறது;

இலங்கையில் காட்டப்பட்டு வரும் இனப் பாகுபாடுபற்றிய செய்திகள் பிற நாடுகளுக்கு கிடைத்து வருவதாலேயே மேற்கூறிய விசாரணைகளை குறிப்பிட்ட ஸ்தாபனங்கள் நடத்த முன் வந்துள்ளன என்று கருதப்படுகிறது.

இலங்கைக்கு கொடுக்கப்படும் உதவிகள் எவ்வாறு விநியோகிக்கப்படுகின்றன என்பதுபற்றி உணவு-விவசாய ஸ்தாபனம் பல கேள்விகளை கேட்டிருப்பதாக நம்பப்படுகிறது.

குடியேற்றத் திட்டங்களில் இன அடிப்படையில் நடைபெறுவதாக கூறப்படும் இன ஒதுக்கல் கொள்கைபற்றிய முழு விபரத்தையும் சமர்ப்பிக்குமாறு உணவு விவசாய ஸ்தாபனம் கேட்டுக்கொண்டுள்ளதாம்; இந்த ஸ்தாபனம் இலங்கைக்கு அளித்துவரும் உதவிகள் எல்லா மக்கள் மத்தியிலும் சமமாக பகிரப்பட வேண்டும் என்று அது விரும்புவதாகத் தெரிகிறது.

மேற்படி பிரச்னைபற்றிய விபரங்களை சமர்ப்பிக்குமாறு குறிப்பிட்ட ஸ்தாபனங்கள் சென்ற டிசம்பர் மாதத்திலேயே கேட்டுக் கொண்டபோதிலும் இது வரை இது சம்பந்தமாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று தெரிகிறது;

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் சார்பில் வெவ்வேறு நாடுகளுக்கு அளிக்கப்படும் உதவிகள் இன ஒதுக்கல் கொள்கைகளுக்கு இரையாவது ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் தார்மீகக் கோட்பாட்டிற்கே விரோதமானது என்று சொல்லப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தில் புதிதாக அங்கத்துவம் பெற்றுள்ள இலங்கை மேற்படி குற்றச்சாட்டிற்கு இலக்காவது சர்வதேசிய அளவில் இலங்கையின் கௌரவத்தை பெரிதும் பாதிக்கலாம் என்றும் கருதப்படுகிறது;

மூலம்
சகலவித மூலநோய் சங்காரி

மூல நோய்களுக்கு ஓர் வரப்பிரசாதம். ஒரே போத்தலில் குணம் தெரியும். தவிர, சகலவித வாதங்கள், ஊறல், படை, (Eczema) கிரந்தி, மறமறப்பு, முதலானவைகளுக்கும் அதியற்புத குணமளிக்கும்.

காலங் கடத்தாமல்
உடனே வாங்கிச் சாப்பிடுங்கள்
ரிச்செல்ஸ் பிளட் பியூரிபயர்
கேடலாக் இனாம்!

வெஸ்டன் ஏஜென்ஸீஸ்.
170, ஆட்டுப்பட்டித்தெரு
கொழும்பு. போன்: 2850

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

ஒழுக்க மற்றோர் நல்வாழ்வின் நமன்கள்

சமூகத்தின் புல்லுருவிகள்!

தேசிய ஆக்கம்-மக்கள் நலனின் அச்சு ஒழுக்கமுடைமை

உயர் பண்பே கூட்டு வாழ்வுக்கு வேண்டிய பொறுப் புணர்வைத் தரும்

தமிழர் பண்பாடு போதிக்கும் நல்வாழ்க்கை உண்மைகள்

பட்டப் பகல் வேளை. நட்ட நடுநேரம் கையில் விளக்கொன்றை "ஏந்திக் கொண்டு அதன்ஸ் நகர வீதி வழியே அலைந்து திரிந்தார் அறிஞர் தயோஜெனிஸ். ஏன்? ஒரு மனிதனைக் காண அகத்தினழகு முகத்திற் தெரியும் என்ற குறிப்பு "பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்றதன்றோ" எனக் காடேகினான் இராமன்; மனைவியோ "நின் பிரிவினுஞ்சுடுமோ காடு" எனப் பின்தொடர்ந்தாள். உடன் சென்றான் ஒருவன். தம்பி என்னும்படியல்ல, அடியாரின் ஏவல் செய்ய கடமையால் ஒழுகினான் மூத்தோன் காதல் வழி நின்றாள் மனைவி. உரிமை இளையோனை உந்தியது இனியவை யாவினும் இனிய நண்பனாய் அமைந்தான் வேடன். செஞ்சோற்றுக் கடன் கழித்தான கர்ணன். கும்பகர்ணன் உட்பிட்டவனை உள்ளளவும் நினைத்தான். இவை இதிகாசந்தந்த ஒழுக்கம்.

உள்ளம் விரும்பாத ஒன்றை விரும்புமாயினும் உடனே விருப்பத்தை நிறைவேற்றிவிடுதல் முறையன்று. கருதியது முடித்தல் என்பது பின்னாற் கருதுவதற்குரியது. அதுகாறுங் கேட்ட கேள்வியறிவு காவலாகத் தமதுள்ளத்தைத் திருப்பி, ஒருவழியில் நிறுத்தித் தமது கருத்தினையும் கருதிப் பார்த்து அறமும்-பொருளும் வழுவாமல் எண்ணிச் செய்தலே முதலிற் கருதுவதற்குரியது. அங்ஙனம் வழுவாமை நாக அதன் பின் ஆவதற்குரியதே கருதியதை முடித்தலென்பது பெரியோருடைய ஒழுக்கத்தை இத்தகையதாகும் என அகநானூறு காட்டும் வழிதான் மேற்கண்ட கருத்து.

விஞ்ஞானத்தின் வித்தையிலே இயற்கையை ஆண்டோம் என்னும் எக்களிப்போடு வாழும் இன்றைய மக்களின் போக்கைக் கண்டு இயற்கையன்னையே நகைபுரிகிறாள் வற்றாத நீரூற்றாய்ப் பலவகையான தேசியப் பெருந் திட்டங்களும்-சீர்திருத்தங்களும்-புரட்சிகளும் புனர் நிர்மாணங்களும் திட்டப்படுகிறது நாடு தோறும். ஆனாலவைகளின் அடிப்படையில் சில இல்லை. எல்லாவற்றையும்விட உயரிய சீர்திருத்தத் திட்டமுண்டானால் அதுதான் 'ஒழுக்கம்'. இது கால தேச அனெல்லைகளை மீறியது, பொது உடைமையாய் அமைவது. மனிதர் கருவில் உருவாய் அமைய வேண்டுவதும்கூட. ஒழுக்கம் இரத்தத்தோடு இரண்டறக் கலவாதவரை மற்றெந்தத் திட்டமும் பயன்தரா. "தன்னைத்தான் சீர்திருத்துபவனே உண்மையான சீர்திருத்தவாதி" என்கிறார் பெர்னாட் ஷா. இன்று மனிதன் பறவைகளைப் போல ஆகாயத்திற் பறக்கக் கற்றுக்கொண்டான். மீனைப் போல நீந்தக் கற்றுக்கொண்டான். ஆனால் மனிதன் மனிதனாகக் கற்றுக் கொள்ளவில்லை என்கிறார் மற்றொருவர்.

தணிச்சலுடையவனுக்கும், வம்பு பேசுபவனுக்கும் புறங் கூறுபவனுக்கும். முரடனுக்கும், கயவனுக்கும் வாழ்க்கை வெகு சுலபமாகத் தோன்றுகிறது. ஆனால் வெட்கமுள்ளவனுக்கும், நல்வாழ்வில் நாட்டமுள்ளவனுக்கும், சுயநலமில்லாதவனுக்கும், தூய்மையுள்ளவனுக்கும் வாழ்க்கை கடினமாகத் தோன்றுகிறது. எனினும் உண்மையான ஒழுகலாற்றின் பயனை அனுபவிப்பவன் அன்னவனே. உலகெங்கும் அமைதியின்மை காணப்படும் இன்றைய உலகிலே ஞானி கன்பியூசியஸ் சொன்ன வாக்கிடை நினைவு கூறத்தக்கதாகும். "இருதயத்திலே நேர்மையிருந்தாற் குணத்திலழகிருக்கும். குணத்திலழகிருந்தால் வீட்டிலொற்றுமை இருக்கும். வீட்டிலொற்றுமை இருந்தால் தேசத்திலொழுங்கு நிலவும். தேசத்திலொழுங்கிருந்தால் உலகிலொற்றுமை உண்டாகும். எனவே எல்லாவற்றுக்கும் கடைக்கால் ஒழுக்கம்" என்பதே அவ்வறிஞர் முடிபு.

வீ. பீ. நாதன்

நல்லொழுக்கம் நன்றிற்கு வித்து

நல்லாரைக் காண்பது-சொற்கேட்பது-குணங்களுரைப்பது-இணங்கி இருப்பது யாவும் நன்று. யார் நல்லார்? உலகம் உயர்ந்தோர் மாட்டது "பண்புடையார்ப்பட்டுண்டுலகம்" என்பது தேவர் வாக்கு அவரே மறந்தும் பிறன்கேடு சூழார்; பொல்லாங்கென்பவை எல்லாந் தவிர்ந்தவர்கள் யாரோ அவர்கள் நல்லவர்கள் அந்த நல்லவர்களாய் வாழ்வதே வாழ்வு வையத்துள் வாழ்வாங்கு வாழும் முறையுமதுவே. அவ்வழியிற் சென்ற வித்தகர்களே நமக்கு ஊன்றுகோல். அப்படிகளில் நாம் ஏறினால் உலகின்பக் கேளியாகும். யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற பூங்குன்றனார் வாக்கு மெய்யாகும்.

உடம்பும் உயிரும் இணைந்துள்ளது. யாவினும் சிறந்த பொருள் உயிர். காதலர் வாழ்வு உடம்பொடுயிர் இணைந்தாற் போன்றது எனின் உயிர் போற்றற்குரியதே. அவ்வுயிர்க்கு மேன்மை தவறுவது ஒழுக்கமேயாதலின் நாம் உயிரிலும் ஒழுக்கத்தையே மேலானதாய்க் காக்க வேண்டும். மனித தர்மமெல்லாவற்றையும் ஆயும்போது உயிர்க்குறுதுணை ஒழுக்கம் ஒன்றே. ஆதலின் எவ்வித இன்னல்களுளும் மிக்க பிரயாசையுடன் அதைப் போற்றிப் பாதுகாப்பது மனித கடமையும் உரிமையும் ஆகும். அங்கே மலைபோற் துன்பம் வரினும் நிலைகுலையாது கர்மவீரராய் வாழ வேண்டும்.

''ஒழுக்கம் விழுப்பம்
தரலான் ஒழுக்கம்
உயிரினு மோம்பப்படும்''
(குறள் 131)

பரிந்தோம்பிக் காக்க
ஒழுக்கம் தெரிந்தோம்பித்
தேரினு மஃதே துணை
(குறள் 132)

ஒழுக்கத்தாலுயர்ந்தோர் பலர். கற்பொழுக்கத்தாற் சிறந்தாள் கண்ணகி மணிமேகலை துறவொழுக்கத்தால் மேன்மையுற்றாள். உண்மை உயர்வைக் கொடுத்தது அரிச்சந்திரனுக்கு. காந்தியடிகள் அன்பு, அஹிம்சை, சத்தியம் என்பவற்றை வாழ்வின் திறவுகோலாகக் கொண்டார். அல்லற்படாது அருவாண்டார் குசேலர்; அட்டசிலங்களைக் காட்டிய பத்தருக்கு [illegible] தந்த மகான் முஹமது நபியும்; இன்னா செய்தார்க்கும் இனியவே செய்த இயேசுவும் காட்டிய செந்நெறிகளும் ஒழுக்கத்தையே கொண்டன. ஆதலின் நல்லொழுக்கம் நன்றிக்கு வித்தாகும் அதனாலழிந்தோர் அல்லலுற்றோர் எவருமே இல்லை. மேன்மை; சுகம், இன்பம் முதலியவற்றைப் பெற ஒழுக்கம் போற்றப்பட வேண்டும்.

'ஒழுக்கத்தினெய்துவர்
மேன்மை இழுக்கத்தின்
எய்து வரெய்தாப்பழி
(குறள் 137)

செல்வம் நிலையற்றது. கூத்தாடும் அவைக்கு எப்படிப் பார்வையாளர் கூடி, சொல்லாமற் பிரிகிறார்களோ அதுபோன்றதே செல்வமும், யாரைச் சேருகிறதோ அதற்கியைய வளம்பெறும். வஞ்சகம், பொறாமை, வெகுளி முதலாம் தீகுணம்வாய்ந்த தூர்த்தரிடத்தே செல்வம் நிலையாது. நல்லாரிடத்துச் செல்வம் நாள்தோறும் வளரும். அதுபோன்றதே ஒழுக்கமும். 'திருநோக்கும் தீதிலொழுக்கம்' என்பதன் பொருளுமஃதே. பாஞ்சாலியை மானபங்கஞ் செய்தபோது அவளின் சேலை "பெருமக்கள் செல்வத்தின் பெருகுதல்போல்" வண்ணப் பொற் சேலைகளாய் வளர்ந்தன என்கிறார் பாரதி. ஒழுக்கமில்லாத-விடத்து (ஒழுக்கம் தரும்) உயர்வு தேய்பிறை யன்னதாகும்.

''அழுக்காறுடையான்
கணுக்கம்போன்றில்லை
ஒழுக்க மிலான் கணுயர்வு''
(குறள் 135)

ஒழுக்கத்தாலுயர்வும்-தவறுவதாற் குற்றமும் பழியும் பாபமும் ஏற்படும். இதையுணர்ந்த பெரியார்கள் ஒழுக்கத்திலிருந்து தவறமாட்டார்கள் உயர்ந்த ஒழுக்க நெறிவாழ்வோர் நிலையிற்றிரியின் பற்றவர்களாற் பழிக்கப்படுவர்; வாழ்நாள் முழுமையும் ஒழுக்க நெறி நின்றோரின் உயர்வெல்லாம் சில கணப்போதில் மாசுறுகின்றது. ஒருதுளி நஞ்சு தேனின் தன்மையை முற்றாயழிப்பது போல முன்னைய செம்மை கூடாவொழுக்கத்தால் நீறாய்விடுவது சகஜம் இவன் ஒழுக்கமுடையவனா? இல்லையா? என்பதை எப்படி அறிவது. அவனுடைய பேச்சு நடை, தன்மை ஆதியன அவனைப்பற்றிப் பறைசாற்றிக்கொண்டே இருக்குமாதலின் அவற்றைக் கொண்டே அவனை அளக்க முடிகிறதாதலின் மேன்மக்கள் தவறியுந் தீயன சொல்லார்.

''ஒழுக்கத்தி னொல்கா
ருரவோ ரிழுக்கத்தி
னேதம் படுபாக் கறிந்து''
(குறள் 136)

''ஒழுக்கமுடையவர்க்
கொல்காவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல்''
(குறள் 139)

இதனாலன்றோ ஒழுக்கந் தவறாமல் நடந்தவர் பெருமையைப் பெரிதாகப் பேசுகின்றனர்?

''ஒழுக்கத்து நீத்தார்
பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவற் றுணிவு''
(குறள் 21)

ஒழுக்கமில்லாத வாழ்வு சுவையில்லாத கனிபோன்றது ஒழுக்கமில்லாத சமயம் வேரில்லா மரம்போன்றது என்பதை உணர்ந்து நல்லொழுக்கத்தின் வழியே நாம் வாழ்வை நடத்தி விழுப்பத்தைத் தேடுதல் ஒவ்வொருவரது இலட்சியமாகும்

தீயொழுக்கம் தீமைதரும்

தீயாரைக் காண்பதுவுந் தீதே திருவற்ற தீயார் சொற் கேட்பதுவுந் தீதே-தீயார் குணங்களுரைப்பதுவுந் தீதே-அவரோடிணங்கி இருப்பதுவுந் தீது. எது தீமை பயக்கின்றதோ அது நீக்கப்படல் வேண்டும். புரைதீர்ந்த நன்மை பயப்பனவே நமக்கு வேண்டுவன; தீயொழுக்கமென்றும் இடும்பைதரும் அதனாலழிந்தார் பலர் அறம்புகா இலங்கை வேந்தன் நீதியற்ற வழியிற் சென்று மாண்டான்; வாழைக்குத்தானீன்ற கூற்றம ஆவது இயல்பு. அறநெறி பிழைத்தோர்க்கு அறங் கூற்றம் என்பது இளங்கோ உண்மை. அதனாலழிந்தவன் நெடுஞ்செழியன். ஐம்புலனை அடக்காது இந்திரன் மாசடைந்தான்; தீயொழுக்கந்தரும் பாடங்களுக்கு இவைதான் உதாரணம்; அஃதெக்காலமுந்துன்பத்துக்கேகால் பிறர் நலமே தன்னலமாம் வாழ்பவர் என்புமுரியார். பிறர்க்கு அவர்கள் மனத்தாலும மாறு செய்யார், அதனாலவர்களுக்குக் கேடென்பதே வராது. அவசரத்தில் முன்பின் யோசியாமல் தீமை செய்வதாற் பயனை அனுபவிப்பவன் செய்தவனே. அங்கே அன்பின் பலன் ஏது? தீவினையாற்றனக்குத் தீமை வருமென்பதை உணர்ந்து அஞ்சி வாழ்க்கை நடத்த வேண்டும். அவ்வாறு தன்னைத்தானே நேசிப்பவன் தீமை பயக்கும் எக்காரியங்களையும் பிறருக்குச் செய்தல் கூடாது.

''தன்னைத்தான் காதலனாயி
னெனைத்தொன்றுந்
துன்னற்க தீவினைப்பால்''
(குறள் 209)

போலிவாழ்வு புன்மைதரும்

இந்த உயர்ந்த கோட்பாடு எல்லார் உள்ளங்களிலும் மலர்ந்துவிடுமாயின் பகையேது, பூசலேது? எல்லாரும் ஓரினமாய் வாழலாமன்றோ. இதை விடுத்துக் கோணல் வழியில் நம்மை நடத்துவதால் எப்பயனையும் நாம் அடைய முடியாது; நாமும் வாழ வேண்டும், பிறரையும் வாழவிட வேண்டும் என்ற பரந்த நோக்கமே நம்மினம் கடைத்தேற வழிகோலும். நன்மை செய்ய முடியாவிடினும் தீமை செய்யாதிருப்பதே மேல். இதை "நல்லது செய்தல் ஆற்றீராயினும் அல்லது செய்தல் ஓம்புமின்" என்ற பண்டைய இலக்கிய அடிகள் வலியுறுத்துகின்றன என்றாலும் நம்மிடையே போலி வாழ்வுடையவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். இவர்களைத்தான் வேடதாரிகள் என்று சொல்வர். இவர்கள் உலகினரை ஏமாற்றலாம் ஏமாற்றிவிட்டோமென்று எண்ணலாம். அவர்களுடைய மனச்சாட்சி அவர்களைக் கொல்லவே செய்யும். அவர்களது ஐம்பூதங்களும் அவர்களை ஏளனஞ் செய்கின்றன இவ்வாறு பொய் வேடத்தில் வாழ்பவர்களே புலித்தோல் போர்த்த பசுக்களாகும்; புலியைக் கண்டு தோட்டக்காரர் அஞ்சலாம். புலி புல்லைத் தின்னாதென வாழாவிருக்கலாம். ஆனால் சேனை அழித்துவிடும். இவர்கள் செயல வடன் பற்றை மறைவிலிருந்து [illegible] கண்ணி வைத்துப் பறவைகளைப்

(10-ம் பக்கம் பார்க்க)

தமிழில் தபாற் கல்வி

★ ஆங்கிலம்
★ சிங்களம்
★ ஹிந்தி

ஆகியன ஆறு மாதங்களில் போதிக்கப்படுகின்றன.

G. C E.-கு உரிய
62 ஆங்கிலக்
கட்டுரைகள் ரூ. 3-00
50 தமிழ்க்
கட்டுரைகள் ரூ. 3-00

விபரங்களுக்கு எழுதுக:
S. KUMARASWAMY, B. A. (Cey.),
SHANTI COLLEGE,
7 - 18th Lane, Colpetty,
COLOMBO-3.

ஆனந்தா லேகியம்
இதன் குணத்தை ஒரே நாளில்
அறிந்துகொள்ளலாம்
நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை, என்ற விலாசத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள்தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து. அசதி, சோம்பல், மேல், கால், கை, கணுக்களில்வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு, பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங்கால் கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டுவந்தால் மூலவியாதி அடியோடு தொலைந்துபோகும். பத்தியமில்லை.

பெரியது ரூ. 5-75. சிறியது ரூ. 3-00.

இத்துடன் "ஆனந்தா தைலத்தை' தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச்சூடு. பித்த மயக்கம், கைகால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனாமாக அனுப்புவோம்.

பெரியது ரூ. 5-50 சிறியது ரூ. 3-00
வி. பி. பீ செலவு வேறு;
புரொப்ரைட்டர்: எம். பொன்னையா
ஆனந்தா வைத்தியசாலை
நிர் 174, செட்டியார் தெரு, கொழும்பு-11.

திருகோணமலைத் தபால்

அசம்பாவிதம் தணிந்து அமைதி!

அன்னியர் விற்பனை நிலையங்கள் பகிஷ்கரிப்பு!

கடந்த வாரம் நடைபெற்ற சம்பவம் தமிழ்ப் பேசும் மக்களிடையே பெரும் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. தங்கள் சுயதேவைகளை தங்கள் இனத்தவரிடமே பெற்றுக்கொள்ள முனைந்துவிட்டார்கள். ஒவ்வொரு தெருவிலும் உள்ள தமிழ்ப் பேசும் மக்கள் தங்கள் தெருவிலேயே ஒரு சிறு தொகையைப் பலரிடமும் இருந்து அறவிட்டு அதை மூலதனமாகக் கொண்டு. மீன்-மரக்கறி போன்ற உணவுப் பண்டங்களை மலிவான விலையில் கொள்முதல் செய்து ஒரு சிறிய இலாபம் வைத்து, அந்தந்தத் தெருவின் சுயதேவைகளை பூர்த்தி செய்வதில் மிகவும் கவனம் செலுத்தி வருகிறார்கள். இதன் பலனாக இதுகால வரை மக்களை ஏமாற்றி கொள்ளை அடித்த ஒரு கூட்டத்தின் கொட்டம் அடக்கப்பட்டது பெரிதும் விரும்பத்தக்கதே இதுகாலவரை மீன்-மரக்கறி வியாபாரம் செய்யாதவர்கள் எல்லாம் இப்போது வீதி வீதியாகச் சென்று விற்பனை செய்து வருகிறார்கள் இந்த முயற்சி வியாபாரத்தோடு சம்பந்தப்பட்டிருந்தாலும் தமிழ் மக்களுக்கு தாம் செய்யும் சேவையாக பலர் கருதி. இந்தத்துறையில் இறங்கியது பலராலும் வரவேற்கத்தக்க சம்பவமாக அமைந்துள்ளது. முன்பெல்லாம் பெரிய மீன்களையும்—நல்ல ரக மீன்களையும் பிற ஊர்களுக்கு அனுப்பிவிட்டு எஞ்சிய சிறிய மீன்களே நகரத்தில் விற்பனை செய்யப்பட்டு வந்தது ஆனால் தற்போது நிலைமை மாறி, உயர்ந்த ரக மீன்களே மலிவான விலையில் கிடைக்கக்கூடியதாகயிருப்பது நகரத்து மக்களால் பெரிதும் வரவேற்கப்படுகிறது;

நடைபெற்ற சம்பவத்திற்கு பல காரணங்கள் கூறப்படுகிறது "சுதந்திர தின பகிஷ்கரிப்பு" இவ்வளவு வெற்றிகரமாக நடைபெறும் என சுதந்திர தினத்தை என்றுமில்லாதவாறு வெற்றிகரமாக கொண்டாட வேண்டும் என்று துடித்துக்கொண்டிருந்த ஒரு கூட்டம் எண்ணியிருந்ததில்லை. எனவே நொந்துபோன அவர்கள் தருணம் பார்த்து உணவு விடுதி ஒன்றைத் தாக்கி சேதப்படுத்திவிட்டார்கள் என ஒரு சாராரும் "இந்த உணவு விடுதிக்கு நிறைய வியாபாரம் நடக்கிறபடியால் அக்கம்பக்கத்திலுள்ள "அவர்கள்" கடைகள் எல்லாம் தூங்கிவழிகிறது. ஆகவே ஆத்திரம் கொண்ட ஒரு சிலர், சில காலிகள்மூலம் வஞ்சம் தீர்த்துக் கொண்டார்கள்" என பிறிதொரு சாராரும், இன்னும் பலர் வேறு பல காரணங்களும் கூறுகிறார்கள். எது எப்படியிருந்தபோதிலும் ஒரு உணவு விடுதி தாக்கப்பட்டதும், கடைக்குச் சொந்தமான சாமான்கள் நாசமாக்கப்பட்டதும் பெட்டியில் இருந்த பணம் களவாடப்பட்டதும் முழுக்க முழுக்க உண்மையாகும்.

கடை இதுவரை திறக்கப்படாமல் இருப்பதால் சைவ உணவை உட்கொள்ளும் பல அன்பர்கள், காலாகாலத்தில் தக்க உணவு கொள்ள மார்க்கமின்றி தவிக்கிறார்கள்—கூடிய சீக்கிரத்தில் மேற்படி உணவு விடுதி அந்த இடத்திலேயோ அல்லது அதற்கு வெகு சமீபத்திலேயோ திறக்கப்படலாமென தெரிய வருகிறது.

மேற்படி சம்பவ காரணமாக சில நாட்கள் ஆயுதம் தரித்த போலீஸ் பாராவும், போலீஸ் மோட்டார் காரும் நகரத்தின் நாலாபக்கங்களிலும் ரோந்து சுற்றிக் கொண்டிருந்தன. இந்த சம்பவத்தின் எதிரொலியாக, கந்தளாய் புகையிரத நிலையத்தில் சில பிரயாணிகள் புகையிரதத்தில் வைத்தே தாக்கப்பட்டார்களாம். இதில் தங்கள் உடமைகளை பறிகொடுத்தவர்களும், அடித்து துன்புறுத்தியதன் பயனாக, பற்களை இழந்தவர்களும் உண்டாம் இப்படியாக அப்பாவி மக்கள் தாக்கப்படுவதை உணர்ந்த தமிழ் பேசும் மக்கள், தங்களுக்குள் இருந்த பிணக்குகளையும், பகைகளையும் ஒதுக்கித் தள்ளிவிட்டு ஒற்றுமைப்பட்டு, மேலே குறிப்பிட்ட மாதிரியான நடவடிக்கைகளில் இறங்கிஉள்ளார்கள். அன்று மகாத்மா காந்தி போதித்தார் அன்னிய துணிகளை பகிஷ்கரிக்கும்படி, அப்போதுதான், நாம் அந்த ஏகாதிபத்தியத்தை இந்தியாவிலிருந்து சுலபமாக வெளியேற்றலாமென்று. அதன் படி, அன்னியரிடமிருந்து நாம், வியாபாரத்தை குறைத்து—ஏன் முற்றிலும் பகிஷ்கரித்துக் கொண்டால் அந்த ஆதிக்கம் கூடிய சீக்கிரம், நம்மிடமிருந்து விடை பெற்றுக் கொண்டு முட்டை முடிச்சுக்களை தூக்கிக் கொண்டு சொந்த ஊருக்கு ஓடி விடும். எனவே நாம் முன்போல் சுபீட்சமாக வாழலாம் என அந்நகர் நம்புகிறார்கள். —அதன் முதல் கட்டம்தான் இப்போது ஆரம்பமாயிருக்கிறது. முதல் கட்டமே முழு வெற்றி என்றால் போகப் போகக் கேட்பானேன்.

இப்போது பூரண அமைதி நிலவுகிறது. பழையபடி ஜனங்கள் வீதியில் பீதியின்றி நடமாடுகிறார்கள்: நகரத்தில் அமைதியை நிலைநாட்ட போலிசாருடன் திருகோணமலைப் பிரதிநிதி இராஜவரோதயம் அவர்களும் நகரசபைத் தலைவர் திரு ஏகாம்பரம் அவர்களும் ஒத்துழைத்தது ரொம்பவும் வரவேற்கப்படும் செய்தியாகும்.

—"சேரன்"

மாட்டுச் சவாரியின்

பேரால் கோரமான சீவ இம்சை

கடந்த சுதந்திர தினத்தன்று யாழ்ப்பாண முற்ற வெளியில் மாட்டு வண்டிச் சவாரி நடத்தச் சிலர் செய்த முயற்சியும் பின்னர் அவர்கள் மூச்சுப் பேச்சின்றி மௌனமாயிருந்துவிட்டதும் நாடறிந்த சங்கதியாகும் பொதுஜன எதிர்ப்புக்கு அஞ்சியும் ஒத்துழைப்புக் கிடைக்காததாலும் அந்த ஏற்பாடுகளைக் கைவிட்ட மேற்படி போட்டிக் குழுவினர் கடந்த சனிக்கிழமை பிற்பகல் சாதாரண ஒரு வண்டிச் சவாரி என்ற அளவில் அதனை நிறைவேற்றிக்கொண்டனர். அநாகரிகமும் பிற்போக்கும் மிருகத்தனமும் கொண்ட இந்தப் போட்டியில் மாடுகள் மகா கொடூரமான சித்திரவதைக்குள்ளானதைவிட அப் பெரியார்கள் வேறென்ன மகிழ்ச்சியைத் தான் கண்டார்களோ தெரியாது. ஒவ்வொரு மாட்டுக்குப் தங்கித இரண்டு அடியாட்கள் வீதம்—கிங்கரர்கள் நியமிக்கப்பட்டு அவர்கள் வெற்றிகரமாகத் தம் வேலையைச் செய்ததும் அகோரம் தாங்கமாட்டாத அநேக மாடுகள் குறுக்கே இழுத்துக் கொண்டோடிக் கூட்டத்திலே பாய்ந்ததும் யாழ்ப்பாணம் என்றும் கேட்டிராத கோர சம்பவங்களாகும்.

சீவகாருண்யமும், கலாசார பண்பாடுகளின் மேம்பாடுபற்றியும் அடிக்கடி பேசிப் பெருமைப்படும் இந்த யாழ்ப்பாணத்தில் இதுபோன்ற ஒரு முட்டாள்தனமான காரியம் நடப்பது வெட்கத்துக்கும் துக்கத்துக்கும் இடமானதாகும்.

அரசாங்கத்துக்குப் பந்தம் பிடித்து அதன் தயவை நாடும் சில பட்டம் விரும்பிகள் அரசாங்க அதிகாரிகளோடு கூடிச் சீவஹிம்சை செய்வது குறித்து இன்று நாடு மிகுந்த அருவருப்படைந்திருக்கிறது. அதுவும் மனித சுதந்திரத்தினதும், சுதந்திர தினத்தினதும் பேரால் நடக்கும் இந்த மிருக அடிமைச் செயலை இனியும் நாடு அனுமதிக்க மாட்டாதென்பதை எதிர்காலம் காட்டும்.

இன்றைய மாட்டுச் சவாரி ஒரு தேசிய விளையாட்டென்று வாதிக்கும் யாராவது நம்மிடையே இருப்பின் அவர்கள் மன்னர்களின் மகிழ்ச்சிக்காக மனிதனை மிருகத்தோடு சண்டை செய்ய ஏவி மடியச் செய்து குதூகலித்த பண்டைய ரோமைத் தேசத்து மிருக வெறிக் கும்பலின் வழித்தோன்றல்களாகத்தானிருக்க வேண்டும்.

ஈழத் தமிழகத்தில்.....



காங்கேசன் துறை

ஸ்தல ஸ்தாபனத்தின் சீர்கேடு

சட்டமும் ஜனநாயக உரிமையும் ஆதிக்க வெறியர்களதும் அரசாங்க எடுபிடியர்களதும் முன்னிலையில் எவ்விதம் செயலற்றுவிடுகின்றனவென்பதற்கு யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு சில ஸ்தலஸ்தாபன சபைகளின் நிர்வாகங்களே தலைசிறந்த உதாரணமாக விளங்கி வருகின்றன. இந்தவகையில் பொதுமக்களின் கவனத்தில் காங்கேசன்துறை பட்டின சபையானது அடிக்கடி காட்சியளித்து வருகிறது. அங்கு நிலவும் கட்சி பேதமும், பெரும்பான்மைத் திமிரும் பொதுஜன வாக்குரிமைக்குக்கூட மதிப்புத் தர மறுத்துவிட்டனவென்று வாக்காளர் பலரும் பேசிக்கொள்கின்றனர்.

இப்பட்டின சபையில் நிகழ்ந்த சில அடங்காப்பிடாரித்தனங்களும் அவற்றையடுத்து நீதிமன்றத்தின் உதவி நாடப்பட்டதும் பல விதமான அசம்பாவிதங்களையும் கண்டு மன வெறுப்படைந்து மூன்றாம் வட்டார உறுப்பினர் திரு ஏ. வி. சதாசிவம் (புரக்டர்) தம் உறுப்பினர் பதவியைத் துறந்து வெளியேறியதும் பலரும் அறிந்த பகிரங்க சம்பவங்களாகும். தற்போது நிர்வாகம் நடத்துவோரின் செயல்களில் அதிருப்தியடைந்து திரு சதாசிவம் ராஜினாமாச் செய்து மூன்று மாதங்கள் கடந்துவிட்டனவெனினும் இன்றுவரை அந்த வட்டார மக்கள் பிரதிநிதி இல்லாத வாக்காளராகவே இருந்து வருகின்றனர். ஸ்தலஸ்தாபனச் சட்டத்துக்கே விரோதமான வகையில் இத்தேர்தல் இன்னும் நிகழாமலிருப்பதன் மர்மம் யா[illegible]லாம். ஒருசமயம் திரு சதாசிவம் மீண்டும் வெற்றிபெறுவாரென்று பீதியினால் யாராவது திரைக்கப்பால் நின்று ஏதாவது செய்திருப்பார்களோவென அவ்வட்டார மக்கள் கவலைகொண்டுள்ளனர்.

136 நோயாளிகளுக்கு ஒரு தாதி

வியாதியஸ்தர்கள் படும் நரக அவஸ்தை

காங்கேசன்துறை அரசினர் ஆஸ்பத்திரியின் சீர்கேடுகள் குறித்து மேலதிகாரிகள் காட்டும் கவனமெல்லாம் இன்றுவரை வெறும் ஏட்டுச் சுரைக்காயாகத்தான் இருந்துவருகிறது. இதனால் அவதிப்படும் நோயாளரும் அருவருப்புக் கொண்டுள்ள பொது மக்களும் மேற்கொண்டு இனி என்ன செய்வதென்று ஆலோசித்து வருகின்றனர். அங்கு நடைபெறும் ஒரு உலக சாதனையைப் பற்றி ஆங்கில பத்திரிகைகள் கூட வியந்து எழுதின. அச்செய்திகளைக் கண்டு உண்டான பரபரப்புச் சில தினங்களின் பின் ஒய்ந்துவிட்டது. ஒரு நர்ஸ் 136 நோயாளிகளைப் பராமரித்து வருகிறாரென்பதுதான் மற்றெங்குமே காணப்படாததும் அங்கு மட்டும் அபூர்வமாக நிகழ்வதுமான அந்த உலகசாதனையாகும். கால் நடைகளின் பட்டிகளிலோ தொற்று நோய் முகாம்களிலோ கூடக் காணமுடியாது—கற்பனைக்கே எட்டாததான இந்த கொடிய செயலினால் நோ

[4-ம் பக்கம் பார்க்க]

விவேகானந்த சுவாமிகள் ஜயந்தி

கல்லடி உப்போடை, "விவேகானந்த மகளிர் கழகத்தில்" (3 2-56) "சுவாமி விவேகானந்தரின் ஜயந்தி விழா" திரு ஆர். இராஜதுரை தலைமையின்கீழ் ஆரம்பமானது. தலைவரின் ஆரம்ப உரையின் பின் திரு ஜி சிவநேசன், தலைமை ஆசிரியை திருமதி எஸ். சந்திரசேகரம் ஆகியோர் சுவாமிகளது வாழ்க்கை வரலாற்றினையும், சேவைகளையும் எடுத்துப் பேசினார்கள்.

உங்களை அழகுபடுத்தியௌவனமாக்கிக்கொள்ளுங்கள்

நிக்ஸ் நரைமுடி கருக்கும் - டை

முடிகளுக்கு மிகவும் நேர்த்தியான டை உஷ்ணப் பிரதேசத்திற்குத் தக்கவாறு. கெடுதலில்லாமல செய்யப்பட்டுள்ளது இந்த 'நிக்ஸ' டை.

விலை ரூ. 1-50

'ஜல்பாரி' சந்ததைி தைலம்

கூந்தல் கருத்த, நன்கு வளருவதற்கு இன்றியமையாதது.

விலை ரூ. 1-50

கழுகுமார்க் இயற்கை - கூந்தல்

மிகவும் பிரசித்தமான இயற்கை மனித முடிகள்

ரூ. 1-00 லிருந்து 18-00 ரூ. வரை

கியூபிற் பிரேசியர்

நவீன நாகரிக முறைக்கேற்றவாறு யாவரையும் வசீகரிக்கும் தோற்றமளிக்கக்கூடிய விதத்தில் அமைந்துள்ளவை.

விலை ரூ. 2 75

கழுகு மார்க் நைலோன் கூந்தல்

மனித முடிகளை விரும்பாதவர்களுக்காகவே நாங்கள் விசேஷமாக இந்த 'நைலோன் முடிகளைத் தருவித்துள்ளோம்.

ரூ. 3 50 லிருந்து 15 00 ரூ வரை

மெர்மெய்ட் கண்மை

மோகினித் தோற்றமும், மிகுந்த குளிர்ச்சியுடன் கூடியதும், கண் இமைகளைப் பாதுகாக்கக்கூடியதுமானது

ஏக விநியோகஸ்தர்கள்:-

விசாக மால்ஸ, 19. பெங்ஷால்வீதி. புறக்கோட்டை, கொழும்பு—11.

டெலிபோன்: 7538.

(நெருப்பணைப்பு நிலையத்தருகில்)

சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டி 24.

ரொக்கப் பரிசு-ரூ 1000.00

முதலாவது பரிசு ரூ. 600-00 | இரண்டாவது பரிசு ரூ. 300-00

அதிகப்படியான விடைகள் அனுப்புபவருக்கு விசேஷ பரிசு ரூ. 100-00

முடிவு திகதி 14-3-56 பி. ப. 5 மணி

பரிசு பெற்றோர் விபரம் 25-3-56ல் பிரசுரிக்கப்படும்

சரியான விடை 18-3-56ல் பிரசுரிக்கப்படும்

பரிசு பெற்றவர்களுக்கு பரிசுத் தொகை 7-4-56ல் செக்மூலம் அனுப்பப்படும்

இடமிருந்து வலம்

1: இதை விட்டுக் குழப்பினால் மருந்தானாலும் குழந்தைகள் அருந்திவிடும்;
2: வானம்
4: இதன் பால் பிணியாளருக்கும் உகந்தது;
5: காலாற மெல்ல நடத்தல்
6: இதன் காய் கறிக்குதவும்
7: பெண்களுக்கு இதன்மேல் உள்ள மோகம் அதிகம்
8: திருச்செந்தூர்
9: பாரதத்தின் பிரதமர்
10: இதற்குபதேசம் காதில் உரைத்தாலும் அவலக் குரல் போகாதென்பது பழமொழி
11: பலம்
13: இலக்குமி
14: எந்தச் சிறிய காரியத்திற்கும் இது படுபவர்களும் உண்டு;
16: குற்றம்
17: இது வேதனை தரும்
18: அழகான பெண்கள் இதனால் செய்த சிலையைப்போன்றவர்கள் என்று புலவர்கள் வர்ணிப்பார்கள்
20: மதுரை
21: ஒப்பு
22: இது உள்ள இடத்தில் கார் ஓடாது
23: கண் மருந்து

மேலிருந்து கீழ்

1: பழங்காலத்து இராஜகுமாரர்கள் பல.........சுற்றிப் பார்த்த பின்னர் தான் பட்டந் தரிப்பார்கள்.
2: கலியாணப் பெண்ணுக்கும் மாப்பிள்ளைக்கும் இது எடுப்பது ஒரு சம்பிரதாயம்
3: சுமந்து செல்லல்
4. சிங்கோனாச் செடியின் இதிலிருந்து ''குயினின்'' என்ற மலேரியா மருந்து செய்யப்படுகிறது
5: கதிர்காமத்திற்கு அருகாமையிலுள்ள ஒரு மலை
7. பெண்களின் இது பல புலவர்களின் பாடல்களுக்கு இலக்காகியிருக்கிறது
8: அழகு பொருந்திய வளமை
10: இதைத் தலையில் வைத்து ஆடுவது ஒரு கலை
12: மாமியின் மகன்
14: காற்று வீசாவிட்டால் மரக்கிளைகள் இது அற்றுக் கிடக்கும்
15: மிளகு போட்டுத் தயாரிக்கும் இது ஜீரணசக்தியைக் கொடுக்கிறது;
19: வாழை
20: பங்கு
21: ....என்றால் கூட்டு என்று பொருள்



1 தே	ன்	■	2 ஆ	3 கா		ம்	■	4 ப	
	■	5 உ		வு	த	ல்	■		■
ம்	■	6 க	த்		ரி	■	7	டை	
■	8 செ		தி	ல்	■	9	ரு	■	■
10 க		தை	■	■	■	■	11 வ		12 மை
13	மை	■	14			15 ர	ம்	■	
க	■	16 வ		■	■		■	17	து
ம்	■	■	18 த		19 க	ம்	■	■	ன
■	20	ட	ல்	■		■	21	ம	
22	று	■	■	23	லி		க	ம்	■

பிரவேசக் கட்டணம் சதம் 50



1 தே	ன்	■	2 ஆ	3 கா		ம்	■	4 ப	
	■	5 உ		வு	த	ல்	■		■
ம்	■	6 க	த்		ரி	■	7	டை	
■	8 செ		தி	ல்	■	9	ரு	■	■
10 க		தை	■	■	■	■	11 வ		12 மை
13	மை	■	14			15 ர	ம்	■	
க	■	16 வ		■	■		■	17	து
ம்	■	■	18 த		19 க	ம்	■	■	ன
■	20	ட	ல்	■		■	21	ம	
22	று	■	■	23	லி		க	ம்	■

இரண்டு கட்டங்களுக்கும் பிரவேசக் கட்டணம் ரூபா 1-00 செலுத்தினால் இந்த மூன்றாவது விடையை இனமாக அனுப்பலாம்.



1 தே	ன்	■	2 ஆ	3 கா		ம்	■	4 ப	
	■	5 உ		வு	த	ல்	■		■
ம்	■	6 க	த்		ரி	■	7	டை	
■	8 செ		தி	ல்	■	9	ரு	■	■
10 க		தை	■	■	■	■	11 வ		12 மை
13	மை	■	14			15 ர	ம்	■	
க	■	16 வ		■	■		■	17	து
ம்	■	■	18 த		19 க	ம்	■	■	ன
■	20	ட	ல்	■		■	21	ம	
22	று	■	■	23	லி		க	ம்	■

பிரவேசக் கட்டணம் சதம் 50

பெயர்...

விலாசம்...

....

அனுப்பும் மொத்த கூப்பன்களின் தொகை....................

கட்டணத்தின் தொகை ரூ......... ச.........

போஸ்டல் ஆடர் வவுச்சர் இலக்கங்கள்............

போட்டி அனுப்பும் விலாசம்:

சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டி 24,
த. பெ. இ. 1183, கொழும்பு-12

ஒரு கூப்பன் மட்டுமே நிரப்பியிருந்தாலும் இரண்டு [illegible] முழுமையாக அனுப்பப்படவேண்டும்;

வடபகுதியில் திரிசிங்கள பெரமுனை!

திரி சிங்கள ஜாதிக பெரமுன தன் அபத்தப் பிரசார வெளியீடுகளையெல்லாம் இப்போது வடபகுதியை நோக்கிப் பறக்க விட்டிருக்கிறது. தமிழ் மக்களையும் அவர்களது உரிமைப் போரையும் வாயில் வந்தபடியெல்லாம் திட்டி வம்புச் சண்டைக்கு அழைக்கும் அப்பிரசுரங்கள் கல்லூரிகள், பொது நிலையங்கள், மற்றும் தனிப் பட்ட நபர்கள் ஆகியோருக்கெல்லாம் அடிக்கடி தபால் மூலம் வந்த வண்ணமிருக்கின்றன.

சமீபத்தில் இங்குள்ள கல்லூரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கும் ''திரி சிங்கள ஜாதிக பெரமுன வர்த்தமானி'' என்ற சிங்களப் பிரசுரம் முதலில் இருந்து இறுதிப் பக்கம் வரை ஒரே அபத்தக் களஞ்சியமாக விளங்குகிறது. தமிழன் கடையில் பொருட்களை வேண்டாதே தமிழனோடு நட்புக் கொள்ளாதே என்ற கட்டளைகளோடு கூடிய அப்பத்திரிகையில் ஒரு பௌத்த பிக்கு வெளியிட்ட கவிதையொன்று பறை ஜாதித் தமிழனுக்கு மொழியுரிமை வேண்டுமா என்று கேட்கிறது. பக்கத்துக்குப் பக்கம் தமிழனை இழித்துரைக்கும் மேற்படி பிரசுரமானது மக்கள் வெறுப்பைப் பெற்றிருப்பதோடு அரசாங்கத்துக்குத் திருப்பி அனுப்பப் பட்டும் வருகிறது.

தங்கள் சங்கத்தில் உறுப்பினராகச் சேர்ந்து இலங்கை மாதாவை மீட்க ஒத்துழைக்கும்படி உறுப்பினர் விண்ணப்பப் பத்திரங்களும் தமிழ் மக்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இந்தப் பைத்தியகாரச் செயலையெண்ணித் தமிழ் மக்கள் அதிருப்தி கொண்டுள்ளனர்.

வேண்டுமென்றோர் மீது இந்த அசம்பாவித செயலைத் தடைசெய்வதில் அரசாங்கம் ஏதாவது நடவடிக்கையெடுக்குமா எனக் கேட்கப்படுகிறது;

---

136 நோயாளிகளுக்கு . . .

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

யாளிகள் போதிய கவனிப்பின்றி மரண வேதனையை அனுபவிக்கிறார்களென்பது இன்னும் சுகாதார வைத்திய அதிகாரிகளின் இதயங்களைத் தாக்கவில்லை;

சமீபத்தில் பத்திரிகைகள் செய்த கிளர்ச்சியினால் மேலதிகாரியிடமிருந்து வந்த கடிதமொன்றில் நர்சுகளின் தொகை குறைவாயிருப்பதற்குக் காரணம் காட்டுமாறு கேட்கப்பட்டிருந்ததாம். அது எப்படி சமாளிக்கப்பட்டதோ தெரியவில்லை.

மனித சக்திக்கே மீறிய அளவில் ஒரு நர்ஸ் 136 நோயாளிகளைப் பராமரிக்க வேண்டிய நிர்ப்பந்த மேற்பட்டிருப்பதற்கு காரணம் யாராக இருக்கக் கூடும்: ஸ்தல அதிகாரிகளா அல்லது மேலிடமா என்பதைக் கண்டுபிடித்து அதை நிவர்த்திப்பது அவசியமாகும்.

அரசாங்க விளம்பரம்

கிருஷிக் இலாகா

No. 381. யாழ்ப்பாணம் திண்ணவேலி பெண்கள் கிருஷிக பாடசாலையில் பயிற்சி பெற விரும்பும் தமிழ் பேசும் மாணவிகளிடமிருந்து மனுப் பத்திரங்கள் 15-3-56 நண்பகல்வரையும் யாழ்ப்பாணம் வடபகுதி கிருஷிக உத்தியோகத்தரால் ஏற்றுக்கொள்ளப்படும். முழு விபரங்களும் அவரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

எனக்கு ஆசனம் தேடும் பிரச்னையே

ஐ. மு. முறிவுக்குக் காரணமல்ல!

திரு நடேசனின் அறிக்கையே இந்த அபாண்டத்தை மறுக்கிறது

தேர்தல் ஒப்பந்தத்திற்கு வரமறுத்ததின் மூலம் தமிழ் பேசும் இனத்திற்கேற்படவிருந்த பேராபத்தைத் தவிர்த்துள்ளோம்

திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் அறிக்கை

“திரு செல்வநாயகத்திற்கு பாராளுமன்றத்தில் ஸ்தானம் பெற்றுக்கொடுக்கும் பிரச்னையிலேயே ஐக்கிய முன்னணி முறிந்தது என்ற பொய்யை திரு நடேசனின் அறிக்கை மறுத்துள்ளது குறித்து அவருக்கு நன்றி கூறுகிறேன்.

“ஐக்கிய முன்னணி நிறுவி அதன் மூலம் பாராளுமன்றத்திற்கு மீண்டும் வருவதே யு. என். பி. மாஜிதமிழ் அங்கத்தவர்களின் ஒரே ஒரு நோக்கம்.

“தமிழ் மக்களுக்கு ஏற்பட இருந்த பேராபத்தை தமிழரசுக்கட்சி தவிர்த்துள்ளது.”

இவ்வாறு தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் திரு சு. நடேசனுக்கு பதிலளிக்கு முகமாக விடுத்த அறிக்கை ஒன்றில் கூறுகிறார்.

திரு செல்வநாயகத்தினது அறிக்கையின் முழு விபரமும் பின்வருமாறு:

திரு எஸ். ஜே. வி. செல்வநாயகத்திற்கு பாராளுமன்றத்தில் ஒரு ஸ்தானம் பெற்றுக்கொடுக்கும் பிரச்னையே ஐக்கிய முன்னணியின் முறிவுக்குக் காரணம் என்று சிலர்செய்த விஷமத்தனமும் —அபாண்டமானதுமான பொய்ப்பிரச்சாரத்திற்கு திரு நடேசனின் நீண்ட அறிக்கை மறுப்புக் கூறும் விதத்தில் இருப்பது குறித்து நான் அவருக்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறேன்.

சமஷ்டி வாதிகளாகிய நாம் கொள்கை அடிப்படையில்லாத வெறும் தேர்தல் தவிர்ப்பு ஒப்பந்தங்களுக்கு தயாராக இல்லை; ஏனையோர் ஒருவருடன் ஒருவர் போட்டியைத் தவிர்க்கும் தேர்தல் ஒப்பந்தத்திற்கல்லாது கொள்கை அடிப்படையில் ஒரு ஐக்கிய முன்னணி நிறுவ தயாராக இல்லை. இதையே திரு நடேசனின் அறிக்கை தெட்டத் தெளிவாக்குகிறது.

தமது கொள்கைகள் படுதோல்வி கண்டிருந்தபோதிலும் கூட ஒரு ஐக்கிய முன்னணியை நிறுவி அதன் திரைமறைவில் பாராளுமன்றத்திற்குள் மீண்டும் வருவதே யு. என். பி. மாஜித் தமிழ் அங்கத்தவர்களின் ஒரே ஒரு நோக்கம்; இந்த குற்றச்சாட்டை பகிரங்கமாகவே அவர்கள் மீது சுமத்துகிறேன். இந்த எனது குற்றச்சாட்டை ஆதாரமற்றது, நியாயமற்றது என்று அழைப்பதைத் தவிர இது ஏன் ஆதாரமற்றது? ஏன் நியாயமற்றது என்று விளக்கம் தர திரு நடேசன் தவறிவிட்டார்.

எமது கட்சியுடன் ஒரு ஐக்கிய முன்னணிக்கு வர திருவாளர்கள் சுந்தரலிங்கமும் பொன்னம்பலமும் சென்ற வருடம் நடத்திய பேச்சு வார்த்தைகள் பற்றி திரு நடேசன் குறிப்பிட்டுள்ளார். இது இவருக்கு எந்த வகையில் சாதகமாக இருக்கிறதோ எனக்குத் தெரியாது. எனது குற்றச்சாட்டிற்கும் கடந்த வருடம் நடந்த பேச்சு வார்த்தைகளுக்கும் எவ்விதசம்பந்தமுமில்லை. யு. என். பி. தமிழ் அங்கத்தவர்கள் ராஜினாமாச் செய்த பின் கடந்த ஜனவரியில் நடந்த பேச்சு வார்த்தைகளைப் பற்றியே நான் பிரஸ்தாபித்தேன்.

சுகவீனம் என்ற காரணம் சொல்லி ஜனவரி 18 ந்தேதி திரு தம்பியையா இல்லத்தில் நடந்த மகாநாட்டிலிருந்து கூட்டத்தில் கலந்து கொண்ட மற்றவர்களுக்குக்கு முன்னதாகவே திரு நடேசன் சென்றுவிட்டார். எனவேதான் இரண்டு நிபந்தனைகளின் அடிப்படையிலேயே சமஷ்டி எம். பிக்கள் மகாநாட்டிற்கான அழைப்பை ஒப்புக்கொள்ள இசைந்தார்கள் என்பது அவருக்குத் தெரியாமல் இருக்கலாம்.

ஒரு ஐக்கிய முன்னணிக்கு வருவது பற்றி சமஷ்டி எம். பிக்கள் தமது கட்சியின் அனுமதியைப் பெற்றிருக்கவில்லை என்றும், மகாநாடு குறுகிய கால அறிவித்தலின் பேரிலியே கூட்டப்படுவதால் இது சாத்தியப் படவில்லை என்றும் அன்றைய கூட்டத்தில் பிரத்தியட்சமாக தெளிவாக்கப்பட்டது. ஒரு சமஷ்டி ஆட்சியை நிறுவுவது பற்றிய தமது மூல இலட்சியத்திலிருந்துசமஷ்டிவாதிகள்இம்மியளவும்பிறளவில்லை என்றும் அன்று அழுத்தமாக எமது பிரதிநிதிகள் கூறினார்கள். என்றாலும் அடுத்த நாள் சைவமங்கையர் கழகத்தில் நடந்தமகாநாட்டில் சமஷ்டி ஆட்சிபற்றிய தனது கொள்கையை சமஷ்டிக் கட்சி மாற்றிக்கொண்டதாகவும், அதற்குப் பதிலாக தனி நாடு கோரிக்கையை ஏற்றுக் கொண்டிருப்பதாகவும் சில பேச்சாளர்கள் கூறினார்கள். இது மகாநாட்டிற்காக அனுப்பப்பட்ட அழைப்பில் உள்ள ஒரு வசனத்தை தவறுதலாக வாசித்ததின் விளைவு என்றே சொல்ல வேண்டும். எனவேதான் அபிப்பிராய பேதங்கள் நிவர்த்தி செய்யப்படு மட்டும் அதே பாணியில் நடக்கும் மகாநாடுகளில் கலந்து கொள்வதில்லை என்று கூறி தமது கையொப்பங்களை சமஷ்டிக் கட்சியின் இரு பாராளுமன்ற அங்கத்தவர்களும் வாபஸ் பெற்றார்கள்; கையெழுத்துக்கள் வாபஸ் பெறப்பட்டது கையெழுத்திட்ட மற்றவர்களுக்கு உடனேயே அறிவிக்கப்பட்டது.

இந்த மகாநாடுகளில் கட்சிஅடிப்படையில் கலந்து கொண்டவர்கள் சமஷ்டிவாதிகள் மட்டும்தான்; தமிழ் காங்கிரஸை பிரதிநிதித்துவப்படுத்திய திரு. பொன்னம்பலத்தைத் தவிர மற்றவர்கள் அத்தனைபேரும் தனிப்பட்டவர்கள். மகாநாட்டில் எடுக்கக்கூடிய எந்த முடிவும் சமஷ்டிக் கட்சியை ஸ்தாபனரீதியாகவும், மற்றவர்களை தனிப்பட்ட ரீதியாகவுமே கட்டுப்படுத்தும்; ஒரு திட்டவட்டமான கொள்கையையுடைய சமஷ்டிக் கட்சியைப் பொறுத்த மட்டில் தேர்தல் என்பது தனது அபேட்சகர்களை தேர்தலில் வெற்றிபெற வைப்பதற்கும், தனது இலட்சியமான சமஷ்டிக் கொள்கையை மக்கள் ஏற்றுக்கொள்கிறார்களா, புறக்கணிக்கிறார்களா என்பதை அறிவதற்குமான ஒரு சாதனமாகவுமே கருதுகிறது.

“தேர்தல் போட்டியை தவிர்க்கும் ஒரு உடன்பாட்டை ஏற்றுக்கொள்வதென்றால் மூலாதாரமான ஒரு கொள்கையைப் பொறுத்து மக்களின் தீர்ப்பை அறிய தேர்தலை நாம் உபயோகப் படுத்தவில்லை என்று அர்த்தம். என்றாலும் ஐக்கிய முன்னணிக்கான யோசனையை எமது கட்சி ஒப்புக்கொள்வதற்கோ, புறக்கணிப்பதற்கோ முன் அதுபற்றிய சாத்தியக்கூறுகளை பரிசீலிக்க நாங்கள் விரும்பினோம். இந்தக் காரணத்தி[illegible] நாம் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொண்டோம். ஐக்கிய முன்னணி நிறுவுவது தமிழ் பேசும் இனத்தின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்றால் அதில் சேர்ந்து கொள்ள நாம் என்றும் தயாராக இருக்கிறோம்.

“இந்த மகாநாடுகளில் ஒரு தீர்க்கமான முடிவு எடுக்கும்வரை சமயோசிதமான முடிவுகளையே எடுக்க வேண்டியிருந்தது. அத்தகைய முடிவுகள் பரீக்ஷார்த்தமானவையாகவே இருந்தன. இரு பகுதிகளும் சில பிரச்னைகளின் தேவையைப் பொறுத்து இஷ்டம்போல தமது அபிப்பிராயத்தை அவ்வப்போது திருத்திக் கொண்டன. உதாரணமாக பெப்ரவரி 1ம் தேதி அறிக்கை வெளியிடப்பட்டதும், தமிழுக்கும் சிங்களத்திற்கும் சம அந்தஸ்தளிக்கவும், தமிழ் பிரதேசங்களில் சிங்களக்குடியேற்றத்தை நிறுத்தவும் மறுக்கும் எந்த அரசாங்கத்திற்கும் ஐக்கிய முன்னணி ஆதரவளிக்கக்கூடாது என்பதாக முன்னைய தீர்மானத்தை மாற்றியமைக்குமாறு யு. என். பி. மாஜி அங்கத்தவர்கள் சிலர் கேட்டுக் கொண்டார்கள். பேச்சு வார்த்தைகள் நடந்துகொண்டிருந்தபோது சில பிரச்னைகளில் ஒரு முகப்பட்ட தீர்மானத்திற்கு வர மகாநாடு தவறியபோதெல்லாம் அந்தப் பிரச்னைகளை நழுவவிட்டு மற்ற பிரச்னைகளே ஆலோசனைக்கு எடுக்கப்பட்டன.

ஒரே ஜாபிதா அபேட்சகர்களைப்பற்றி திரு வன்னியசிங்கம் கட்சிக்கு அறிக்கை செய்யும்போது கூறியதாவது:

“சாத்தியப்படும் பட்சத்தில் ஒரே தொகுதிக்கு ஒரே அபேட்சகரை நிறுத்துவதை நான் கொள்கை அடிப்படையில் ஏற்றுக்கொண்டேன். அபேட்சகர்களைத் தெரிந்தெடுக்கும் ஸ்தாபனத்தைப் பற்றிய பிரச்னை எழுந்தது. ‘தேசிய மகாசபை’, ‘பொதுச்சபை’, ‘செயற் கமிட்டி’ பற்றியெல்லாம் குறிப்பிடப்பட்டது. இந்த ஸ்தாபனங்கள்மூலம் அபேட்சகர்களை தெரிந்தெடுப்பது குறித்து எனது அபிப்பிரா[illegible] கேட்டுக் கொண்டேன், இந்த யோசனையில் சிக்கவைக்கும் பதங்கள் உண்டென்றும், இதுபற்றிய முழு விபரமும், அதாவது இந்தச் சபைகளை எப்படி நிறுவுவது, யார் இவற்றை நியமிப்பது அல்லது தேர்ந்தெடுப்பது என்பனவற்றைப் பற்றிய முழு விபரமும் இல்லாதிருக்கு மட்டும் இது சம்பந்தமாக விவாதிக்க முடியாதென்று நான் மறுத்துவிட்டேன். பெப்ரவரி 2ந் தேதி அதிகாலை 2 மணிக்கு இருந்த நிலை இது.

இதன்பின் திரு: வன்னியசிங்கம் தனது கட்சிச் சகாக்களுடன் கலந்தாலோசித்தார். ‘தேசிய மகாசபை’, ‘பொதுச்சபை’, ‘செயற் கமிட்டி’, ‘முதியோர் சபை’ என்ற பதங்கள் வெறும் சொல்லடுக்குகள் என்பதும் இவை நடைமுறைக்கு முற்றிலும் பொருந்தாதவை என்பதும் இந்தக் கவசங்களுக்குப் பின்னால் திரு நடேசனும் அவரது சகாக்களும் பதுங்கிக் கொள்ள முனைகிறார்கள் என்பதும் தெளிவாகியது.

இந்த பெருமை தங்கிய சபைகளின் அங்கத்தவர்கள் யார்? இவர்களை தேர்ந்தெடுப்பது எப்படி? யார் இவர்களைத் தேர்ந்தெடுப்பது? தேர்தலுக்கான விதிகள் என்ன? வாக்காளர் ஜாபிதாவை தயாரிப்பது எப்படி? எவ்வளவு காலத்திற்குள் இந்த சபைகளை நிறுவ முடியும்? ஒரே அபேட்சகர்கள் ஜாபிதா அடிப்படையில் அபேட்சகர்களை பொறுக்கி எடுப்பதற்கு மேற் கூறிய ஸ்தாபனங்களை நிறுவவேண்டும் என்று கோரியவர்கள் இந்த உசிதமற்ற ஆலோசனைகள் மூலம் பொது மக்களையும், சமஷ்டிக் கட்சியையும் ஏமாற்றவே முனைகிறார்கள் என்பதை மேற்கண்ட கேள்விகள் ஸ்பஷ்டமாக்குகின்றன.

தீர்க்கமான ஒரு முடிவுக்கு வரும் நோக்கமுள்ள எந்த மகாநாட்டிலும் எடுத்துக் கொள்வதற்கு இந்தப் பிரச்னைகளை அருகதையற்றவை என்று பெப்ரவரி 4-ந் தேதி நடந்த கூட்டத்தில் நாம் தெரிவித்தோம், இதைத்தான் திரு. நடேசன் “முன்னணி மாற்றம்” என்று அழைத்துள்ளார்.

“இவ்வாறு கூறுவது உண்மைக்கு முற்றிலும் புறம்பானது. திருப்திகரமாக நடைமுறைக்குக் கொண்டுவர முடியும் பட்சத்தில் கொள்கை அளவில் ஒரே அபேட்சகர் ஜாபிதாவை ஏற்றுக் கொள்ள முடியும்” என்றே திரு. வன்னியசிங்கம் கூறினார் ஒரு ஐக்கிய முன்னணியை சாத்தியப்பாடு உடையதாக்குவதற்காகவா அல்லது உபாய நோக்கோடா இந்த சபைகள் பற்றி ஆலோசனை தெரிவிக்கப்பட்டது என்பதை யாரும் இப்போது புரிந்து கொள்ள முடியும். இந்த ஆலோசனைகளின் வெறுமை அம்பலமாக்கப் பட்டதும் ஒரே அபேட்சகர் ஜாபிதா என்ற பேச்சிற்கே இடமில்லாது போகிறது.

இதற்கிடையில் ‘முதியோர் சபையி’ல் ஒரு தலையட்சமுள்ள நபர்களை நிரப்புவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வந்தன என்பது பெப்ரவரி 1-ந் தேதி அளவில் தெரியவந்தது. திரு. வன்னியசிங்கம் இது பற்றி கூறியதாவது: “முதியோர் சபையில் பணியாற்றுமாறு எனக்கு தெரியாமலே பலருக்கு அழைப்புகள் அனுப்பப்பட்டன. மகாநாட்டை கூட்டிய சிலரின் இந்தச் செய்கையை நான் வன்மையாக கண்டித்தேன். தவறுதலாக நடந்து விட்டதாக உடனே சமாதானம் சொல்லப்பட்டது”.

வாக்காளர் முன் சமர்ப்பிப்பதற்கு சமஷ்டிக் கட்சிக்கு உருப்படியான ஒரு திட்டம் இருக்கிறது. என்றாலும் வேறெந்த ஆலோசனையையும், அது தமிழ் பேசும் மக்களின் நலனுக்கு உடந்தையாக இருக்கும் பட்சத்தில் அதை பரிசீலிக்க நாம் தயாராக இருந்தோம். ஒரே அபேட்சகர் ஜாபிதாவை வகுக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் இல்லை என்பதே பெப்ரவரி 4-ந் தேதி நடந்த மகாநாட்டில் தெளிவாகியது. எனவே எல்லா ஸ்தானங்களையும் பகிரங்கமான போட்டிக்கு விட்டுவிடுவதும், தமது பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கும் உரிமையை வாக்காளர்களுக்களிப்பதுவுமே அடுத்து எமக்குமுன் இருந்த ஒரே ஒரு மார்க்கம்.

இந்த எமது ஆலோசனையை திரு நடேசனும் அவரது சகாக்களும் நிராகரித்தார்கள் பெருவாரி தொகுதிகளின் பிரதிநிதிகளை பொறுக்கியெடுக்கும் உரிமையை தமது கைக்குள் எடுத்துக்கொள்வதற்கு மகாநாட்டைக் கூட்டியவர்களுக்கு எந்தவிதமான உரித்தும் கிடையாது. அடுத்த பொதுத் தேர்தலில் வெற்றி பெறும் சகல அங்கத்தவர்களுடனும் ஒன்று சேர்ந்து ஒரு ஒப்புக்கொள்ளப்பட்ட திட்டத்தின் அடிப்படையில் உழைப்பதற்கு எமது கட்சி தயாராக இருக்கிறது என்று தெரிவித்தோம்.

இந்த ஆலோசனையை திரு நடேசன் “மோசமானது” என்று கூறுகிறார். ஆனால், தமது கொள்கைகள்மூலம் தமிழ்ப் பேசும் மக்களை, இன்று ஏற்பட்டுள்ள மோசமான நிலைக்கு இழுத்துச் சென்ற அதே அங்கத்தவர்களை ஒரே தேர்தல் ஜாபிதா மூலம் தமிழ்ப் பேசும் மக்களின் விருப்பத்திற்கெதிராக அவர்கள்மீது திணிப்பதே உண்மையில் மோசம் நிறைந்தது.

தேர்தலில் போட்டியிடுவதில்லை என்ற உடன்பாட்டை ஏற்றுக்கொள்ள மறுத்ததின் மூலம் தமிழ் மக்களுக்கு ஏற்படவிருந்த பேராபத்தை எமது கட்சி நீக்கியுள்ளது. இந்த உண்மையை நாங்கள் தமிழ்ப் பேசும் மக்கள்முன் சமர்ப்பிக்கின்றோம்.

“ரெனி”

மூளைப் பலவீனம், நரம்புப் பலவீனம், மறதி, மயக்கம், நித்திரை பங்கம், இந்திரிய ஸ்கலிதம், மூலச்சூடு, திரேக வரட்சி, உஷ்ணம், ஜுரம், தடிப்பு, சொறி, உடம்பு கைகால் நடுக்கம், இருதயத் துடிப்பு, பித்த மயக்கம், வயிற்று நோவு, இரத்தக் கொதிப்பு போன்ற நோய்களை நீக்கி இரத்தத்தையும் சுத்திசெய்து தாதுவையும் கட்டுப்படுத்தும்.

கிடைக்குமிடம்:

சென்ற் மேரி
வைத்தியசாலை
101, செட்டியார் தெரு,
கொழும்பு.

9 ஓய்வு

(5)

மரணத்தின் வாயிலில்.....

"சாந்தி"

சுகுமார் சொல்லுகிறன்

சுகுமார்

உன்னுடையவும் அப்பாவுடையவும் மனதை மேலும் வருத்தவேண்டாம் என்று என்னை அடக்கி வாழ்ந்தேன். இனிமேலும் அது முடியாதபடியால் இந்த முடிவுக்கு வந்துவிட்டேன்.

என்னுடைய மனப்போக்கு எனக்கே புரியவில்லை. நான் பிறந்தேதிருக்கக்கூடாது நான் பிறந்தபடியால் எனக்கு மட்டும் இல்லை உனக்கும் அப்பாவிற்கும் வற்றாத துன்பத்தின் கேணியாக நானிருந்தேன்.

என்னுடைய மனம் ஏன் இப்படிப் பேதலிக்கிறது? சேகர் தூக்குத் தண்டனை அடைந்ததிலிருந்து என் மனம் பேயாட்டம் ஆடத் தொடங்கி விட்டது. உன் மேல் குற்றஞ் சாட்டித் தூக்கு மேடைக்கு அனுப்பும்படி செய்துவிட்டு வந்த போதும் என் மனம் இன்று கலங்கியிருப்பதுபோல் கலங்கவில்லை. சேகரிடம் எனக்குள்ள அனுதாபம் எனக்கே புரியவில்லை.

கஷ்டப்பட்டு என்மனதை அடக்கப்பார்த்தேன் முடியவில்லை. சேகர் எனக்கிழைத்த தீமைகளையும் நீ எனக்கு ஆற்றிய தியாகங்களையும் எதிரெதிராக வைத்துப் பார்ப்பேன். ஆனல் இவைகளும் என் மனதை நிலைப்படுத்தச் சக்தியற்று விட்டன. என்னுடைய மனம் செல்லும் திசையை அறிந்தபோது எனக்குப் பெரும் திகிலேற்பட்டது:

சுகுமார்

நாட்கள் செல்லச் செல்ல, சேகர் தண்டனை அடையப் போகும் நாள் நெருங்க என் உள்ளம் பெருஞ் சூறாவளியில் அகப்பட்ட இளங்கொடி போலச் சுழன்று ஆடினது. நீ என்னைத் தனிமையில் விட்டுச் சென்றது என் சிந்தனைகளின் விசார ஆட்டத்தில் என்னைப் பணிய வைத்தது;

சேகரை நேருக்கு நேர் காணவேண்டும். அவரிடம் இருந்து நான் பிரிந்து விடவில்லை என்று அவருக்குச் சொல்லவேண்டும். சேகரின் அந்த அணைப்பில்—இதழ்களின் உறவாடலில் எனக்குச் சாந்தியேற்படுமா என்று பார்க்கவேண்டும்.

பின்பு......! ஆம்! பின்பு இறந்து விடவேண்டும். இந்த முடிவுடன் நான் வீட்டைவிட்டுச் செல்லுகிறேன்.

என்னுடைய முடிவுக்கு யாரும் பொறுப்பாளியல்ல. மீனுவிடம் எனக்குக் கொஞ்சங்கூடப்பொறுமை கிடையாது. அந்தத் தியாகச் சுடர் அணைந்து விடாது காப்பாற்ற முடியுமானல் கட்டாயம் காப்பாற்று.

நீ என்னிடம் அன்பு வைத்தபடியால் உன் வாழ்வே பாலைவனமாகிவிட்டது. நீ எனக்காற்றிய ஒவ்வோர் உதவிக்கும் நன்றி செலுத்த நான் விரும்புகிறேன்.

என்னை மன்னித்து விடும்படி நான் கேட்டாலும் நீ மன்னிப்பாயா? நீ தான் மன்னித்தாலும் சமூகம் மன்னிக்குமா?

சுலோசனு:

கடிதத்தை வாசித்து முடிந்ததும் என் மனதில் சுலோ மீனுவைப்பற்றியெழுதியதுதான் உறுத்தியது. ''அந்தத் தியாகச் சுடர் அணைந்து விடாது காப்பாற்று'' என்று சுலோ கேட்டிருக்கிருள். அது என்னுல் முடியுமா? அறையில் மாட்டப்பட்டிருந்த மீனுவின் படத்தை நோக்கினேன். எங்கே பார்க்க முடிகிறது. பாழும் கண்ணீர் பார்வையை மறைந்துவிட்டதே

டெலிபோன் மணியடித்தது எடுத்து பதில் கொடுத்தேன். சுலோ ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் இருப்பதாக மாமா அறிவித்தார். அவருடைய குரலில் தொனித்த பரபரப்பும் பதட்டமும் எனக்கு வேதனையைக் கொடுத்தது. என்னை உடனே வரும்படி மாமா சொன்னர். சுலோவுக்காக இல்லாவிட்டாலும் மாமாவிற்காக நான் போக வேண்டும் என்று தோன்றியது

வெலிக்கடை ஜெயிலுக்கு அருகில் உள்ள 'கமல்' பார்க்கில் ஓர் பெஞ்சின் மீது சுயநினைவற்றிருந்த சுலோவை யாரோ ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றிருக்கிருர்கள். அவளுக்கருகில் ஓர் 'சியனேட்' புட்டியும் ஓர் தோற்பையும் இருந்தனவாம், அதிலிருந்து அவள் நஞ்சு குடித்திருக்கிருள் என்று அறிந்தவுடன் மாமாவின் டெலிபோன் இலக்கத்தை யறிந்து அவருக்குத் தகவல் கொடுத்திருக்கிருர்கள்.

நான் அங்கு சென்றபோது சுலோ என்னை நிமிர்ந்து பார்த்தாள் அவளுடைய கண்கள் நீரைக் கக்கின. ஆனல் ஏன் என்னுடைய கண்கள் இப்படி வரண்டு போய்விட்டன என்று நான் என்னையே கேட்டேன்.

அருகில் உள்ள டெலிபோன் மணியடித்தது. எழுந்துரிசீவரை எடுத்தேன். ராமமூர்த்தியின் குரல் தெளிவாகக் கேட்டது. மீனு இருக்கும் இடத்தை அவன் கண்டறிந்து விட்டான்: நான் உடனே அங்கு வருவதாகவும் அவனை அங்கேயே நிற்கும்படியும் சொல்லிவிட்டு நான் அவசரமாக வெளியேறினேன் மாமா என்னை ஒருதினுசாகப்பார்த்தார்.

நானும் ராமமூர்த்தியும் அச்சிறிய வீட்டை அடைந்த போது ஒரு பெருங்கூட்டமே அங்கு கூடியிருந்தது. வண்டியை விட்டிறங்கிக் கூட்டத்தில் ஒரு பையனைக்கூப்பிட்டு ''மீனு இங்கேதான் இருக்கிருளா?'' என்று கேட்டேன். அவன் கண்களைக் கசக்கியபடி ''ஆமா, மீனு அக்கா படுத்த படுக்கையாய் இருக்கு. அவள் படும் வேதனையைக் காணச் சகிக்கல்லே'' என்று விக்கல்களுக்கிடையில் சொன்னன்: சோகமே உருக்கொண்டு செயலற்று நின்ற அந்தக் கூட்டத்தை த[illegible] கொண்டு அவசரமாக உள்ளே சென்றேன்:

இளைத்துத் துரும்பாகக் கட்டிலில் துவண்டு போயிருந்த மீனுவைக் கண்டது! 'ஓ' வென்று கதறவேண்டும் போலிருந்தது. நெஞ்சின் அடியிலிருந்து ஏதோ ஒன்று எழுந்து தொண்டையில் தடக்கிக் கொண்டது மீனுவின் கட்டிலில் கைகளை ஊன்றியபடி குனிந்து அவள் முகத்தை உற்று நோக்கினேன். இமைகள் லேசாக மூடியிருந்தன ''மீனு!'' என்று குரல் கொடுத்தேன்: கண்களைத் திறந்து என்னைப் பார்த்தாள்; இமைகள் படபடத்தன. கண்களைக் கசக்கி விட்டு அகலவிரித்த விழியால் என்னை விழுங்கி விடுபவள் போல் நோக்கினுள். எங்கிருந்தோ ஓர் தெய்விகக் களை அவள் முகத்தில் படர்ந்தது. காற்றில் மிதந்து நெற்றியில் தவழ்ந்த அவளுடைய நீண்டமயிரை ஒதுக்கிவிட்டு அவள் நெற்றியில் உள்ளங்கையை வைத்து அழுத்தினேன். எலும்புபோல மெலிந்திருந்த தன் கைகளால் நெற்றில் அழுத்தப்பட்டிருந்த என் கையை லேசாகப் பற்றியவாறு சிரித்தாள். ஏதோ ஓர் பெரும் பொக்கிஷத்தை அடைந்துவிட்ட திருப்தி அவள் கண்களில் ஒளியிடடது.

மீனு

மீனுவை லேசாக ஏந்தி மார்புடன் அணைத்துத் தூக்கிக்கொண்டு வண்டியை நோக்கி நடந்தபோது, புத்தம்புது மலரினுல் செய்த மாலையை அணிந்து பவனி வருவதாக ஓர் பிரமை ஏற்பட்டது. என்னைச்சுற்றிலும் கண்கள் கலங்க ஏங்கிநின்ற ஏழை மக்களைத் திரும்பிப் பார்த்தேன். மீனுவிற்காக அழ எத்தனைபேர் இருக்கிருர்கள் மீனு யார் யாருடன் பழகுகிருளோ அவர்கள் எப்படிப்பட்டவர்களானுலும் அவர்களுடைய உள்ளங்களில் புகுந்து விடுகிருள். சுலோசனு மீனுவின் அன்பில் பிணைக்கப்பட்டிருந்தாள். சுலோ கடிதத்தில் எழுதியிருந்தது ஞாபகத்திற்கு வந்தது. மீனுவைக் காப்பாற்ற என்னுல் முடியுமா? மீனுவின் முகத்தைப் பார்த்தேன். இளநகை பூத்தவாறு ஓர்சிறு குழந்தைபோல என் கழுத்தைவளைத்து என்முகத்துடன் தன் முகத்தைச் சேர்த்து ஒருக்களித்து போயிருந்த அவள் தோற்றம் என் நெஞ்சைத்தொட்டது:

இடையில் ஓர் [illegible] நான் அப்படித் தூக்கிச் செல்லுகிறேன் என்ற எண்ணம் எழுந்தது. கவலையற்றுத் துவண்டு சாய்ந்திருந்த மீனு என் குழந்தைபோலவே தான் காணப்பட்டாள்.

ஆஸ்பத்திரியில் மோட்டாரை நிறுத்திவிட்டு டாக்டரிடம் சென்றேன். மீனுவை அங்கு சேர்ப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துவிட்டு வண்டியை நோக்கி வந்தேன்: மீனுவைத் தூக்கிச் செல்வதற்காக என் பின்னுல் கொண்டுவரப்பட்ட ''ஸ்ரெச்சரை''ப் பார்த்துவிட்டு அந்நியரைக் கண்டு மிரண்ட குழந்தை எப்படித் தாயிடம் சென்று அணைந்து கொள்கிறதோ அப்படி என் கைகளைப் பற்றிக்கொண்டாள். அவளுடைய விருப்பத்தை அறிந்து நானும் விஷமமாய்ச் சிணுங்கிக் கொண்டிருந்த அவள் உதடுகளைக் கொஞ்சிவிட்டு மீண்டும் என் கைகளில் ஏந்தியபடி 'வார்ட் அறையை' நோக்கிச் சென்றேன்.

என்னை மீனுவிற்குத் துணையாக இருக்க விட்டுவிட்டுச் சென்ற ராமமூர்த்தி அடுத்த நாள் காலையில் சரளாவுடன் வந்து சேர்ந்தான். மீனுவைப் பார்த்த சரளா விம்மி விம்மி அழுதாள், இதுவரை நெஞ்சில் அடைபட்டிருந்த துக்கம் மேலெழுந்து விம்மலும் அழுகையுமாக என்னை வருத்தியது. தேம்பித் தேம்பி அழும் சரளாவைப் பார்க்கச் சகிக்காமல் நான் வெளியே சென்றேன்.

''சுகுமார்! சுலோவின் நிலைமை படுமோசமாக இருக்கிறது. அவள் பிழைக்கமாட்டாள் நீ அவள் இறக்குமட்டும் அவளுடன் அவசியம் இருக்க வேண்டும்'' என்று ராமமூர்த்தி என்னிடம் சொன்னன். நான் வெறுமனே அவனைப் பார்த்தேன். என் கையைப்பற்றி இழுத்துக்கொண்டு தன்னுடைய மோட்டாரை நோக்கி நடந்தான்.

சுலோ அலட்டிக்கொண்டிருந்தாள். மாமாவின் கண்களில் இருந்து வடிந்த நீர் அவருடைய சட்டையை நனைத்திருந்தது. மூடியிருந்த கண்களைத் திறந்து சுலோ அறை முழுவதிலும் யாரையோ தேடினுள். பின்பு தலை ஒருபுறம் சாயக் கண்கள் மூடிக்கொண்டன. மாமா அழுதார். சுலோ போய்விட்டாள், அந்த உண்மையை என்னுடைய மனம் ஏற்றுக்கொண்டபோது சலனமற்றிருந்தது ஏன்?

சுலோவின் ஈமக் கடன்களை முடித்துக்கொண்டு நான் மீனுவைப் பார்க்கப் புறப்பட்டேன். என்னைக் கண்டதும் அவளுடைய முகம் மலர்ந்தது. அவளுடைய தலைக்கருகில் கட்டிலில் உட்கார்ந்தவாறு அவள் தலையை வருடிக்கொண்டிருந்தேன். எங்கள் கண்கள் ஒன்றை ஒன்று வெகு நேரமாகப் பார்த்தன. பேசச் சக்தியற்ற இரு உள்ளங்கள் கண்களின் மௌன பாஷையில் பொழுதுபோவதே தெரியாமல் பேசிக்கொண்டன.

பூரணையின் ஒளிக் கிரணங்கள் ஜன்னல் ஊடாக உள்ளே புகுந்து மீனுவிற்கு எதிர்த்தாற்போலிருந்த கவரில் விழுந்தன. சுகந்தமான வாசனை அறை முழுதும் பரந்திருந்தது. மீனு என் கைகளைப் பற்றி ஏதோ பிச்சை கேட்பதுபோல என்னைப் பார்த்தாள். ''என்னை வெளியே தோட்டத்திற்குக் கொண்டுபோங்கள்'' என்ருள். இந்த நிலையில் அவளை வெளியே கொண்டு செல்லலாமா? தோட்டக் காற்று அவள் உடலுக்கு ஒத்துக் கொள்ளுமா? தேகத்தை அலட்டினுல் நோய் தான் மாறுமா? நான் என்ன சொல்லியும் அவள் கேட்கவில்லை ''உங்களுக்கு விருப்பமில்லாவிடில் விடுங்களேன்'' என்று தாபம் நிறைந்த குரலில் அவள் அலுத்துக்கொண்டபோது எனக்கு யாரோ இதயத்தில் ஈட்டிகொண்டு குத்துவது போல வலிகண்டது.

இதுவரை மீனுவின் எந்த ஆசைகளையும் பூர்த்தியாக்க நான் முயன்றதில்லை. அவளுடைய இந்தக் கடைசி ஆசையையாவது நிறைவேற்ற நான் தவறலாமா? ஏதோ பித்துப் பிடித்தவன் போலத்தான் நான் நடந்து கொண்டேன். நான் செய்தது தவறு என்று டாக்டர் சொல்லுகிறார். நன்ருகச் சொல்லட்டும்! மீனுவினுடைய இறுதி ஆசையை ஆவது நான் நிறைவேற்றினேனே என்ற எண்ணம் எனக்கு மனச்சாந்தியைக் கொடுக்கட்டும்.

சுலோச்சனு

மீனுவை ஏந்திக்கொண்டு தோட்டத்திற்குச் சென்றேன். பால்போன்ற நிலவொளியில் அவளை என் மார்புடன் அணைத்தவாறு ஓர் கல் ஆசனத்தில் உட்கார்ந்தேன். மிருத்யு வாசலில் எங்கள் இரு இருதயங்கள் ஒன்றுடன் ஒன்று நெருங்கி தங்கள் துயரக் கதைகளை ஒன்றுக்கொன்று சொல்லிக்கொண்டன. அவளுடைய கன்னங்களி இரண்டையும் என் கைகளால் அணைத்து அவளுடைய முகத்தை நிமிர்த்தி என் முகத்தெதிரில் வைத்து ஆழமான அந்த விழிகளை நோக்கினேன். அவைகளில் கவலையின் நிழல் கொஞ்சங்கூடக் கவிந்திருக்கவில்லை. வரண்டு போனலும் அழகு கொப்பளித்துக் கொண்டிருக்கும் மீனுவின் கன்னக்கதுப்புகளில் மாறி மாறி என் இதழ்களைப் பதித்து விட்டு நிமிர்ந்தபோது அவள் என்னை நன்றியறிதலுடன் பார்த்தாள்.

''சுபக்'' ''சுபக்'' என்று இருமல் எழுந்தது அவளை வாட்டியது. இருமலின் அதிர்ச்சியில் உடல் குலுங்கியது. சுய நிலைக்கு வந்தநான் மீனுவை மீண்டும் ஏந்திக்கொண்டு அறைக்குச் சென்றேன். கட்டிலில் அவளைப் படுக்க வைத்துத் தலையணையை அணையாக எடுத்து வைத்தேன். அவள் அருகில் நானும் உட்கார்ந்துகொண்டேன். தலையணையைஎடுத்து எறிந்து விட்டுத் தன் தலையை உயர்த்தி என் மடிமீது வைத்துக் கொண்

(12-ம் பக்கம் பார்க்க)

சமத்துவ உலகம் காண கவிதை பாடிய

அல்லாமா இக்பால்

பாடுபடும் மக்களின் இலக்கியப் போராளியே கவிஞன் எனக்கண்டார்

உழவனுக்கு உதவாத தானியத்தை தீயிட்டுப் பொசுக்கு என்று கர்ஜிக்கும் அவரது புரட்சி இதயம்

இஸ்லாமிய உலகம்

முதலாளித்துவத்தை ஒழிக்க உலகில் முதன் முதல் தோன்றிய நூல் அருமறையாம் திருக்குர்ஆன் எனின் இது மிகையல்ல திருக்குர்ஆன் இத்தத்துவத்தின் மூலம் உலகுக்கு ஒரு புதிய அரசியல் திட்டத்தை வழங்கியது. புதுமை பொங்கும் ஒரு பொருளாதார நியதியை வகுத்தது. நாட்டின் அரசன் இறைவனே? என்ற அடிப்படையில் ஒரு புதிய பொருளாதார அமைப்பை நடைமுறையில் காட்டி வெற்றி பெற்றது இஸ்லாம். இந்நிலையில் பள்ளத்தை நோக்கியோடும் வெள்ளம் போல நாட்டின் செல்வம் தனிப்பட்ட ஒரு வர்க்கத்திடம் தேங்கி நிற்க வழியில்லை. இவ்விதமான ஒரு அரசியல் அமைப்பை உலகமே வியக்குமாறு நடாத்திக்காட்டியவர் இஸ்லாத்தின் மூன்றாவது கலீபா உமர் (றலி) அவர்களாகும். இந்தத் திருக்குர்ஆன் அரசியல் அமைப்பைத்தான் இஸ்லாமியப் புத்துலகு படைக்கும் மகாகவியும், தத்துவஞானியுமான அல்லாமா முகம்மது இக்பால் தம் ஜாவீதுநாமாவில் கூறுகிறார்.

குர்ஆன் என்பது என்ன?
முதலாளி வர்க்கத்திற்குச்
சாவுமணி
பாட்டாளிக்கு உற்ற துணைவன்
பணத்தைச் சேர்த்து
வைப்பவனிடமிருந்து
நன்மையை எதிர்பாராதே

……

உலகம் மனிதன் சொத்தில்
ஒரு பாகமாயினுங்கூட
அதன் உரிமை
இறைவனுடையதே

இறைவனுடைமையான இவ்வுலகை தனி மனிதன் அல்லது அவன் குழு ஆட்சிசெய்ய நினைப்பது சிரிப்புக்கிடமானது. தென்னை மரத்தில் கூடு கட்டி வாழும் காகம், அம்மரத்தை ஏதோ தன் ஏகபோக உரிமையாகக் கொண்டாடுவதுபோல இறைவனுடைய பூமிக்காக மனிதன் உரிமை பேசி வழக்காடுகிறான். காற்று, நெருப்பு நீர், நிலம் எனும் பஞ்ச பூதங்களும் இறைவன் சொத்தென எண்ணும் மனிதன் நிலத்திற்கு மட்டும் உறுதிமுடிப்பது ஏன்! இவையெல்லாம் மனிதனுடைய அறியாமையை, கோழைத்தனத்தை, சிந்தனையில் சிறப்பில்லாத தன்மைகளைத்தான் காட்டுகிறது. எனவேதான் சிந்தனையில் பூரணத்துவமில்லாத மனிதனைப்பற்றி இக்பால் இறைவனிடம் சற்றுப் பரிகாசமாகக் கூறுகிறார்.

"வேறோர் ஓவியம் தீட்டு
அதிக உறுதியான மனிதனைச்
சிருஷ்டி செய்
பொம்மைகளைப் படைத்தல்
இறைவனுக்கழகல்ல"

மனிதனுடைய தனித்தன்மையிலும், அறிவிலும் உறுதியில்லை. நேர்மையும் நியதியுமில்லை. மனிதன் வெறும் பொம்மை போலத்தான் காட்சியளிக்கிறான், இவன் நடத்தை இப்படித்தானிருக்கிறது என்கிறார் கவிஞர்.

பஞ்சநதி பாயும் பஞ்சாபிலே, சியால்கோட் என்னும் கிராமத்திலே 1873 பெப்ரவரி 22ந் திகதி பிறந்தார் இம்மகாகவி இக்பால். இவருடைய கவிதைச் செல்வங்கள் சிந்தனையின் பிறப்பிடம். உணர்ச்சியின் உச்சம். இவரது ஆத்மீக-லௌகீகப் பாடல்கள் அவனியோருக்கு அரும்பேறாய்க் கிடைத்தவை. பாரசீக-உர்து மொழிகளில் பாடப்பட்ட இவரது அமர காவியங்கள் உலகப் பேரிலக்கிய வரிசையில் சேர்ந்துவிட்டன; பாகிஸ்தான் பிரிவினைக்கு மூலகர்த்தா இக்பாலே இவருடைய கவிதை ஞானக் கனவுதான் இன்றைய பாகிஸ்தான்: "மொழியாலும் மதத்தாலும் வேறுபட்ட இரு சாதியினர் ஒரு நாட்டில் சமாதானமாக வாழ்ந்து அவர்கள் தம் கலைகளையும் கலாச்சாரத்தையும் பாதுகாத்துக் கொள்வதானால், அந்நாடு பிரிந்தேயாகவேண்டும்" என்று ஜின்னாவுக்கும் முதல் சங்கநாதம் செய்த சிந்தனையாளன் இம்மகா கவி கவிதைக் குரலால் பாகிஸ்தான் மக்களைத் துயிலெழுப்பினார். இஸ்பெயின் ராச்சியத்தின் அன்றைய இஸ்லாமிய ஆட்சியையும், இந்தியாவில் 800 வருடம் நடைபெற்ற மொகலாயச் சக்ராதிபத்தியத்தையும் கண்முன்னே எடுத்துக் காட்டினார். உணர்ச்சியும் உயிரோட்டமும் நிறைந்த இவரது இஸ்லாமியப் பெருமைகள் பொலியும் கவிதை மக்களை உந்தித்தள்ளிவிட்டன போராட்டத்திற்கு. இதன் முடிவு இந்தியாவில் ஒரு பச்சிணங்கொடிப் பிரதேசத்தை முஸ்லிம்கள் கண்டனர்.

இக்பாலுடைய "லெனின் தேவதூதர்கள், இறைவன் கட்டளை" என்னும் கவிதையில், இஸ்லாமியப் பொதுவுடைமைத் தத்துவம் பொங்கி எழுகிறது. லெனினின் பொதுவுடமை இஸ்லாத்தோடு நெருங்கிய தொடர்புடையது. ஆனால் லெனினின் அரசியலில் இறைவனுக்கு இடமே இல்லை. இஸ்லாமிய பொதுவுடமை அரசியலில் இறைவன் என்ற எண்ணமே எங்கும் பின்னிக்கிடக்கிறது லெனினின் அரசியலை இந்த ஒரு திருத்தத்துடன் ஆதரிக்கும் இக்பால், மறு உலகில் லெனின் தேவதூதர்களிடம், உலகின் இழிநிலையைப்பற்றிக் கூறுவதாகப் பாடுகிறார்.

தேவ தூதர்கள் அதை இறைவனிடம் கூறுகின்றனர்.

அறிவும் கல்வியும் ஞானமும்
தந்திரமும், உயிரை
உறிஞ்சியபடியே
சமத்துவம் பேசுகின்றனர்
நீசர்வ வல்லமையாளன்
நீதவான் ஆனால்.........
உன் உலகில் தொழிலாளியின்
துயருக்கு எல்லை இல்லை
முதலாளித்துவக் கப்பல்
அழிவதென்று—உன்
உலகம் விடுதலை நாளை
வேண்டித் தவிக்கிறது

கல்வியும், அறிவும் இதனால் பெற்ற தந்திரங்களுமே முதலாளித்துவத்திற்கு உதவுகின்றன. கற்றவர்கள்கூட கற்றபடி நடப்பதில்லை. எல்லோருமே தொழிலாளியின் உதிரத்தை உறுஞ்சுகின்றனர். எல்லோருமே அறியாமையால் வன்னெஞ்சினராக மாறிவிட்டனர். முதலாளித்துவம் ஒழிய வேண்டும் உழைப்பவன் வாட [illegible]பவன் அழிய வேண்டும்

சமத்துவம் என்றால் என்ன? சர்வவல்லமை பொருந்திய உலகப் பொது நீதிபதியாகிய உன்னிடம் சமத்துவம் மிளிரவேண்டாமா? முதலாளித்துவக் கப்பல் அழியும் நாள். உலக விடுதலை நாள்.

அ. ஸ. அப்துஸ் ஸமது

அந்நாள் என்று? என்று கூறும் லெனின் மறு உலகிலாவது இறைவனை ஒப்புக்கொள்வது ஒரு விசேட அம்சம், இதைக் கேட்ட இறைவன் தூதர்களுக்கு ஒரு புரட்சிகரமான கட்டளை விடுகின்றான். கட்டளையில் புரட்சியும் பூகம்பமும் கலந்து நிற்கிறது.........

எழுங்கள்
உரிமையிழந்து
உணர்ச்சியற்றுறங்கும்
ஏழை மக்களைத் தட்டி
யெழுப்புங்கள்
பணக்காரக் கோட்டைகள்
அடியோடு அதிர்ந்து சாயட்டும்
அடிமைகளின் குருதியை
உணர்ச்சி உயிர் கொண்டு
ஓடச் செய்யுங்கள்
எளிய ஊர்க்குருவி
ராஜாளியை எதிர்க்கப்
பலமளியுங்கள்
மக்களாட்சிக்கான
மகத்தான நாள்
நெருங்கிவிட்டது

ஏழை மக்களின் அவல நிலைக்கு, அவர்களது அறியாமையும் பலஹீனமான எண்ணமுமே காரணம் என்பது கட்டளையிலிருந்து விளங்குகிறது. அவர்கள் உணர்ச்சிபெற்று உள்ளம் வலிமையுடையவர்களாகப் போராடினால் சம்மட்டியும், அரிவாளும் பிடித்து மரத்துப்போன அவர்களது கரங்கள் எத்தனையோ ஏழைகளின் எலும்புக் கூட்டில் எழுப்பப்பட்டிருக்கும் மாடமாளிகைகளையெல்லாம் துவம்சம் செய்துவிடும் என்று இங்கே இறைவன் கட்டளைமூலம் கவிஞர் விளக்குகிறார். கட்டளை மேலும் தொடர்கிறது......

உழவன் உணவுக்குதவாத
களனி
எங்காவது இருந்தால்
அதில் ஒரு தானிய மணிகூட
மிஞ்சாதபடி
நெருப்பிடுக்
கொளுத்துங்கள்

புரட்சித் தீ இறை ஆஞ்ஞையில் பிரதிபலிக்கிறது: தொழிலாளியின் துயரை நினைக்கையில் வள்ளுவன் பெரும் புரட்சிக்காரனாக மாறிவிடுகிறான். ஆம்!

இரந்தும் உயிர் வாழ்தல்
வேண்டின்
பரந்து கெடுக
இவ்வுலகியற்றியான்

இறைவன் சிருஷ்டித்த மக்களே தம் உழைப்பால் வாழ முடியாவிட்டால் இரந்தும் இரந்து அவர்கள் வாழ வேண்டியதாயின் அந்த இறைவனே அழிந்துபோகட்டும் என்கின்றார். வள்ளுவன் காலத்தில்கூட தொழிலாளியின் துயர் இந்நிலையில் தான் இருந்தது என்பதற்கு இஃது சான்றாகும். கட்டளை தொடர்கிறது.

கோயில்கள் மசூதிகளின்
விளக்குகளை
அணைத்துவிடுவதுகூட நன்று
சலவைக் கற்களாலான
இப்பிரார்த்தனைத் தலங்களை
நான் வெறுக்கிறேன்
மண்ணாலான குடிசைகள்
எழட்டும்

மக்கள் வாழ்விலே ஒளியில்லை. உழைப்பவன் இல்லத்திலே சந்தோஷமில்லை: மாடமாளிகைகளையெல்லாம் கட்டிக்கொடுத்த தொழிலாளி, ஓலைக் குடிசையிலே, மர நிழலிலே உறங்குகிறான். பகலெல்லாம் பட்டினி, இரவிலே கூழ். இக்கூழைக் குடிக்கக்கூட அவன் வீட்டிலே விளக்கில்லை. இந்நிலையில் ஒருவரும் இல்லாத ஆலயங்களில் இரவெலாம் ஒளியேன்? இந்தப் பரந்த

(10-ம் பக்கம் பார்க்க)

கொண்டையிலிருந்து விழுந்த மாலை

அருமைச் சாரதா,

மடல் பெற்றேன் மணி மணியாக எழுதி என்னை மகிழ்விக்கும் கரமா இவ்வாறு கோணல் மாணலாய்க் கிறுக்கி விட்டிருக்கிறது என்று வியப்படைந்தேன், வருந்தினேன். முற்றாகப்படித்த பிறகுதான் அன்பு வடிவான கரத்தின் நடுக்கத்தையும் உணரமுடிந்தது.

இதற்கு மட்டுமல்ல— சாரதா இன்று நிகழ்ந்துவரும் இதுபோன்ற பல நிகழ்ச்சிகளுக்கும் காரணம் என்ன? எண்ணிப் பார்த்தாயா? எத்தனை எத்தனையோ எண்ணங்கள், அன்பு வடிவான ஆசைகள், கருத்தொருமித்த தொடர்புகள் எல்லாம் [illegible]பாகவும் பழியாகவும் கொடுமையாகவும் கொலையாகவும் குமைந்து கெடுவதற்குக் காரணம் என்ன? இத்தகைய அவல நிலைக்கெல்லாம் அடிப்படை எது?

அமைதியாக இருந்து எண்ணும் மனமும், அறிவோடு துணியும் மூளையும் இல்லாமையே—இருந்தாலும்பயன்படாமையே காரணம்என்று கருதுகிறேன். இன்றைய வாழ்க்கை முறையால் வேகத்தின் வடிவாய் விளங்குகின்ற மனம், எல்லாவற்றிலும் வேகமாய்ச் செல்லவே விரும்புகிறது ஆழ்ந்து ஆராய்வதிலும் அடிப்படை காண முயல்வதிலும் மனம் விரும்புவதில்லை. தலை முயற்சிப்பதில்லை. எதிலும் வேகம் [illegible] வாழ்க்கை முறை இது......... அல்ல. அறிவை துணைப்படுத்தி அமைத்துக் கொண்ட வாழ்க்கை அமைப்பு இது: இவ்வாறு தான் கருதவேண்டும்.

மு. அருணன்

ஒரு கடிதமும் ஒரு நிழற்படமும் ஒருத்தியின் வாழ்க்கைக்கு எமன்களாகிவிட்டனவே என்பதை எண்ணும் போது நெஞ்சம் குமுறுகின்றதே சாரதா. எங்கோ யாருடைய மக்களாகவோ பிறந்து வளர்ந்த சுகிர்த மலரையும் இரத்தினசிங்கத்தையும் ஒரு பள்ளியில் ஒரே வகுப்பில் சேர்ந்து படிக்கவும், செறிந்து வாழவும் வாய்ப்பைத் தந்துவிட்டு "புணர்ச்சி பழகுதல் வேண்டா, உணர்ச்சிதான் நட்பாங்கிழமை தரும்" என்று அவர்களின் மனதை பண்படுத்தி விட்டு எழுதிய கடிதத்தை எடுத்த நிழற்படத்தை கொண்டு இரண்டறக்கலந்த அவர்களின் இதயத்தை புண்படுத்தலாமா? சுகிர்தாவின் தையல் பெட்டியில் இருந்த நிழற்படத்தை எடுக்கும்போது ஆசிரியை வேதநாயகி தன் மனதையும் மூளையையும் [illegible] பயன்படுத்தி இருந்[illegible]ல் அவளுடைய தூய உடல் தெப்பம்போல் குளத்தில் மிதந்திராதே? சங்கப் பாடல்களில் மண்டி திழைத்த நெஞ்சங்களிற் கூட கொடிய உணர்வுகள் வாழ்கின்றனவே; வாழமுடிகின்றனவே.

நாடகத்தில் காவியத்தில்
காதலென்றால்
நாட்டினர்தான் வியப்பெய்தி
நன்றுமென்பர்
ஊடகத்தே வீட்டினுள்ளே
கிணற்றோரத்தே

இலக்கியப்பூங்கா

ஊரினிலே காதலென்றால்
உறுமுகின்றார்
பாடை கட்டி அதைக் கொல்ல
வழி செய்கின்றார்
பாரினிலே காதலெனும்
பயிரைமாய்க்க
மூடரெல்லாம் பொறாமை
யினால் விதிகள் செய்து
முறை தவறி இடரெய்திக்
கெடுகின்றாரே.

என்று முழங்கினானே பாரதி அவன் பெயரில் நாளெல்லாம் விழா, நூல் நிலையம், சங்கங்கள் அவனுடைய பாடல்களுக்கு பள்ளிக்கூட புத்தகங்களிலே இடம், பரீட்சைதாளிலே அவனைப் பற்றிய வினா, அவன் காட்டிய வழியை கைகோர்த்துச் செல்வதற்கு மட்டும் உரிமை இல்லை. செவிலித் தாயாக விளங்கி சிந்தனைப் பிறவியாக வழி நடத்தவேண்டிய

(11-ம் பக்கம் பார்க்க)

சுதந்திரன்
SUTANTIRAN
1956 பெப்ரவரி மாதம் 19ந் திகதி
194 ஏ, நீட்டா தெரு, கொழும்பு. போன்: 3411 தபா பெ: 1183

ஐக்கிய "முன்னணி" முறிவு

தமிழ்ப் பேசும் மக்களுக்கு இன்று ஏற்பட்டுள்ள பேராபத்தைத் தவிர்க்க அவர்கள் மத்தியிலுள்ள சகல சக்திகளும் ஒன்றுபட வேண்டும். ஒப்புக்கொள்ளப்பட்ட ஒரு திட்டத்தின் அடிப்படையில் தமிழ்ப் பேசும் பெருமக்களின் பிரமாண்டமான ஐக்கியம் உருவாக வேண்டும். இது தமிழ்ப் பற்றுள்ள, தமிழ் மக்களின் நலனில் அக்கறை உள்ள ஒவ்வொருவரினதும் அவா. தமிழ்ப் பேசும் மக்களின் ஏகோபித்த கோரிக்கை.

ஆனால் இந்த ஐக்கியம் உருவாவது எப்படி? எந்த திட்டத்தின் அஸ்திவாரத்தில் இது கட்டப்பட வேண்டும்? எதற்காக—எந்த இலட்சியத்தை சாதனையிலாக்க இது செயல்பட வேண்டும்? இந்த ஐக்கிய அணியில் எந்தெந்த சக்திகள்—எந்தெந்த ஸ்தாபனங்கள் அணிவகுக்க வேண்டும்?

இவற்றை சரியாக வரையறை செய்துகொள்ளாது குருட்டாம்போக்கில் 'ஐக்கிய முன்னணி' என்று கூப்பாடு போடுவதில் அர்த்தமில்லை. தமிழ் மக்களின் நலனுக்கு இது உதவாது. ஆபத்தானதாகவே இருக்கலாம். அதனால்தான் "தமிழர் ஐக்கிய முன்னணி" பேச்சுகள் முறிந்தது குறித்து நேர்மையானவர்கள், தமிழ் மக்களின் நலனில் ஆர்வமுள்ளவர்கள் வருத்தப்படவில்லை? "ஐக்கிய முன்னணி முறிவுக்கு சமஷ்டிவாதிகளே காரணம்" என்று யு. என். பி. மாஜித் தமிழர்களும், ஏரிக்கரைப் பத்திரிகைகளும் குற்றம்சாட்டுகின்றன; "திரு எஸ். ஜே. வி. செல்வநாயகத்திற்கு பாராளுமன்றத்தில் ஒரு ஸ்தானத்தைப் பெற்றுதரும் பிரச்னையிலேயே ஐக்கிய முன்னணி முறிந்தது என்று தினகரன் விஷமத்தனமான பிரசாரம் செய்துள்ளது. ஆனால் உண்மை என்ன?

இன்று தமிழ்ப்பேசும் மக்களின் சகல உரிமைகளுக்கும் பயங்கரமான ஆபத்து ஏற்பட்டுள்ளது. இதை எதிர்த்து அவர்களது உரிமைகளைப் பாதுகாக்க பிரமாண்டமான இயக்கம் தலையெடுக்க வேண்டும். தனிச் சிங்களத் திணிப்பை எதிர்த்து தமிழ்ப் பேசும் இனம் திரண்டெழ வேண்டும். தமிழ்ப் பகுதிகளில் சிங்கள ஆக்கிரமிப்பை நிறுத்த வேண்டும்.

இத்தகையஒருதிட்டத்தின்அடிப்படையில்தமிழ்மக்களின் ஒற்றுமையை கட்டியிருக்க வேண்டியது. தமிழ்ப் பேசும் மக்களின் கூட்டான உரிமைப் போராட்டத்தை நடத்தியிருக்க வேண்டியதுதான் முறை. ஆனால் அதற்குப் பதிலாக யு. என். பி. மாஜி அங்கத்தவர்கள் தேர்தலையே முக்கிய பிரச்னையாகக் கொண்டார்கள். தேர்தலில் போட்டியை தவிர்ப்பதன்மூலம் மீண்டும் பாராளுமன்றத்தில் நுழைய ஐக்கிய முன்னணிக் கூடாரம் அடிக்க விரும்பினார்கள்.

தமிழ்ப் பேசும் இனத்திற்கு எதிராக, மக்களுக்கு எதிராக யு. என். பி. ஆட்சி நடவடிக்கை எடுப்பது இது முதல் தடவை அல்ல. மலைநாட்டுத் தமிழ் மக்களின் உரிமைகள் பறிக்கப்படுவதற்கு ஆட்சியுடன் ஒத்துழைத்தவர்கள் இவர்கள். தமிழ் புறக்கணிக்கப்பட்டபோதெல்லாம் கைகூப்பி நின்றவர்கள் இவர்கள். தமிழ்ப் பிரதேசத்தில் சிங்கள ஆக்கிரமிப்புக்கு ஆதரவாக நின்றவர்கள் இவர்கள், தமிழ்ப்பேசும் இனத்திற்கும் மக்களுக்கும், எதிராக ஆட்சியாளர் எடுத்த ஒவ்வொரு நடவடிக்கைக்கும் கூட்டு நின்றவர்கள் இவர்கள். இன்று இவர்கள் தமிழ்ப் பேசும் மக்கள் மத்தியில் செல்வாக்கிழந்து நிற்கிறார்கள். எனவேதான் ராஜினாமா நாடகங்கள்மூலம் தம் இழந்த செல்வாக்கைப் பெறவும் — ஐக்கிய முன்னணி வேஷத்தில் பாராளுமன்றத்தில் மீண்டும் புகுந்துகொள்ளவும் முனைகிறார்கள்.

இப்படிப்பட்டவர்கள் தேர்தலில் வென்றபின் மீண்டும் குத்துக்கரணம் அடிக்கமாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம் இருக்கிறது? இவர்களின் அசகாய பேச்சுக்களை நம்புவது எப்படி? "நாம் முயன்றோம். பலனில்லை. அரசாங்கத்துடன் ஒத்துழைத்து தமிழர்களுக்கு சில சலுகைகளாவது பெறுவோம்" என்று கூறிக்கொண்டு சரணாகதி யடையமாட்டார்கள் என்பதற்கு உத்தரவாதமளிப்பது யார்?

எனவேதான் ஒரு கொள்கை அடிப்படையில் ஒரு ஐக்கிய முன்னணி நிறுவப்பட்டாலும் தங்கள் பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கும் உரிமை தமிழ்ப்பேசும் மக்களுக்கு அளிக்கப்பட வேண்டும் என்று அரசியல் தீர்க்கதரிசனம் உள்ளவர்கள் கூறுகிறார்கள். தமிழ்ப் பேசும் மக்களின் பெரும் பகுதியினரின் வெறுப்புக்கு இலக்கானவர்களை ஐக்கிய முன்னணியின் பேரால் தமிழ் மக்கள் மீது வலுக்கட்டாயமாக திணிப்பது நியாயமற்றது. சந்தர்ப்பவாத சரித்திரத்திற்குப் பேர்ப்போனவர்களை நம்பும்படி செய்ய கூட்டு நிற்பது மக்களுக்கு இழைக்கும் படுத் துரோகமாக முடியலாம்.

எனவேதான் ஒவ்வொரு கட்சியைச் சேர்ந்தவர்களும் தேர்தலில் கலந்துகொள்ள இடமளிக்கப்படவேண்டும் என்று தமிழரசுக் கட்சியின் சார்பில் மகாநாட்டில் கலந்து கொண்டவர்கள் கூறினார்கள். ஒவ்வொருவரும் தம் தம் கட்சி கொள்கை, திட்டத்தின் அடிப்படையில் மக்களின் தீர்ப்பைப் பெறுவது' தேர்தலில் வெற்றிபெற்றவர்கள் ஏற்கனவே ஒப்புக்கொள்ளப்பட்ட பொதுத் திட்டத்தின் அடிப்படையில் பாராளுமன்றத்தில் பணியாற்றுவதுஎன்று அவர்கள் சொன்னார்கள்.

இதுதான் நேர்மையானது. தமிழ் மக்களின் நலனுக்கு உகந்தது. தமிழ் மக்களின் ஜனநாயக ஆர்வத்திற்கு மதிப்பளிப்பது. இதை ஏற்றுக்கொள்ள யு. என். பி. மாஜித் தமிழ் அங்கத்தவர்கள் மறுப்பதன் அந்தரங்கம் என்ன? தமிழ் மொழியையும், தமிழ்ப் பேசும் மக்களின் உரிமைகளையும் பாதுகாக்க மக்களின் பிரமாண்டமான இயக்கத்தை வளர்ப்பதற்குப் பதிலாக தேர்தலை மட்டும் குறிக்கோளாக கொள்வதேன்? எப்படியாவது பாராளுமன்றத்திற்குள் புகுந்துகொள்வது — பின் தங்கள் இஷ்டம்போல் குத்துக்கரணம் அடிப்பது என்ற அந்தரங்க நோக்கம் இருப்பதாலா?

தமிழர் நலன் பற்றி நடேசன் மழுப்புவது சுத்தப் பொய்

திரு வன்னியசிங்கத்தின் ஆணித்தரமான பதில்

"யு. என். பியின் மாஜித் தமிழ் எம். பிக்கள் தேர்தலில் வெற்றி பெற்று மீண்டும் பாராளுமன்றத்திற்கு வரும் நோக்குடன் ஐக்கிய முன்னணி அமைக்க முயற்சிகள் எடுக்கவில்லை என்றும், தமிழ் மக்களின் நலனுக்காக தமது சொந்த நலனை விட்டுக் கொடுக்க அவர்கள் தயாராக இருந்தனர் என்றும் திரு நடேசன் கூறுகிறார். ஆனால் எந்த விதத்தில் தமது நலனை விட்டுக் கொடுக்க அவர்கள் தயாராக இருந்தனர் என்பதை விள்க்கமாக கூறியிருக்கலாமே."

மேற்கண்டவாறுஇலங்கை தமிழரசுக்கட்சித் தலைவர் திரு கி. வன்னியசிங்கம் பத்திரிகைகளுக்கு வெளியிட்ட ஒரு அறிக்கையில் கூறியுள்ளார்:

"எனக்குத் தெரிந்த மட்டில் மகாநாடுகளில் கலந்து கொண்ட ஒரு யு என். பி. மாஜித் தமிழ் பிரதிநிதியாவது எந்த விதத்திலும் விட்டுக்கொடுக்க தயாராக இருக்கவில்லை என்பது உண்மை" என்று மேலும் கூறியுள்ளார்;

திரு வன்னியசிங்கம்தனது அறிக்கையில் கூறியிருப்பதாவது:

"ஐக்கிய முன்னணி ஒன்றை அமைக்க நாங்கள் எடுத்த உருப்படாத முயற்சிகளில் தமக்குச் சாதகமானவைகளாக கருதியவைகளையே திரு நடேசன் பொது மக்களுக்கு கூறியுள்ளார். திரு நடேசன்தமது அறிக்கையில் என்னைப்பற்றி குறிப்பிட்டிருப்பதால் திரு நடேசன் பொது மக்களிடம் கூறாது மூடி மறைத்துள்ள சில உண்மைகளை தமிழ் பேசும் மக்களுக்கு முன் சமர்ப்பிப்பது அவசியம் என்று கருதுகிறேன். திரு நடேசன் வெளியிடாத உண்மைச்சம்பவங்களை மட்டும் கூறிவிட்டு மக்களை தீர்மானிக்கும்படி விட்டுவிடுகிறேன்.

தமிழ்ப் பேசும் மக்களின் சுதந்திரம், தனித் தன்மை ஆகியவற்றை நிலை நாட்டுவது; தமிழ் மக்களின் மொழியையும் கலாச்சாரத்தையும் பாதுகாப்பது; தமிழ்ப் பேசும் மக்களின் பாரம்பரியமான தாய்ப் பிரதேசத்தை ஆக்கிரமிப்பிலிருந்து பாதுகாப்பது ஆகிய பிரச்சனைகளில் வெள்ளவத்தையில் நடைபெற்ற மகாநாட்டிற்கு முன்பாக திரு தம்பியையா வீட்டில் நடந்த மகாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட உடன்பாடு இதுவரை எந்த சாரினராலும் மீறப்படவில்லை.

ஐக்கிய முன்னணி அமைப்பதற்காகக் கூட்டப்பட்ட மகாநாடுகள் யாரையும் ஏமாற்றுவதற்கல்ல வென்றும், மாஜி யு. என். பி. பார்லிமெண்ட்தமிழ்அங்கத்தினர்கள் மக்களின் நலனுக்காகத் தங்கள் சொந்த நலன்களை விட்டுக்கொடுக்க தயாராக இருந்தார்களென்றும் திரு. நடேசன் தமது அறிக்கையில் கூறியிருக்கிறார். ஆனால் திரு. நடேசனை அன்றி இப்பொழுது பார்லிமெண்ட் மெம்பர்களாக இருக்கும் மாஜி யு. என். பி. அங்கத்தினர்கள் எவரோ தங்கள் சொந்த நலன்களை மக்களுக்காக என்ன முறையில் விட்டுக் கொடுக்கத் தயாராக இருந்தார்களென்பதையோ அல்லது அடுத்த தேர்தலில் தாமோ அல்லது மற்றவர்களோ போட்டியிடாமல் விட்டுக்கொடுக்கத் தயாராகயிருப்பதாக என்னிடமோ அன்றி மகாநாடடுத் தலைவர் திரு ஸி. நாகலிங்கத்திடமோ தெரியப்படுத்தியதாக திரு நடேசன் தமது அறிக்கையில் தெளிவாக விளக்கியிருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும்.

அரசாங்க மாஜி எம். பிக்கள் யாவரின் சார்பில் திரு நடேசன் பேச்சுவார்த்தை நடத்தினாரென்பதையும், பேச்சுவார்த்தைகளில் தங்களை ஒதுக்கிவைத்துவிட்டதாகப் பிரஸ்தாப எம்.பிக்களில் எவராவதுதலைவரிடம் புகார் செய்தாரா என்பதையும், அழைக்காமலே மகாநாட்டில் யாராவது வந்து கலந்து கொண்டனரா என்பதையும் திரு. நடேசன் தமது அறிக்கையில் மக்களுக்குக் கூறியிருந்தால் இன்னும்நன்றாக இருந்திருக்கும். விட்டுக்கொடுக்க தயாரில்லை.

விட்டுக் கொடுக்க தயாரில்லை

எனக்குத் தெரிந்தவரையில் மகாநாட்டில் கலந்து கொண்ட மாஜி யு. என். பி. பார்லிமெண்ட அங்கத்தவர்களில் ஒருவராவது விட்டுக்கொடுக்கத்தயாராக இருக்கவில்லை என்பது உண்மை.

இந்த முட்டுக்கட்டை காரணமாகக் கால்பேஸ் ஹோட்டல் மகாநாட்டிலேயே நான் பின்வரும் யோசனையைத் தெரிவித்தேன்:-

"பிரஸ்தாப மூன்று நோக்கங்களையும் பற்றி விரிந்த கொள்கை அடிப்படையிலும், மூன்று நோக்கங்களையும் அடைவதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளைப்பற்றியும் ஒப்பந்தம் செய்துகொண்டு அந்த ஒப்பந்த நிகழ்ச்சிகளைச் செய்யக்கூடியவர்கள்யாவரென்பதை மக்களை தம் விருப்பப்படி தெரிவுசெய்வதற்கு விட்டுவிடுவோம்." இதுதான் நான் கூறியயோசனையாகும். சுயேட்சையாளர்கள், மற்றும் இடதுசாரிகள் முதலானோரும் தேர்தலில் போட்டியிடுவார்கள். ஆகவே போட்டியின்றித்தெரிந்தனுப்புவது என்பது சாத்தியமாகாது என்று நான் மேலும் சுட்டிக் காட்டினேன். ஐக்கிய முன்னணி தெரிந்தெடுக்காத தற்போதைய எம். பிக்கள் கூட சுயேட்சையாகத் தேர்தலில் போட்டியிடுவார்ளென்றும் ஆகவே ஒரே ஜாபிதாவினால் எந்த விதமான பலனும் கிடைக்கப்போவதில்லையென்றும் நான் சொன்னேன். எனினும் எங்களுக்குள்ளேயே ஒரே ஜாபிதாவுக்கு ஒப்புக்கொண்டால் முயற்சிக்கு வழியுள்ளதென்பதற்கு நான சம்மதித்தேன். இந்தச் சந்தர்ப்பத்தில் 'தேசியசபை' அல்லது 'முதியோர் சபை' யினால் அபேட்சகர்களைத் தெரிவு செய்வதென்றவிவாதம் திரும்பியது.

நானோ எனது கட்சியோ எமது கட்சியின் காரியக்கமிட்டியைக் கலந்தாலோசிக்காமல் எதுவுமே சொல்ல முடியாது என உறுதியாக நான் மறுத்ததை திரு. நடேசன் தமது அறிக்கையில் குறிப்பிட்டிருந்தால் எனக்கும் எமது கட்சிக்கும்நியாயமாக இருந்திருக்கும். "இந்த யோசனை உங்களைப்பொறுத்தமட்டில் எப்படித் தோன்றுகிறது?" என்று தலைவர் பின்பு கேட்டதற்கு" இதில் பகைத்த ஆட்சேபம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை" என்று நான் கூறினேன்;

மற்றொரு ஆட்சேபனை

மகாநாட்டில் ஏற்கனவே ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயத்திலும் கால்பேஸ் ஹோட்டல் மகாநாட்டில் மாறுபாடு தோன்றியது. நாடு முழுவதிலும் தமிழுக்கும் சிங்களத்திற்கும் சம அந்தஸ்து அளிக்காத எந்த அரசாங்கத்துக்கும் ஆதரவளிப்பதில்லையென்றும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் சிங்களக் குடியேற்றத்தைத் தடை செய்யாத அரசாங்கம் எதற்கும் ஆதரவளிப்பதில்லையென்பதும் தான் மகாநாடு ஏற்கனவே செய்த முடிவாகும். கால்பேஸ் மகாநாட்டில் திரு தம்பியையாவும் ஜனாப் மிர்ஸாவும் "சம அந்தஸ்து அளிக்க மறுத்தபடியால் தான் நாங்கள் யு. என். பியைவிட்டு விலகினோம். இதையே வற்புறுத்துவதும் இதற்குமேல் சிங்களக் குடியேற்றம் இருக்கக்கூடாதென்றும் கோருவதும் அளவுக்கு மிச்சமானது" என்று பலமாகக் கூறினார்கள். பேச்சுவார்த்தைகள் நடத்தி வேறு ஏதாவது சலுகைகளைப் பெறுவதற்குச் சாத்தியமிருக்க வேண்டும், சிங்களம் மட்டுமே தீர்மானம் அமுல் செய்யப்படும் சுமார் இரண்டு வருஷம்வரை இந்தச் சலுகை அளிக்கப்பட வேண்டுமென்று கூறப்பட்டது, இதன்பின் தமிழ் மக்களுக்கென தனி ஒரு பகுதியைப் பிரித்து சிங்கள ஆதிக்கம் இல்லாமல் அங்கு தமிழ் மொழிக்கு நிர்வாக அந்தஸ்து அளிப்பதென அபிப்பிராயம் கூறப்பட்டது. இதுதான் இன்றைய நிலையில் சரியானது என்றும் கூறப்பட்டது. இந்தச் சலுகைபற்றிப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு ஐக்கிய முன்னணிக்கு சுதந்திரமிருக்க வேண்டுமென்றும் இந்தச் சலுகை அளிக்கும் எந்த அரசாங்கத்தையும் ஆதரிக்கவும் உரிமையளிக்க வேண்டுமென்றும் வற்புறுத்தப்பட்டது.

"இந்த யோசனையை ஏற்றுக்கொள்வதானால் அங்கத்தவர்கள் ராஜினாமாச் செய்துவிட்டு புதிதாக மக்களிடமிருந்து உத்தரவுபெற்றுத் திரும்பி வர வேண்டுமென்று திருவாளர்கள் நடேசனும் பொன்னம்பலமும் கூறியதைச் சொல்ல வேண்டியது எனக்கு நியாயமாகும்.

"எங்கள் ஆதரவைத் தேடும் அரசாங்கம் உபதேர்தல் முடியும்வரை காத்திருக்கமாட்டாது" என்று திரு தம்பிஐயா கூறினார். கடும் சட்டங்கள் இதுசம்பந்தமாக வைக்கக்கூடாது என்றும் திரு தம்பிஐயா சொன்னார். வன்னியசிங்கம் சம்மதித்தால் நாங்களும் சம்மதந்தான்' என்று திரு நடேசன் கூறினார். ஆனால் நான் அதை ஒப்புக்கொள்ளவில்லை.

ஐக்கிய முன்னணியின் அற்ப ஆயுள்

திரு நடேசன் தமது அறிக்கையில் குறிப்பிடாமல் விட்ட மற்றொரு விஷயத்தையும் நான் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்; ஆலோசிக்கப்பட்ட ஐக்கிய முன்னணியின் ஆயுசுபற்றி விவாதிக்கப்பட்ட பொது ஐக்கிய முன்னணி ஆறு மாத

(13-ம் பக்கம் பார்க்க)

ஏரிக்கரைப் பத்திரிகையின் இரட்டை வேஷம்!

வெளியூர்ப் பதிப்பில் ஒன்று-உள்ளூர்ப் பதிப்பில் இன்னொன்று


வெளியூர்ப் பதிப்பு

தினகரன்

The Thinakaran

Tamil Daily Newspaper

FRIDAY, FEBRUARY 10, 1956

செல்வநாயகத்துக்குத் தொகுதி தேடுவதில் தமிழ் முன்னணி முறிவு

தொகுதிகள்பற்றி அற்பத்தனமான பேரம் என்கிறார் தம்பியையா; முதியோர் சபைக்குச் சமஷ்டி எதிர்ப்பு

தமிழர் நம்பிக்கைக்குத் துரோகம் இழைக்கப்பட்டுவிட்டது

சமஷ்டிக் கட்சி சார்பாக நாகநாதன் விளக்கம்

7-வது சுவீப் முடிவுகள்

பராசக்தி கண்ணீர் வடித்தாள்

தாமரைப்பூ சந்தனத் தைலம்

ஏரிக்கரை ஏடான 'தினகரன்' பத்திரிகையின் இரு படங்களை வெளியிட்டுள்ளோம். இரண்டையும் நன்றாக உற்றுப்பாருங்கள். இரண்டும் 1956 பெப்ரவரி 10ந் திகதி வெள்ளிக்கிழமை வெளிவந்த பத்திரிகைகள். ஒன்று வெளியூர்ப்பதிப்பு மற்றது உள்ளூர்ப் பதிப்பு.

ஒன்றில், வெளியூர்ப்பதிப்பில் "செல்வநாயகத்திற்கு தொகுதி தேடுவதில் தமிழ் முன்னணி முறிவு" என்றும் "தொகுதிகள் பற்றி அற்பத்தனமான பேரம் என்கிறார் தம்பையா" என்றும் கொட்டை எழுத்துக்களில் தலைப்புக்கள் தீட்டப்பட்டுள்ளன.

மற்றதில், கொழும்புப் பதிப்பில் "ஐக்கியமில்லை, ஐக்கியமுன்னணியுமில்லை" "பொதுநலத்தின்மேல் கட்சிகளின் சுயநலம் வெற்றி கொண்டது' என்று தலைப் பிடப்பட்டுள்ளது.

ஒரே விஷயத்தைப் பற்றி ஒரே தினத்தில் வெளி வந்த பத்திரிகை. ஆனால் ஒன்றுக்கு ஒன்று இவ்வளவு மாற்றம்-முரண்பாடேன்? இரண்டு பதிப்புகளில் இரட்டை வேஷம் போடுவது ஏன்?

தமிழ்ப் பேசும் மக்களின் உரிமைப்போரை சீர்குலைத்து யு. என். பியின் கையாட்களுக்கு ஆதரவு தேட ஏரிக்கரைப்பத்திரிகைகள் படாதபாடு பட்டு வருவது இதிலிருந்து பளிச்சென்று புலனாகிறது.

வெளியூர்களிலுள்ள அப்பாவித் தமிழ்ப் பேசும் மக்களை பொய்ச் சரடுகள் மூலம் ஏமாற்றி, தமிழ்ப் பேசும் இனத்தின் ஒற்றுமைக்கு முட்டுக்கட்டையாக இருந்தவர்கள் தமிழரசுக்கட்சிக்காரர் என்றும் திரு செல்வநாயகத்திற்கு ஒரு ஸ்தானத்தைப் பெறுவதற்காக நடந்த பேரத்தால் தான் ஐக்கிய முன்னணி முறிந்தது என்றும் பொது மக்களிடை படுமோசமான பிரச்சாரத்தைபரப்புவதுமே ஏரிக்கரை விஷமிகளின் நோக்கம். "தமிழ் மக்களின் நலனுக்காக நாம் எமது சொந்த நலன்களை விட்டுக் கொடுக்க தயாராக இருந்தோம்" என்று திரு நடேசன் கூறியிருக்கிறார். அப்படியென்றால் ஆஸனங்களுக்கான பேரமே ஏற்பட்டிருக்காதல்லவா? நடேசனின் மழுப்பலும்-ஏரிக்கரை பத்திரிகையின் பொய்ச் சரடும் தங்களையே பரிதாபமாகக் காட்டிக் கொடுத்து விடுகின்றன.

கொழும்பிலுள்ள மக்களை இலேசில் ஏமாற்றமுடியாது என்று எண்ணிய ஏரிக்கரை கொழும்புப் பதிப்பில் பதிவிரதை போல் செய்திவெளியிட்டுள்ளது.

வெளியூர்ப் பதிப்பில் தமிழரசுக் கட்சிமீதே குற்றச்சாட்டுச்சுமத்திய தினகரன், கொழும்புப் பதிப்பில் "கட்சிகளின் சுயநலம்" என்று பன்மையில் கூறியிருப்பது ஏன்!

தமிழ் பேசும் மக்களையும், அவர்களது உரிமைப் போராட்டத்தையும் காட்டிக் கொடுக்கும் அந்தரங்க நோக்குடன் அபாண்டமான பொய்களை தினசரி கக்கி வரும் ஏரிக்கரைப் பத்திரிகைகளின் செய்திகளைப் பொறுத்து தமிழ் பேசும் மக்கள் எச்சரிக்கையாக இருப்பது அவசியம்.


கொழும்புப் பதிப்பு

தினகரன்

The Thinakaran

Tamil Daily Newspaper

FRIDAY, FEBRUARY 10, 1956

ஐக்கியமில்லை, ஐக்கிய முன்னணியுமில்லை

"பொது நலத்தின் மேல் கட்சிகளின் சுயநலம் வெற்றிகொண்டது"

தமிழரசுக் கட்சி இன்றி புதிய முன்னணி உருவாக்க இரு எம். பிக்கள் முயற்சி

2600 வாக்களிப்பு நிலையங்கள்

வெளிச்சம்

சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டி 23

சரியான விடை

இடமிருந்து வலம்

1. பொதுத்தேர்தல்
5. ஏதி
7. திணை
8. வாயடி
9. காகி
10. விசாரம்
11. கூசுதல்
13. மயில்
14. சட்டம்
16. தரு
17. திராவிடர்
18. பயம்
19. உலக்கை
20. கக்
21. மகவு
23. வெட்கம்
24. வெடி
25. பாடும்

மேலிருந்துகீழ்

1. பொதி
2. துணைவி
3. தேவாரம்
4. தடி
5. ஏகாதசி
6. திகில்
11. கூட்டம்
12. சமர்
15. சிவிகை
16. தயக்கம்
17. திலகம்
18. பகட்டு
19. உமரி
22. நாடி

திரு. சுந்தரலிங்கத்தின் அமோக வெற்றி!

தமிழ்ப் பகுதிகளில் யு. என். பியின் கையாட்களுக்கு இடமில்லை

திரு சுந்தரலிங்கத்தை வவனியா உபதேர்தலில் முறியடிக்க யு. என். பி. எடுத்த அசுர முயற்சிகள் எல்லாம் பரிதாபமான படுதோல்வியடைந்து விட்டன. தமிழ் மக்கள் மத்தியில் யு. என். பியோ அதன் கையாட்களோ இனிஎன்றும் தலைகாட்ட முடியாது என்பது உபதேர்தல் முடிவுகளிலிருந்து தெளிவாகி விட்டது.

தமிழ் மக்கள் தமது மொழி, இன உரிமைகளைப் பாதுகாத்துப் போராட விழிப் படைந்துவிட்டார்கள் என்பதையே யு. என். பியின் அபேட்சகருக்கு கிடைத்த படுதோல்வி எடுத்துக் காட்டுகிறது.

பெப்ரவரி 14ந் தேதி வவனியாத் தொகுதியில் நடைபெற்ற பாராளுமன்ற உபதேர்தலில் திரு சுந்தரலிங்கம் 6992 அதிகப்படியான வாக்குகளால் வெற்றி பெற்றார். அவருக்கு 8995 வாக்குகளும் அவருடன் போட்டியிட்ட திரு நந்தசேனகூரேக்கு 2003 வாக்குகளும் கிடைத்தன.

திரு சுந்தரலிங்கத்துக்கு முந்தியத் தேர்தலில் கிடைத்த அதிகப்படியான வாக்குகளை விட இந்த உபதேர்தலில் 2,470 வாக்குகள் அதிகமாகும்.

ஆனால் திரு சுந்தரலிங்கத்திற்கு சனப்பிரதி நிதிகள் சபையில் அமர பொதுத் தேர்தலில் மீண்டும் தெரிவு செய்யப்பட்டாலன்றிச் சந்தர்ப்பம் கிடைக்காது.

வவனியாத் தொகுதிக்கு உப தேர்தல் நடந்தது இது முதல் தடவையல்ல. முன்னர் தேசீயக் கொடிப் பிரச்சினையை யொட்டி அவர் பாராளுமன்றச் சபையைப் பகிஷ்கரித்து உபதேர்தல் நடக்கவேண்டிய நிர்ப்பந்தத்தை உண்டு பண்ணிய பொழுது போட்டியில்லாமல் அவர் திரும்பத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

திரு சுந்தரலிங்கம் மொழிப்பிரச்சினையிலும் சிறுபான்மை மக்களின் விஷயத்திலும் அரசாங்கம் கடைப்பிடிக்கும் கொள்கைகளைக் கண்டிக்குமுகமாக பாராளுமன்றக் கூட்டத்தை மூன்று மாதங்களுக்கு பகிஷ்கரித்து தற்போது நடைபெற்ற உபதேர்தலிலும் திரும்பவும் வெற்றி பெற்றது குறிப்பிடத் தக்க தொன்றாகும்.

தமிழ் நல்லறிஞனுக்கு பொன்னுடை போர்த்தினர்

தமிழ் நாடு தந்த தத்துவப் புதல்வனுக்கு பாராட்டு

தமிழகத்தின் தலைசிறந்த நல்லறிஞனும், தமிழிலக்கியத்தின் ஒப்பரிய மேதாவியும், எண்ணிறந்த பல இனிய நூல்களை ஆக்கியோனுமான திருச்சி அறிஞர் கி. ஆ. பெ. விஸ்வநாதனுக்கு தமிழ் மக்கள் பொன்னுடை போர்த்தி மகிழ்ந்தனர்.



சென்ற 12ந் தேதி கோவையில் திரு. சண்முகம் செட்டியார் அரங்கில் திரு. விஸ்வநாதனுக்கு பொன்னுடை போர்த்தும் விழா வெகு சிறப்பாக நடந்தது. கோவை திருவள்ளுவர் படிப்பகத்தின் முயற்சியால் இந்த சிறப்பு வைபவம் நடைபெற்றது. தமிழகத்திற்கும்-தமிழ் இலக்கியத்திற்கு திரு விஸ்வநாதன் செய்த மகத்தான தொண்டுக்கு மக்களின் நன்றிகளை தெரிவிப்பதற்காகவே இந்த விழா ஏற்பாடு செய்யப் பட்டது.

பொன்னுடை போர்த்தும் இந்த நல்லவிழா ஒரு பெரும் உற்சவமாகவே அமைந்தது. ஏராளமான மக்கள் திரண்டிருக்க கோவைப் பிரமுகர் திரு. வி. எம். ராமசந்திரன் செட்டியார் பளபளக்கும் பொன்னுடையை போர்த்திய போது முழு கூட்டமே சந்தோஷ ஆரவாரம் செய்தது.

பொன்னுடை போர்த்தப் பட்ட பின் கலைவாணர் திரு. என். எஸ். கிருஷ்ணன் ரோஜா பூக்களை அறிஞர் விஸ்வநாதத்தின் மீது அள்ளித் தூவி மகிழ்ந்தார். அந்தக் காட்சியை நெஞ்சை உருக்குவதாக அமைந்தது.

திரு. விஸ்வநாதனின் சேவையைப் பாராட்டி திரு. ஜி. டி. நாயுடு, கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் மற்றும் பலரும் பேசினர்.

திரு. விஸ்வநாதனின் பேரால் ஏழை மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுக்கும் ஒரு திட்டம் [illegible]கப்பட்டது.

சிறு கதை

இரு கைதிகள்

★எஸ். வி. கண்ணன்★

பொன்னன் தன் சட்டைப் பையிலிருந்த காசை கையில் எடுத்தான். இந்த உலகத்தையே ஆட்டிப் படைக்கும் 'கண் கண்ட தெய்வங்களான' அவை அந்த கைலயங்கிரி நாதனின் நெற்றிக் கண்ணைப்போல் பளிச்சிட்டன. ஆண்டவனையே 'வாங்கி விற்கும்' அந்த நாணயங்களை தன் 'சொத்தாக்கி'க் கொண்டதில் அவன் இதயம் பூரித்தது. அவை அவனது 'அசகாய சாதனை'யின் வெற்றிப் பரிசுகள்.

துள்ளிக் குதித்த அவன் உள்ளத்தை 'பாவனை' செய்வதுபோல அவனது கண்கள் சிகப்பிமீது 'நர்த்தன'மாடின: புலியைக் கொன்று அதன் பல்லை தன் காதற் கிழத்திக்கு 'தாலி'யாக சூட்டும் நேரத்தில் அந்த மறத் தமிழன் இதயம் எப்படி பெருமிதத்தில் விம்மியிருக்குமோ அதைப்போன்ற உணர்ச்சி அவனுக்கு. ஆனால் யாத்திரங்களை தேய்த்துத் துலக்கிக்கொண்டிருந்த சிகப்பி பொன்னனையும், பணத்தையும் ஒருகணம் வெறித்துப் பார்த்தாள். பின் தன் முகத்தை சடுக்கென்று வேறு பக்கம் திருப்பிக் கொண்டாள். அன்றலர்ந்த மலர்போலிருந்த அவன் வதனம் ஏனோ வேதனையில் விம்மிக் கறுத்தது.

''சிகப்பி.........'' மனம் நிறைந்த கொள்ளை ஆசையுடன் கூப்பிட்டுக்கொண்டே அவன் அவளை நெருங்கினான். ''நீயும் ஒரு மனிதன்தானா. இந்தப் பணத்தை என் முன்னே கொண்டு வராதென்னு எத்தனை வாட்டி சொல்றது'' அவள் சீறினாள். வெறுப்பின் ராட்சச பாவம் அத்தனையும் அந்த வார்த்தைகளில் தொனித்தது. ''எனக்கு சோறு தரும் என் தெய்வத்தை இப்படி பேசலாமா? உனக்கேன் அதும்பேரில் இத்தனை கோபம்''

''பொன்னு, உனக்கு நான் வேணுமா. இல்லே அந்தப் பணம் வேணுமா?'' கண்டிப்பான தொனியில் அவள் கேட்டாள்.

''இரண்டும்தான் வேணும்'' சிரித்துக் கொண்டே பதில் சொன்னான்.

''கிரிச்சு ஏமாத்திப்பிடலாம் என்னு நினைச்சிட்டியா. இன்னிக்கு இரண்டிலே ஒன்னு பார்த்துக்கிடறது என்னு நிச்சயிச்சிட்டேன். ஒன் கூட நான் வாழணும் என்ணா இந்த சேப்படித் தொழிலே விட்டுடு. ஏதேனும் மானமுள்ள பிழைப்புத் தேடு. இல்லேன்னா நமக்குச் சினேகம் வேணாம்'' அவளது வார்த்தைகளில் போதகர்களின் 'உபன்யாசம்' காணப்படவில்லை. அதற்கு மாறாக வஜ்ரம் பாய்ந்த வாழ்க்கைப் பண்பு—உழைக்கும் வர்க்கத்திற்கே உரித்தான உறுதி காணப்பட்டது.

அவன் ஆத்திரத்துடன் பார்த்தான் ஆனால் அவன் கண்களிலிருந்து கோபாக்கினி ஏனோ வீசவில்லை. அவனது கோபத்தின் வேகம் அந்த சிகப்பி முன் தவிடு பொடியாகியது. அவன் இதயம் மட்டும் உருக ஆரம்பித்தது.

''ஊர் ஊராகத் திரிந்து சேப்படி செய்து பணம் கொண்டு வாறது சுலபமென்று ஒனக்கு தோணுதா பொன்னு''

''இல்லே சிகப்பி. இந்த தொழிலிலே எவ்வளவு கஷ்டம் இருக்கணு உனக்குத் தெரியாது. பொலீஸ்காரன் கண்ணுலே பட்டுட்டா தோலை உரிச்சிப்பிடுவான், ஏன் ஜேப்படி அடிக்கேக்கே யாரவது கண்ணுட்டா என்ணு ஜனங்களெல்லாம் கொணணுடுவாங்க.''

''அந்த பயங்கர தொழிலை ஏன் செய்யுறே''

''பின்னே என்ன செய்யுறது. தாக்கும் பசிக்கு யார் சோறு போடுவாங்க'

''அதுக்காக இந்த மானங்கெட்ட தொழிலை செய்யுறதா. நீ மனுஷன் இல்லையா?''

''நான் செய்யுற தொழிலுக்கு என்ன சிகப்பி மானங்கெட்டுப்போச்சு. பெரியவங்க செய்யுறதும்மட்டும் மானமான வேலையா? பிளாக் மார்க்கட் பண்ணுறுங்க, நைட் கிளப்பு நடத்துறுங்க, கொள்ளை கொள்ளையா லாபமடிக்கிறுங்க இதுல்லாம் மானமான பிழைப்பெங்கிறியா?'' ''இல்லே பொன்னு பெரியவங்க அப்பிடின்ணு நாங்களும் அப்படியிருக்கணுமா? அவங்க உழையாதவங்க. மனிதரை மதியாதவங்க; மனித குணம் இல்லாதவங்க. அந்த மிருகங்க போல நாமும் ஆகிடணுமா?''

''என்னை என்னதான் செய்யச் சொல்லுறே''

''என்மேல் ஆணையாச் சொல்லுறேன். இந்த கெட்ட புழைப்ப விட்டுடு. எங்காவது நல்ல வேலையாப் பாரு.''

''யார் சிகப்பி எனக்கு வேலை தருவாங்க. வேலைக்கு எங்கே போறது?''

சிகப்பி திகைத்தே விட்டாள். ''அட கழுதை ஆளைப்பாரு எருமைமாதிரி; எங்காவது வேலை செய்து பிழையேன்'' இந்த வார்த்தைகளை அவள் முன்பெல்லாம் கேட்டிருக்கிறுள் சிகப்பியின் சுற்றுடலுக்கும் இந்த வார்த்தை பழக்கப்பட்ட வார்த்தைகள். 'பெரிய மனுஷங்க' பாவப்பட்டவர்களைப் பார்த்து மனம் உருகி கூறும் 'அன்பு' வார்த்தைகள். அதே வார்த்தைகளையே தானும் கூறிவிட்டதாக அவள் ஒருகணம் திகைத்தாள். தங்கள் இனத்தின்—வர்க்கத்தின் எதிரிகள், ஜன்மசத்துருக்கள் பாவிக்கும் வார்த்தைகளை தானும் பாவிக்கலாமா?

அவளுக்கு இருப்புக்கொள்ளவில்லை; எழுந்து உள்ளே ஓடிவிட்டாள் அந்த சேரி வீட்டிற்கு 'சீனத்துச் சுவ'ராக இருந்த ஓலைத் தட்டிக்குப் பின் அவள் மறைந்து விட்டாள்.

பொன்னனும் சிகப்பியும் சதிபதிகளல்ல. அவர்கள் காதலர்கள்—ஒருவரை ஒருவர் நெஞ்சார நேசிப்பவர்கள். ஆனால் கதை மன்னர்கள்—கற்பனையின் சித்தர்கள் பொறுக்கியெடுத்து வர்ணச்சேர்க்கை கூட்டும் பாத்திரங்களல்ல அவர்கள். அவர்கள் காதல் அலாதியானது வெறும் 'சோபா' எழுத்தாளர்களின் 'கற்பனை வளத்திற்கு' எட்டாதது. ஏனென்றால் அந்த கதாசிரியர்கள் சிருஷ்டிப்பதுபோல ' அவள் பருவ மங்கை. பருவத்தின் துடிப்புகள் அவளது ஒவ்வொரு அங்கங்களிலும் புடைத்துநின்றன. உருண்டு திரண்டிருந்த அவளது மார்பகம், தாகத்தால் துடித்துக் கொண்டிருந்த அவளது பச்சை உதடுகள், அள்ளி விழுங்க தவிக்கும் அவளது பார்வை அவனை பித்தனாக்கியது. பருவ உணர்ச்சியால் கொந்தளித்த அவளது உடலின் ஒவ்வொரு அங்குலத்தையும்....... அவன் துடித்தான்'' இந்தப் 'பண்புகளுக்கு' புறம்பானவர்கள் அந்த இருவரும். அதனால் தான் அவள் அந்த நிபந்தனையை விதித்தாள். அவளது இதயம் வாழ்வில்—வாழ்வுப் போரில் புடமேறியது. தனக்கும்—தன் வர்க்கத்திற்கும் லாயக்குள்ளவனாக, தன் தோழனாக—ஆம் ஆம் அவளைப்போன்ற தொழிலாளப் பெண்களுக்கு புருஷர்கள் வாழ்வுத் தோழர்கள்தான், இருக்க வேண்டும் என்று அங்கலாய்த்தாள்.

உலகத்திலே பிறரை எத்திப் பிழைத்து வருகிறதல்லவா ஒரு கூட்டம். பொன்னன் அந்த கூட்டத்தைச் சேர்ந்தவனல்ல என்றாலும் அந்த கூட்டத்தின் 'தொழிலையே' அவன் பச்சையாக செய்துகொண்டிருந்தான். ஆனால் ஒரு வித்தியாசம். அவர்கள் 'கபிட்டல்' பிஸ்னஸ் என்ற மூடுதிரைகளுக்குப் பின் செய்கிறார்கள். பொன்னன் 'பிக்பாக்கட்' பட்டத்துடனேயே செய்கிறான்.

அவனது பெற்றார் அவனை 'சிறு பயலாகவே' விட்டுவிட்டு ஓடிவிட்டார்கள். வாழ்வின் ஓட்டத்தை நிறுத்திக்கொண்டார்கள். அந்த 'அகதிகள்—பொறுக்கிகள்' மத்தியில் அவன் ஒரு அனாதை பல்லிளித்து வயிறு நிரப்புபவன். இப்படி ஓடிக்கொண்டிருந்த அவன் வாழ்வில் ஒரு மாற்றம் ஏற்பட்டது தன் சூழலை பின்பற்றி தனக்கான ஒரு 'புதுப் பாதை அமைத்துக்கொண்டான் வாழ்வின் பிரச்சினைகளை தீர்க்க முடியாது குறுக்குப் பாதை தேடும் சமூகத்தில் அவன் தன் ஒரு சாண் வயிற்றை நிரப்ப அதே குறுக்கு வழியை தேடியது ஒன்றும் புதுமையல்லவே. யாரோ கொட்டை எழுத்தில் பெயர்ப்பலகை மாட்ட ஆசைப்பட்ட ஒரு தர்மப் பிரபு கட்டிய மடம் அவன் ஒதுங்குமிடம் ஊர் சுற்றுவதும், கிடைத்ததை வைத்து வயிற்றை நிரப்புவதுமே அவன் தினசரி வாழ்க்கை முறை.

தன்பாட்டிலே ஓடிக்கொண்டிருந்த அவனது வாழ்வில் ஒரு திருப்பம். சிகப்பி குறுக்கிட்டாள்: அவளை அவன் சந்தித்ததிலிருந்து அவன் மனத்திலே ஏதோ திடீர் மாற்றம் நிகழ்ந்துகொண்டிருந்தது. வாழ்வின்மீது இனம் தெரியாத ஒரு பற்று அவனுக்கு ஏற்பட்டது. தன்னைப்பற்றி-சிகப்பியைப்பற்றி, தன்னை சுற்றி வாழ்ந்த மக்களைப் பற்றியெல்லாம் அவன் தன்னையறியாமலே சிந்திக்கத் தலைப்பட்டான்; அவனது இதயத்தை மீட்டிவிட்ட சிகப்பியின் பார்வை—அதில் தொக்கிக் குழைந்த புரிந்துகொள்ள முடியாத வாழ்வு வாஞ்சை அவனது மனித உணர்வுகளையே செயல்படவைத்தது. அவன் மனிதனாக மாறிக்கொண்டு வந்தான்.

சிகப்பி அவனைப்போலவே ஒரு அனாதை; பெற்றெடுத்தவர்களை பறிகொடுத்துவிட்டவள். அந்த பதினெட்டு ஆண்டுகளையும் அவள் தன்னந்தனியாகவே ஓட்டிவிட்டிருந்தாள். ஆனால் அவளுக்கு கொழுகொம்பாக அவள் குடியிருந்த சேரிமக்கள் இருந்தார்கள். என்றாலும் பிறரை அண்டி வாழ்வதை அவள் அடியோடு வெறுத்தாள். அவளின் போக்கு, தன்மை, குணம்சம் எல்லாம் அலாதியானவை; சாதாரண 'அறிவுக்கு' புலனாகாதவை: அவள், அந்தச் சேரி மக்களின் புதல்வி. அந்த மக்களை அறிய முடியாதவர்களுக்கு அவளின் போக்கையும் அறிய முடியாதுதான்.

கருத்து முறுமுறு என்றிருந்த சிகப்பி ஒரு தொழிற்சாலையில் வேலை செய்து வந்தாள். தொழில் என்றால் அவளுக்கு ஒரு தனிப்பட்ட பிரேமை. தன் கலகலவென்ற பேச்சால் யாரையும் ஆகர்ஷிக்கக்கூடிய சக்தி நிறைந்த அவள் அந்த ஆற்றலை மற்ற பெண்கள் உபயோகிப்பதுபோல் உபயோகிக்கவில்லை; இயற்கையிலேயே துடிக்கும் விறுவிறுப்பும் நிறைந்த அவள் தொழிலாளர்களின் சங்கத்தில் பேசும்போதெல்லாம் எரிமலையாக மாறுவதை அந்த தொழிற்சாலையில் உழைத்து வந்த ஒவ்வொருவரும் அறிந்துதான் இருந்தார்கள். அவள் தொழிற்சங்கத்தில் சேர்ந்த பிறகு அந்த ஸ்தாபனமே ஒரு புது விறுவிறுப்புப் பெற்றது அதுவரை சேர்ந்திராதவர்களை எல்லாம் அவள் தன் 'மந்திர சக்தியால்' சேர்த்துவிட்டாள். சில தொழிற்சங்கவாதிகள்போல் அவள் கூட்டத்தில் கூடி பிரிந்துபோகும் சுபாவமுள்ளவளல்ல. ஒவ்வொரு தொழிலாளியுடனும்

(12-ம் பக்கம் பார்க்க)

அழகான புத்தக
வேலைகள்

கதை - கட்டுரை நூல்கள், பள்ளிக்கூடப் பாடப் புத்தகங்கள், சஞ்சிகைகள் அச்சிட விரும்புவோருக்கு அரிய சந்தர்ப்பம்!

'சுதந்திரன் டைப் பவுண்டரியில் தயார் செய்யப்பட்ட அழகான புதிய 10 பொயிண்ட் 12 பொயிண்ட் எழுத்துக்களைக் கொண்டு புத்தகங்கள் அச்சிட விரும்புவோர் சுதந்திரன் ஜொப் டிபார்ட்மெண்டைக் கலந்தாலோசிக்கவும். ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு பாஷைகளிலும் புத்தக வேலைகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

குறைந்த கட்டணத்தில், சிறந்த வேலைப்பாடுகளுடன், குறிப்பிட்ட நேரத்தில் உங்கள் புத்தகங்களை அச்சேற்றித்தரவல்ல அச்சகம் சுதந்திரன் பிரஸ் ஒன்றுதான்.

இன்றே உங்கள் தேவைகளுக்கு எழுதுங்கள்;

மானேஜர்,
சுதந்திரன் பிரஸ்
194 A, தட்டா தெரு,
கொழும்பு-12.

சமத்துவ உலகம்...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

வையத்தையே தம் ஒரு கட்டளையால் படைத்த இறைவனுக்கு சலவைக் கல் பிரார்த்தனை மண்டபமேன்? இறைவன் உறங்க இவர்கள் தான் இல்லம் கட்டிக் கொடுக்கவேண்டுமோ?

இறுதியிலே இந்நிலை எப்படி வந்தது என்று ஆராய்கிறார். நவநாகரிக மோகத்திலே அன்னியரைப் பின்பற்றி அலங்கார வாழ்வு வாழ நினைத்தான் கீழ்நாட்டவன் எல்லாம் இடாம்பீகமான வாழ்க்கைமுறை. தன் உயர்வுக்காக உழைப்பாளியை நசுக்கத் தொடங்கினான் முதலாளி. நெஞ்சிலே ஈரம் வற்றியது. கொள்கையிலே நல்லவை நழுவின. மனிதனை உண்டு மனிதன் உயிர்வாழும், உயர்வுபெறும் ஒரு சமுதாய அமைப்பு ஏற்பட்டது. அதற்குத்தான்

நவீன நாகரிக மென்பது
ஒரு கண்ணாடித்
தொழிற்சாலை
கீழ்நாட்டுக் கவிஞனுக்கு
வெறியை ஊட்டுங்கள்
அவன் அதை நொறுக்கி
எறிவான்

என்கின்றான் இறைவன் தன் கட்டளையின் இறுதியாக. கவிஞர் இக்பாலின் உள்ளக் கருத்து இறைவன் கட்டளையாக வெளிவருகிறது. சமத்துவம் கூறும் நல்லுலகச் சமுதாய அமைப்பொன்றே இன்று உலகில் வேண்டியுள்ளது. இதற்கு உலகம் செவிசாய்க்குமா?

(இம்மாபெரும் கவி இக்பால் 1938 ஏப்ரல் 22-ல் [illegible])

ஒழுக்க மற்றோர் நல்வாழ்வின்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி

பிடிப்பதற்குச் சமானமாகும் என வள்ளுவர் கூறுகிறார்.

''வஞ்ச மனத்தான்
படிற்றொழுக்கம் பூதங்க
ளைந்து மகத்தே நகும்
(குறள் 271)

''தவமறைந் தல்லவை
செய்தல் புதன் மறைந்து
வேட்டுவன் புட்சிமிழ்த்
தற்று''
(குறள் 274)

போலி வாழ்வினர் தான் நாட்டின் நாசகாரிகள். இவ்வாழ்வு எள்ளப்பட வேண்டியதாகும். தலையை எவ்வளவோ அழகாய்ப் பாதுகாக்கிறோம். எண்ணெய் பூசி, சீவி அழகுபடுத்தும் கூந்தலை வெட்டிய பின் பயனில்லையாதல்போலத் தாம் தம்முடைய நிலையினின்று இழிந்தால் செல்லாக் காசாய்விடுவர். (என்பதை ஒவ்வொரு பிரஜையும் நாட்டில் உணர வேண்டும்) வாழ்வை ஒழுக்கத்தாலுயர்த்த வேண்டும். கூடா ஒழுக்கம் ஆரம்பத்திலின்பம் பயக்கலாம். பிற்பயக்கும் பீடையோ பெரிது. நெருப்பு சுடும். ஒரு பொருளை எரிக்கும். வெளிச்சந் தரும். நீரின்தன்மையால் அவியும்; நெய்யிடைப்பட்டால் ஓங்கும். அப்படியன்று தீய செயல். அது மனிதனை வேரோடு அழிக்கும் விஷக் கிருமி. தீயினல் உண்டாகும் புண்ணை மாற்றலாம்; ஆனால் தீச்செயலால் வரும் கழுவாய்க்கு மருந்தே இல்லை. எனவே நாம் தீயவற்றைத் தீயினுந் தீயதாய்க் கணித்து அகற்ற வேண்டும்;

''தீயவை தீய பயத்தலாற்
றீயவை
தீயினு மஞ்சப் படும்''.
(குறள் 202)

மனிதன் தனித்துவாழ முடியாதவன். சேர்ந்து வாழ வேண்டியவன். எனவே சமூக நலனே தன் நலனாகக் கொள்ள வேண்டும். சமூகத்தின் ஒவ்வோர் அங்கத்தவனும் பொறுப்பும், உத்தரவாதமும் உடையவன் ஆதலின் கூட்டுறவு முறையில் பழுதான செயல்களையும் கொண்டிருத்தல் தனக்கும்-சமூகத்துக்கும் கெடுதலையே விளைவிக்கும்; ஒழுக்கமற்ற அயோக்கியர்களை சமூகத்தின் புல்லுருவிகளாகவே நாம் கருத வேண்டும்; தேசத்தின் விரோதிகளாக-நல்வாழ்வின் நமன்களாக கருத வேண்டும்;

கொண்டையிலிருந்து....

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆசிரியை வேதநாயகியின் செயலைவிட சுகிர்தாவின் தோழி மனோகரியின்போக்கு கொடியது மிகமிக கொடியது. அவளிடம் இருந்த கடிதங்களைத் திருடி அவளுடைய அன்னையிடம் கொடுத்தாள் என்றாலே, திருடிக் கொடுத்த அந்த கைதான் உடுக்கை இழந்த கையா? உடலிருந்து கொல்லும் நோயாக அல்லவா இருந்திருக்கிறாள். அவனும் அவளும் இவளைப்பற்றி முன்னரே புரிந்து கொண்டிருந்தால் முடிவு வேறுவகையாய அமைந்திருக்கலாம். கரஉள்ளத்தோடு கலந்து பழகிய இவள் நட்பைக், ஒன்று கொடுத்தாவது தவிர்த்திருக்கவேண்டும். சில நாகரீகப்பொருட்கள் வெளித்தோற்றத்தை மட்டுமே பண்படுத்துவதுபோல, இன்றைய அறிவும் பயன்படுகிறதா?

சுகிர்தாவும், இரத்தினசிங்கமும் ஒரு பள்ளியில் ஒரே வகுப்பில் படித்தார்கள், பழகினார்கள். இவ்வாறு கருதுவது தவறு படிக்கவும், பழகவும் வாய்ப்புத்தரப்பட்டது. உருத்தெளிந்த உணர்வால் ஒருவரில் ஒருவர் கலந்தனர். கருத்தொருமித்தனர். ஆசிரியை வேதநாயகி, தோழி மனோகரி ஆகியோரின் தொண்டால் அவள் பள்ளியை விட்டு நீக்கப்பட்டாள். ஈன்ற தாயாலும் வளர்ந்த தந்தையாலும், ஒதுக்கப்பட்டாள். உறவு அவளைப் பழித்தது. அவள் தன்னை முடித்துக்கொண்டாள்.

சுகிர்தாவும்—அவனும் பண்டைத் தமிழகத்தில் வாழ்ந்திருந்தால் அன்பின் வழி நின்ற உணர்வும், நன்றின்பால் நின்ற அறவும், செறிந்து திகழ்ந்த தமிழகத்தில், உறுபசியும் செறுபகையும்சேராத நாட்டில், ஏந்திய கொள்கைக்கு இணங்கிய வேந்தன் ஆட்சியில், அன்பும், அறனும், சூழ்ந்துபண்பும், பயனும் பெருக்கிய வாழ்க்கையில் மக்கட்பேறே பேறு என்று கருதிய பெற்றோரிடையே அவர்கள் பிறந்திருந்தால் அவனும் அவளும், முல்லைக்கலியில் தனியிடம் பெற்றிருப்பார்கள். சாரதா ஒரு நிகழ்ச்சிக்கு உள்ளத்தில் ஒளிதருகிறது...

இளையாள் ஒருத்தி, இலங்கிழை அவள் பெயர் முறிமேனியும், முத்து முறுவலும் விளங்க வேய்தோளும், மேற்கண்ணுங்கொண்டு திகழ்கிறவ......

இளவல் ஒருவன், இசைவேட்டன் அவன் பெயர்; திரண்ட தோளும், எழுந்த மார்பும் உடையவன்.

அவளுடைய முறிமேனியில் கிளர்ந்து பரவிய செறிநாற்றம் அவனுடைய நெஞ்சேறி நினைவில் ஊறியது.

இலங்கிழை அவன் ஆனாள். இசைவேட்டன் அவன் ஆனான்.

ஊரும், யாரும் அறியாமல் வெள்ளத்தினோடு வெள்ளமும், வீணையினோடு நாதமும் ஆகிவிட்டார். ஒருவரில் ஒருவர் கலந்து கரைந்து விட்டனர்.

இலங்கிழை யாரும் அற்றவள் அல்ல. அப்பா இருக்கிறான்—அம்மா இருக்கிறாள் அதோடு வெண்மாள் செவிலித்தாயாகவும், உள்ள மழையரசி தோழியாகவும், இருக்கின்றனர். இசைவேட்டனுக்கும் அப்படியே

ஒருநாட் காலை, செவிலி இலங்கிழையை நீராட்டுவதற்கு அழைத்துச் சென்றாள் அவளுடைய அன்னையும், அப்பாவும் வீட்டு முற்றத்தில் ஏதோ பேசிக்கொண்டிருக்கிறார்கள். செவிலி மகளை இருத்தி அவளுடைய கொண்டையை அவிழ்த்தாள், கொண்டையிலிருந்து தனி மலர்களும் கசங்கிய மலர்களும் வீழ்ந்தன. ஆண்கள் அணியும் முல்லை மாலை ஒன்று தலைவியின் கூந்தலிலிருந்து வீழ்ந்தது. செவிலி செயலற்று நின்றாள்.

தாய் தீ மிதித்தவள்போல் விதிர்த்தாள்.

தந்தை தலை கவிழ்ந்தான்:

இலங்கிழையின் நிலை...? அச்சத்தின் வெப்பத்தால் அவள் ஒளி முகம் இருட்டிற்று இதழ் முனைகள் துடிதுடித்தன நடுநடுங்கியவளாய் ஒடுங்கிநின்றாள்.

முல்லை மலர் மாலை விழக் காரணம்...?

அவளுக்கு இப்பொழுது தான் நினைவு எழுந்தது

மகளின் மெய்ப்பாட்டியல்பை உய்த்துணர்ந்த தாய் விம்மிய நெஞ்சும், வெடித்த இதயமாய், கொல்லைப்புறம் ஓடிவிட்டாள். செயலற்று நின்ற செவிலி நிலத்தில் குந்தி தலைகவிழ்த்திக்கொண்டாள்.

இலங்கிழைக்குஎன்னசெய்வதென்றே தெரியவில்லை. சந்தனம் கமழும் கூந்தலை முடிந்து விட்டு, அவ்விடத்தைவிட்டு நீங்க முயன்றாள். நிலந்தோய்ந்து கிடந்த ஆடையை ஏறத் தூக்கியபடி தயங்கித் தள்ளாடிய நடையோடு ஊருக்குஅருகே உள்ள காட்டிற்குச் சென்றுவிட்டாள்.

மகள் வீட்டில் இல்லை... தாயின் அருமை மனம்தேடித்தேடித் தவித்தது. தந்தை ஏங்கிச் சோர்ந்து கிடந்தார். இந்த நிலையில் மழையரசி வந்தாள்... இலங்கிழை வீட்டில் இல்லை அவள் ஒழிந்த இடம் இவளுக்கு தெரியும்

இலங்கிழை மரத்தடியில், பனியில் நனைந்த புறாப்போல் ஒடுங்கிக்கிடக்கிறாள். தோழி சந்திக்கிறாள்.

உன்னை எங்கெல்லாம் தேடுவது...?

உனக்கு அனைத்தும் தெரியுமே. அவரை பேசினேன். தோளில் கிடந்த மாலையை என் கூந்தலில் இட்டு அழகு பார்த்தார். வீடு செல்லும் பொழுது அதை எடுத்துவிட மறந்துவிட்டேன்... காலையில் செவிலித்தாய் கூந்தலை அவிழ்த்தபோது அப்பாவும், அம்மாவும், பார்க்கக் கூடியதாக தொப்பென்று விழுந்தது.

யாருக்கும் தெரியாமல் குடித்துவிட்டு, உடல் வெறியும் நடுக்கமும் ஏற்பட்டதும் தாங்கள் அருந்திய செய்தியை நாணத்தை விட்டுக் கூறுவார்களே அவர்களைப்போல் ஆகிவிட்டது. என் நிலை. எங்கள் களவொழுக்கம் கண்டுபிடிக்கப்பட்டுவிட்டது....

அன்னை என்ன சொன்னாள்...?

அன்னையா மாலை எப்படி வந்தது? என்று கேட்கவுமில்லை அதை ஏன் சூட்டிக்கொண்டாய் என்று சீறவுமில்லை... நெருப்பைத் தீண்டியவர்கள் கையைப் பி[illegible]துகொள்வார்களே அவ்வாறு பிசைந்த கையும், பொருமிய நெஞ்சுமாய். கொல்லைப்புறம் சென்றாள். இங்கு வந்தேன்.

இலங்கிழை அந்த மாலை வீழ்ந்து விட்டதற்காகவா அஞ்சி வருந்துகிறாய். அன்னையும் தந்தையும் நாணக்கூடியதாக விழுந்த அந்த மாலை உங்கள் பெருவாழ்வை உறுதிப் படுத்திவிட்ட தடிவீட்டு முற்றத்தில் மணற்பரப்பி பந்தலமைப்பதில் நமது சுற்றத்தார் முனைந்துள்ளனர் இப்பொழுதே மணவிழா நிகழவேண்டும் என்பது அவர்கள் வேட்கை• பண்டைத் தமிழகத்தில் எங்கோ ஒரு வீட்டில் நிகழ்ந்த நிகழ்ச்சி இது. சோழன், நந்திரன், என்ற புலவர் வண்ண ஓவியமாய் வரைந்திருக்கிறார்.

தோழி நாம் காணாமை உண்ட
கடுங்கள்ளை மெய்கூர
நாணாது சென்று நடுங்க
உரைத்தாங்கு
கரந்ததூம் கையொடு
கோட்பட்டாம் கண்டாய்நம்
புல்லினத்து ஆய்மகன் சூடி
வந்ததோர்
முல்லை ஒரு காழும்
கண்ணியும் மெல்லியாழ்
கூந்தலுட் பெய்து முடித்தேன்
மற்றுத் தோழி ஆய்
வெண்ணெய் உரை இரித்த
கதுப்போடே
அன்னையும் அத்தனும்
இல்லராய்-ஆய்தாண
அன்னைமுன் வீழ்ந்தன் அப்
பூ. அதனை
வினவலும் செய்யாள்.
சினவலும் செய்யாள்
நெருப்புக்கை தொட்டவர்
போல விதிர்த்திட்டு
நீங்கி புறங்கடை போயினாள்.
யானும், என்
சாந்துளர் கூழை முடியா,
நிலந்தாழ்ந்த
பூங்கரை நீலம் தழீஇத்
தளாபு ஒல்கிப்
பாங்கரும் கானத்து
ஒளித்தேன். அதற்கு எல்லா
ஈங்கெவன் அஞ்சுவது?
அஞ்சல், அவன் கண்ணி
நீ னைந்தாய் ஆயின் நமரும்
அவன் கணடை சூழ்ந்தார்
நின்னை அவல் கண்
வரைப்பில் மணல் தாழப்
பெய்து திரைப்பில்
வதுவையும் ஈங்கே அயர்ப,
அதுவே யாம்
அல்கலும் சூழ்ந்தவினை.

சாரதா

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் நிகழ்ந்த இந்த நிகழ்ச்சியையும் சுகிர்தாவின் இறுதியையும் எண்ணிப்பார் இலங்கிழை காலத்தால் நலியாமல் அறவர் நெஞ்சிலே முல்லைக்கலியாக இன்றும் வாழ்கிறாளே, அவள் பெற்றோர் ஆய்ந்து தெரிந்து அமைத்துக்கொண்ட வாழ்வையும், சுகிர்தாவின் பெற்றோர் ஆத்திரப்பட்டு அழித்துக்கொண்ட வாழ்வையும் ஒப்பிட்டுப்பார். ஒரு மகள் காலத்தை வென்று வாழவும் இன்னொரு மகள் அதே காலத்தால் மூழ்கடித்து முடிவடையும் காரணம் என்ன? இலங்கிழைக்கு வெண்மாளும், மழையரசியும் இருந்தனர். சுகிர்தா மலருக்கு வேதநாயகியும், மனோகரியும்இருந்தனர் இருவருக்கும் சுற்றமும் உறவும் இருந்தன. எல்லாம் இருந்தும் ஒருத்தி தமிழகத்தின் ஒவ்வொரு வீட்டிலும் வாழ்கின்றாள். மற்றவள் குட்டை நீரில் தெப்பமாக மிதக்கிறாள். ஏன்? நேற்றைய அடிப்படை இன்றைய வளர்ச்சி என்கிறார்களே அப்படியானால் வழிவழியாகப் பற்று வணங்கி வாழ்த்திய தமிழகத்தின் பண்பாடு எங்கே...? காதல், வீரம், மானம், இவையெல்லாம் எங்கே [illegible]?

இலங்கை அரசாங்கப் புகையிரதப் பகுதி

புகையிரதக் கடவைத் திருத்தங்கள்

பிரதான புகையிரதப் பாதை [illegible]ய கொட-கம்பஹா ஆகிய இரு புகையிரத நிலையங்களுக்குமிடையே (16 மைல் 85 சங்கிலி) மினுவாங்கொடை-கம்பஹா பி.டபிள்யு டி. வீதி குறுக்கிடுமிடத்திலுள்ள புகையிரதக் கடவை திருத்துவதற்காக 1956ம் ஆண்டு மாசி மாதம் 25ந் திகதி சனிக்கிழமை இரவு 10 மணி தொடக்கம் மறுநாள் காலை 6 மணி வரைக்கும் மூடப்பட்டிருக்கும் இவ்வேளையில் சாமான் மடுவத்திற்குப் போகும் வீதியாலும், சுகாதார வீதியாலும் 16 மைல் 18 சங்கிலியிலுள்ள புகையிரதக்கடவையாலும் ஒறுகொட-கம்பகா வீதிக்கு எவ்வித வாகனங்களும் செலவேண்டும்.

தமிழ் உரிமைப் போராட்ட நிதி

தமிழ் மொழி, தமிழ் பேசும் இனம், தமிழ்ப் பேசும் மக்கள் வாழும்பிரதேசம் ஆகிய எல்லாம் அழிந்தொழியுமோ என்னும்படி அபாயகரமான தாக்குதல்களுக்குள்ளாகியிருக்கின்றன. முதற்கண், உயிரினும் மேலான தாய்மொழியை—தமிழ் மொழியை—பாதுகாக்க வேண்டியிருக்கிறது. மொழி அழிந்தால் இனம் அழியும்; இனம் அழிந்தால் ஈழத் தமிழகம் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிடும்.

மொழிப் போராட்டம், இனப் போராட்டம், நிலப் போராட்டம் யாவையும் நடத்தி வெற்றி காண வேண்டிய தவிர்க்க முடியாத கடமை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி ஒன்றைத்தான் சார்ந்திருக்கிறது ஏனென்றால் தமிழ் அரசுக் கட்சியொன்றுதான் இந்த அபாயத்தை ஆறு ஆண்டுகளுக்கு முன்னரே எடுத்துரைத்து, அன்றுமுதல் இன்றுவரை நிலையான கொள்கையோடு குலையாத உறுதியோடு தமிழ் உரிமைக்காக போராடி வருகிறது.

1949ம் ஆண்டு இலங்கைத் தமிழரசுக் கட்சியை ஸ்தாபித்தோம் கட்சியின் கொள்கைகளை தமிழ்ப் பேசும் மக்களாகிய உங்கள் திருமுன் படைத்தோம். அக்கொள்கைகளின்மீது 1952ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் போட்டியிட்டோம். எங்கள் கொள்கைகளை அப்போது தமிழ்ப் பொதுமக்களாகிய நீங்கள் ஏற்றுக்கொள்ளாமல எங்களைத் தோற்கடித்தீர்கள். ஆயினும் நாங்கள் தளரவில்லை. காரணம் எங்கள் நோக்கம் தேர்தலில் வெற்றி பெற வேண்டும் என்பதல்ல. தமிழ் மொழியைத் தமிழ் இனத்தைப் பாதுகாக்க வேண்டும் என்பதே எங்கள் இலட்சியமாக இருந்தது எனவே எங்கள் கொள்கைகள் என்றாவது வெற்றி காணும் என்ற நம்பிக்கையோடும் உறுதியோடும் தமிழ்ப் பணியை ஆற்றி வந்தோம்.

இன்று நாங்கள் எடுத்துக் கூறிய கொள்கைகளையே மாற்றாரும் ஏற்றுக்கொள்ளும் நிலை ஏற்பட்டு விட்டது அரசாங்கத்தோடு ஒட்டியிருந்தவர்களும் ஆதரிக்கும் நிலை ஏற்பட்டுவிட்டது. தமிழ்ப் பேசும் மக்களுக்கு வேறு வழி இல்லை என்ற உண்மை புலனாகிவிட்டது.

இந்த நிலையில் எங்கள் போராட்டத்தை மேலும் மும்முரமாகத் தொடர்ந்து நடத்த வேண்டியிருக்கிறது. இதற்கு வேண்டிய ஊழியர்களும், உழைப்பாளிகளும் இருக்கிறார்கள். திட்டமும் கொள்கையும் இருக்கின்றன. திறமையும் உறுதியும் இருக்கின்றன, வேண்டியிருப்பது நிதி ஒன்றுதான்.

வேண்டிய நிதியைத் தமிழ்ப் பேசும் மக்களாகிய நீங்கள்தான் தந்து தமிழ் உரிமைப் போராட்டத்திற்கு ஆதரவளிக்க வேண்டும்.

தமிழ்ப் பிரதேசங்களில் திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்றத்தை உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டியிருக்கிறது. சத்தியாக்கிரக அடிப்படையில் பலவிதமான போராட்டங்களை நடத்த நாம் திட்டமிட்டுள்ளோம். இதற்கு நிதி தேவை.

பெப்ரவரி 20ந்திகதி தமிழ்ப்பிரதேசங்களில் தமிழ்ப் பேசும் மக்கள் ஒரு சாத்வீக ஹர்த்தாலை நடத்த வேண்டும். தமிழுக்கு சமஉரிமை கோருவது சில அரசியல் தலைவர்களுடைய பித்தலாட்டமே தவிர அது தமிழ்ப்பேசும்பொதுமக்களின்ஏகோபித்தகோரிக்கையல்ல என்று சிங்கள அரசியல்வாதிகள் சொல்லிவருகிறார்கள். சமஅந்தஸ்துகோரிக்கை மிழ்பேசும்மக்களின் ஒருமுகமான கோரிக்கைதான் என்பதை நிலைநாட்ட ஹர்த்தால்போன்ற ஆர்ப்பாட்டங்கள் அவசியம்; ஹர்த்தாலை நடத்துவதற்கும் நிதி வேண்டியிருக்கிறது.

பொதுத் தேர்தல் எதிர்நோக்கி வருகிறது. தமிழ்ப் பேசும் மக்கள் இந்த நாட்டில் வாழ்வதா மாள்வதா என்பதைத் தீர்மானிக்கும் ஒரு பலப் பரீட்சையாக இந்தப் பொதுத் தேர்தல் அமையப் போகிறது. தேர்தலுக்கு முன்பு மக்களிடையே போதிய பிரசாரம் செய்ய வேண்டியிருக்கிறது; இதற்கும் நிதி தேவை.

எனவே தமிழ்ப் பேசும் பொதுமக்கள் தங்களால் இயன்ற நிதியுதவி அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம். நிதியுதவி அளிப்பவர்கள் தங்கள் பெயர்களைப் பகிரங்கப்படுத்த விரும்பாவிட்டால் அவை இரகசியமாக வைக்கப்படும். நிதி அனுப்புபவர்கள் யாவருக்கும் பற்றுச் சீட்டுகள் அனுப்பப்படும்.

"நிதிமிகுந்தவர் பொற்குவை தாரீர்
நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்"

நிதி அனுப்பவேண்டிய முகவரி:

கௌரவ பொருளாளர்,
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி,
16, அல்பிரட் ஹவுஸ் கார்டன்,
கொழும்பு — 3.

இங்ஙனம்,

கு. வன்னியசிங்கம்,
தலைவர், இ. த. அ. கட்சி.

எஸ். ஜே. வி. செல்வநாயகம்
பொதுச் செயலாளர்,
இ. த. அ. கட்சி.

20—1—56

Advt.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இரு கைதிகள்

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

நெருங்கிய தொடர்பு கொள்ள ஆரம்பித்தாள். அந்த சேரியிலுள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் போவாள். அவர்களின் இன்ப துன்பங்களில் இரண்டறக் கலப்பாள். ஆனால் ஒவ்வொரு வேளையிலும் அவள் தொழிற் சங்க போதத்தை ஊட்ட தவறுவதில்லை.

இவ்வளவு துணிச்சலும் துடுக்கும் நிறைந்த அவள் யாருக்கும் கட்டுப்படாத 'அடங்காப்பிடாரி'யாகவே இருந்தாள். யாராவது அவளிடம் குறும்புத்தனமாக நடக்க ஆரம்பித்தால் போதும் அவள் சிறுத்தையாகிவிடுவாள். எந்த இளைஞனும் அவளை 'வலைக்குள்' போட முடியாது என்ற முடிவுக்கே எல்லாரும் வந்தார்கள்.

அன்று அவன் வேலை முடிந்து வழக்கம்போல் அதே வீதி வழியே வந்து கொண்டிருந்தான். அன்றுதான் அவள் முதல் முதலில் பொன்னனை சந்தித்தது. அவனது குறுகுறுத்த பார்வை அவளை ஏதோ செய்வதுபோல் இருந்தது. இனம் தெரியாத—விவரிக்க முடியாத ஏதோ ஒருவித உணர்ச்சி அவள் உடலில் பரவ ஆரம்பித்தது. ஒளிந்து கிடந்த அவளின் பெண்மை மின்வேகத்தில் செயல்பட ஆரம்பித்துவிட்டதாக அவள் உணர்ந்தாள். அன்று தொட்டு அவர்கள் தினம் தவறாது சந்தித்தார்கள்.

மனம்விட்டு ஏதோ எல்லாம் பேசினார்கள். ஆனால் பொன்னனுக்கு சிகப்பியின் பேச்சுக்கள்—போக்குகள் எல்லாம் புதிராகவே இருந்தன. அவளை புரிந்துகொள்ளக் கூடிய ஆற்றல் அவனிடம் இருக்கவில்லை. தான் உதிரி வர்க்கத்தின் பிரதிநிதி என்பதும், அவள் ஸ்தாபன ரீதியாக வளர்ந்த தொழிலாளி வர்க்கத்தின் புதல்வி என்பதும் அவனுக்கு எங்கே தெரியப்போகிறது. என்றாலும் அவள்பேரில் அவன் தன் உயிரையே வைத்திருந்தான்.

★

சிகப்பி சடக்கென்று உள்ளே போனது அவனுக்கு மீள முடியாத அதிர்ச்சியைக் கொடுத்திருந்தது. அவன் சிந்தனை எப்படி எப்படி எல்லாமோ ஆடி அலைந்தது. 'என்னை வேணுமென்னு இந்த தொழிலை விட்டு' என்ற அவளின் வார்த்தைகள் அவன் இதயத்திலிருந்து பூதாகாரமாக எழுந்தன. அவளுடன் பழகியதிலிருந்து அவளைப்பற்றி அவன் ஒன்று மட்டும் நன்றாக அறிந்திருந்தான். அவள் பிடிவாதக்காரி. 'சொன்னதை அப்படியே செஞ்சுப்பிடுவாள்' என்பது அவனுக்குத் தெரியும். ''அவளோடு வாழணுமென்னு இந்த தொழிலை விட்டுடணும்''. ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவன்போல அவன் எழுந்தான்.

''வேலைக்கு எங்கே போறது'' இந்த அவனது வார்த்தைகளை சுற்றி ஓடிய அவள் சிந்தனை 'படக்' கென்று நின்றது. அவள் சிரித்தாள். உரக்கச் சிரித்தாள். ''வேலைக்கு எங்கே போறது'' என்பது அவளுக்குத் தெரியும். அதற்கான விடையைத்தானே அவள் சேர்ந்துள்ள தொழிற் சங்கம் சொல்லிக்கொடுத்திருக்கிறது. தொழிற் சங்க ஞாபகம் வரவே அவள் எழுந்து விர்ரென்று வெளியேறினாள். ஓட்டமும் நடையுமாக சென்றாள். தொழிலாளர்கள்மீது ஆட்குறைப்பு நடத்த முதலாளி திட்டமிட்டிருந்தார். இதை எதிர்த்து நடவடிக்கை எடுப்பதுபற்றி ஆலோசிக்க அன்று தொழிற் சங்க கமிட்டி கூட்டம் இருந்தது. கூட்டத்திற்கு சுணங்கிவிட்டேனே என்ற பதட்டம் தெறிக்க அவள் ஓடினாள்.

மனம் ஒடிந்து நின்ற பொன்னனும் குடிசையை விட்டு வெளியேறினான். தன் தங்குமடத்தில் போய் படுத்துக்கொண்டான்.

இரவு 12 மணியிருக்கும். நாலைந்து பொலீஸ்காரர்கள் தடதடவென்று மடத்திற்குள் பிரவேசித்தார்கள். கால்களை மடக்கி ஒடுங்கிக்கிடந்த அந்த உருவத்தைக் கண்டதும் ''இதோ ஆப்பிட்டுக் கொண்டான்'' என்றான் அந்த ஜவான்கள் மத்தியிலிருந்த வாட்டசாட்டமான ஒருத்தன். ''திருட்டுப் பயல் திருடிவிட்டு தூங்குவது போல நடிக்கிறான்'' வார்த்தைகளுடன் போட்டிபோட்டுக்கொண்டு 'பூட்ஸ்' பொன்னனை முத்தமிட்டது. அவன் தலைமாட்டிலே சிதறிக்கிடந்த அந்த நாணயங்கள்—சிகப்பியின் திரண்டு மரத்திருந்த கழுத்திலே சூட்டி அழகு பார்க்க அவன் 'பிக்பாக்கட்' அடித்திருந்த அந்த முத்துமாலை—எல்லாம் அவனைக் காட்டிக் கொடுத்துவிட்டன.

★

அன்று அவன் தன் கைகளை உதறி கொட்டாவி முறித்துவிட்டு சுவருடன் ஒட்டிச் சாய்ந்திருந்தான். ஆறு நாட்களுக்குள் 'அந்த உலகமே' அவனுக்கு வேண்டாமென்று போய்விட்டது. இன்னும் ஆறு வாரங்களை எப்படி ஓட்டுவது? எழுந்து ஓடலாமோ என்று ஒருக்கால் மூர்க்கம் கொண்டான். ஆனால் சிறைக் கம்பிகள் அந்த பேய்க் கொத்தளத்தை ஞாபகமூட்டின. அவன் எண்ணம் சிகப்பியைச் சுற்றி வட்டமிட ஆரம்பித்தது. அவளைக் காண முடியாததில் அவளின் துடுக்கான வெட்டுப் பேச்சு, முறுவலித்த பார்வை இவற்றை இழந்ததில் அவன் இதயம் தவித்தது. தன்னைக் காணாது அவள் எப்படியெல்லாம் கலங்குகிறாளோ?

அவன் அடைபட்டுக் கிடந்த அந்த அறையை அடுத்து ஏதோ இரைச்சல் கேட்டது. பல குரல்கள், பல கோஷங்கள்! சுவரோடு தன் செவிகளை ஆலிங்கனம் செய்யவிட்டபடி அவன் உற்றுக் கேட்டான். ஒருவனின் குரல் உறுதியாக எழுந்து ஒலித்தது.

''தோழர்களே! கைதியாகாத தொழிலாளர்கள் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துகிறார்கள். நேற்றைய ஊர்வலத்தின்மீது பொலீஸ் தடியடி நடத்தியிருக்கிறது. ஊர்வலத்திற்கு தலைமைவகித்த எங்கள் சிகப்பிக்கு மண்டையிலே காயம். கைது செய்துள்ளார்களாம். சிறைச்சாலை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளாள். என்றாலும் அவளுக்கு ஆபத்தில்லை. சிகப்பிபோன்ற ஒரு வீரப் பெண்மணி எமக்கு மத்தியில் இருப்பதில் நாம் பெருமையடையலாம். புரட்சிகரமான தொழிலாளி வர்க்கம் தந்த மாணிக்கம் அவள். நேற்று அவள் போராட்டத்திற்கு தலைமை தாங்கி நடத்தியதே ஒரு புரட்சிச் சரித்திரம். அவள் சீக்கிரமே குணமடைய நாம் வாழ்த்துவோம்''

பொன்னனுக்கு வெறிபிடித்த ஆவேசம் ஏற்பட்டது. ''சிகப்பி'' என்று உரக்கக் கத்தினான். பின் சோர்ந்து விழுந்தான். அவள் சிறைச்சாலை ஆஸ்பத்திரியில் கைதியாகக் கிடக்கிறாள். தானும் ஒரு கைதிதான். ஆனால் அவள் தியாகத்தின் செம்மல். போராட்டம் தந்த வீராங்கனை தானே...? தன் பாணியிலே இதுபற்றிச் சிந்தித்த அவனது இதயத்திலிருந்து ஒரு பெருமூச்சு எழுந்தது. பூதாகாரமாக எழுந்த அது அந்த கொத்தளத்தையே தகர்ப்பதுபோன்ற ஒரு பிரமை. சிகப்பியின் நெஞ்சோடு கலக்க துடிக்கும் அங்கலாய்ப்பு அதில் காணப்பட்டது.

சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டிவிதிகள்

1 சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டிக்கான விடைகள் யாவும் சுதந்திரனில் வெளியாகும் கூப்பன்களில் அல்லது சுதந்திரன் ஸ்தாபனத்தார் அச்சிட்டுஇலவசமாக வினியோகிக்கும் கூப்பன்களில் மட்டுமே எழுதப்படவேண்டும்.

2 விடைகள் தெளிவாக மையினால் எழுதப்பட வேண்டும். எழுத்துக்கள் அழித்தெழுதப்படலாகாது. மாற்றங்கள் செய்யப்படலாகாது. எல்லாக் கட்டங்களும் பூரணமாக நிரப்பப்பட்டிருக்கவேண்டும்.

3 ஒவ்வொரு கூப்பனிலும் போட்டியில் கலந்து கொள்பவரின் பெயரும் விலாசமும் தெளிவாக எழுதப்படவேண்டும்.

4 (அ) ஒரே கவரினுள் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்கள் அனுப்பப்படுவதானால் அவை அனைத்தும் ஒரு போட்டி நேயருடைய கூப்பன்களாகவே இருக்க வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்கள் அனுப்பப்படும்போது எல்லாக் கூப்பன்களுக்குமுரிய கட்டணமும் ஒன்றாக அனுப்பப்படவேண்டும். அத்தோடு கூப்பன்கள் அனுப்பப்படும் எல்லாக் கவர்களின் பின்புறத்திலும் போட்டியில் கலந்துகொள்ளும் நேயருடைய பெயரும் விலாசமும் தெளிவாக எழுதப்பட்டிருக்கவேண்டும்.

(ஆ) இப்போட்டிக்குரிய பிரவேசக் கட்டணம் விடை ஒன்றிற்கு சதம் 50. மூன்று விடைகளுக்கு ரூபா 1-00.

5 எல்லாக் கட்டணமும் இலங்கைப் போஸ்டல் ஆடர் அல்லது சுதந்திரன் போட்டி வவுச்சர் மூலம் சுதந்திரன் என்ற விலாசத்திற்கு அனுப்பப்படவேண்டும். போஸ்டல் ஆடர்கள் ''குரோஸ்'' செய்யப்படுதல் அவசியம். சுதந்திரன் போட்டி வவுச்சர் சுதந்திரன் காரியாலயத்தில் கிடைக்கும். மணி ஆடர்கள், தபால் பில்லைகள், செக்குகள் முதலியன ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

6 தபால் மூலம் அனுப்பப்படும் எல்லா விடைகளும் சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டி 194 ஏ, தட்டாதெரு கொழும்பு—12 என்ற விலாசத்திற்கே அனுப்பப்படவேண்டும். விடைகளை சுதந்திரன் காரியாலயத்தில் நேரில் கொண்டுவந்து சேர்ப்பிக்க விரும்புபவர்கள் அப்படிச் செய்யலாம். உரிய பிரவேசக் கட்டணத்தை காரியாலயத்தில் செலுத்தி அதற்குரிய போட்டி வவுச்சரைப் பெற்று, அதை விடைக் கூப்பன்களுடன் இணைத்து காரியாலயத்தில் இதற்கென வைத்திருக்கும் கூப்பன் பெட்டியில் போடவேண்டும். காரியாலயத்தில் வேலை செய்யும் எந்த சிப்பந்திகளிடமும் விடைகளைக் கையளிக்கலாகாது. கைபிழையாக தவறிவிடும் அல்லது காணாமற் போய்விடும் விடைகளுக்கு போட்டிக் காரியாலயத்தார் பொறுப்பேற்க முடியாது. முடிவு தேதிக்குமுன் விடைகள் கிடைக்க வேண்டும். விடைகளைத் தபாலில்சேர்த்த அத்தாட்சி, தபால் உரிய காலத்தில் அதாவது முடிவு தேதிக்குமுன் வினியோகம் செய்யப்பட்டதென்பதற்கு அத்தாட்சியாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

7 போட்டி ஆசிரியரின் விடைக்குசரியான விடை அல்லது குறைந்தபட்ச பிழைகளோடு கூடிய விடை அனுப்பியவருக்கு முதற் பரிசும், முதற்பரிசு பெறும் விடைக்கு அடுத்தபடியாயுள்ள விடை அனுப்பியவருக்குஇரண்டாவதுபரிசும் வழங்கப்படும். பரிசுக்குரியவர்கள் ஒன்றுக்கு மேற்பட்டோராயிருப்பின் அவர்களிடையே பரிசுகள் பகிர்ந்தளிக்கப்படும். ஒருவர் ஒரு போட்டியில் ஒன்றுக்கு மேற்பட்ட பரிசுகளைப் பெற முடியாது.

(அ) உரிய கட்டணங்கள் அவ்வளவும் செலுத்தியார் ஒருவர் அதிகப்படியான விடைகள் அனுப்புகிறாரோ அவருக்கு ரூ. 100 விசேஷப் பரிசாக வழங்கப்படும். ஒரே பெயரில் ஒரு கவரினுள் ஒரே சமயத்தில் அதிகப்படியான விடைகளை உரிய கட்டணத்துடன் அனுப்புவரே இப்பரிசுக்கு உரியவராவர். வெவ்வேறு கவருக்குள் வெவ்வேறு காலங்களில் அனுப்பப்படும் விடைகள் இப்பரிசுக்கு உரிமையுடையவையாக ஒன்றுக்குமேற்பட்டவர்கள் ஒரே தொகையான விடைகள் அனுப்பினால் பரிசுத்தொகை பகிர்ந்தளிக்கப்படும் 7ம்விதியில் காட்டப்பட்ட குறிப்புக்கு மாறாக முதல் அல்லது இரண்டாவது பரிசு பெறும் நபரும் இந்த விசேஷ பரிசைப் பெற உரிமையுடையவராவர்.

8 இங்கு தரப்பட்டிருக்கும் போட்டி விதிகளுக்கு உட்படாத எந்த ஒரு கூப்பனும் போட்டியில் கலந்து கொள்ளத் தகுதியற்றதாகவே கணிக்கப்படும். இத்தகைய தகுதியற்ற கூப்பன்களோடு அனுப்பப்படும் கட்டணங்கள் திருப்பிக் கொடுக்கப்படமாட்டா.

9 இப்போட்டி சம்பந்தமாக ஸிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டட்கம்பனியாரின் தீர்ப்பே முடிவானதும் சட்டபூர்வமாகக் கருதப்படுவதுமாகும்.

10 இப்போட்டி விதிகள் இப்போட்டியை நடத்தும் ஸிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டட் கம்பனியாருக்கும் போட்டியில் கலந்து கொள்ளும் ஒவ்வொருவருக்குமிடையே தனித்தனி ஒப்பந்தத்தை ஏற்படுத்துகின்றன. இந்த ஒப்பந்தம் கொழும்பில் செய்யப்பட்டதாகவும் கொழும்பிலேயே முற்றாக நிறைவேற்றப்படுவதாகவும் கருதப்படவேண்டும்.

11 சம்பந்தப்பட்ட போட்டியில் பரிசுபெற தாங்கள் தகுதியும் உரிமையும் உடையவர்களெனக் கருதும் நேயர்கள் அப்போட்டி முடிவும் பரிசுபெற்றவர்கள் விவரமும் வெளியான மூன்று நாட்களுக்குள் தங்கள் கோரிக்கைகளை ரூ. 25 பிணைப் பணத்துடன் பதிவுத்தபால் மூலம் சமர்ப்பிக்கவேண்டும். அத்தோடு போஸ்டல் ஆடர், அல்லது போட்டி வவுச்சர் இலக்கத்தையும், விடைகளைத் தபாலில் அல்லது நேரில் சேர்த்த தேதியையும் எழுதி அனுப்ப வேண்டும். தகுதியும் உரிமையும் நிரூபிக்கப் படாதபட்சத்தில் பிரஸ்தாப பிணைப்பணத்தை அவர்கள் இழந்துவிடுவார்கள்.

12 இப்போட்டி சம்பந்தமாக வேறு எந்தவித மானகடிதப் போக்குவரத்தும் நேர்முகமான பேட்டியும் வைத்துக்கொள்ளப்படமாட்டாது. ஸிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டட் கம்பனியில் வேலைபார்க்கும் சிப்பந்திகளும் அவருடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் இப்போட்டியில் கலந்துகொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

இந்தியாவிலிருந்து இப்போட்டியில் பங்கு பற்றும் நேயர்கள் அவர்கள் அனுப்பும் கூப்பன்களுக்குரிய பிரவேசக் கட்டணத்தை இந்தியாவிலிருந்து மணியாடர் மூலமாக மட்டுமே அனுப்பவேண்டும். மணியாடர்மூலம் அனுப்பியதற்குரிய ரசீதும் மேற்படி கூப்பன்களுடன் அனுப்பப்படவேண்டும். இந்திய போஸ்டல் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

மணியாடர்கள், மானேஜர், சுதந்திரன், கொழும்பு என்ற விலாசத்திற்கு அனுப்பப்படவேண்டும்.

போட்டிக் கூப்பன்கள் அனுமதிக்கப்படும் கவரின்மேல் சம்பந்தப்பட்டபோட்டி இலக்கம் தெளிவாகக் குறிக்கப்பட வேண்டும்.

மரணத்தின் . . .

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

டாள். என்னுடைய கைகளையும் தன் மார்புடன் அழுத்தியவாறு என்னை நோக்கினாள். ஓர் மூச்சு அவளுடைய மார்பில் இருந்து எழுந்து விடுதலைபெற்றது. இதழ்கள் அற்புதமான அழகுடன் அகல விரிந்தன. பூரண திருப்தியின் ஒளிக்கிற்று முகத்தில் சுடர் விட்டது. கண்கள் லேசாக மூடிக்கொண்டன.

அவளுடைய நெற்றியில் நான் முத்தமிட்டபோது என் இதழ்களின் சூட்டைக் கிரகித்துக் கொள்ளும் சக்தி அவள் நெற்றிக்கு இருக்கவில்லை. சிதைந்து போன அற்புதமான தியாகச் சித்திரத்தை நோக்கியவாறு சிலைபோல இருந்தேன். இதயம் குமுறியது. கண்ணீர் அவளுடைய நெற்றியில்விழுந்து சிதறிக் கோலமிட்டன. அந்த மங்கிய நீர்க் கோடுகள் என் மனக் கண்முன் விசுவரூபமெடுத்தன. அந்தக் கண்ணீரில் ''புயலின் எந்த இரண்டு படகுகள் ஒன்றிற்கொன்று ஆதாரமாகின்றனவோ அவைகள்தான் வாழ்நாள் முழுதும் ஒன்றாகச் செல்லும்'' என்ற காண்டேகரின் சொற்குவியல் அலங்கோலமாகச் சிதறிக் கிடந்தது.

முற்றிற்று

இயல் இசை நாடகம்

வீரசௌந்தரம்

“இலங்கையருக்கு நாடகத்தில் எந்நேரத்தில் சிரிக்க வேண்டும் என்று கூடத் தெரியாது” என்று சர் ஐவர் ஜென்னிங்ஸ் முன்னொருநாள் கூறினார். இதைக் கேட்டுப் பலர் சிரித்தனர். சமீபத்தில் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் ‘வீரசௌந்தரம்’ நாடகத்தைப் பார்த்துக்கொண்டிருந்தபோது சர் ஐவரின் கூற்றை நினைத்து நானும் சிரித்தேன், நாடகம் பார்த்தவர்களின் போக்கு எவ்வளவு விசித்திரமாயிருந்தது. அங்கும் சந்தர்ப்பம் அறியாது ‘சொட்டை’ வார்த்தைகள் பேசிப் பின்புறம் இருந்தவர்கள் அடிக்கடி சிரித்தனர். நாடகத்தில் ஊன்றிச் சுவைத்துக்கொண்டிருந்தவர்கட்கு பாயாசத்தில் கடிபட்ட கல்போல இருந்தது.

அவர்களது சந்தர்ப்பமறியாச் சிரிப்பிற்கு இரண்டு காரணம் கூறலாம். முதலாவது சர் ஐவரின் குற்றத்திற்குரிய அறியாமை. மற்றது நாடகத்தின் விசித்திரப் போக்கு அல்லது கேலியான நடிப்பு. இந்த இரண்டு காரணத்தில் இந்நாடகத்தை எப்பகுதியில் வைப்பது என்பது சிரமமானதே. முற்பகுதியானால் அது பொதுமக்களைச் சார்ந்தது. மற்றதானால் நடிகர்களைச் சார்ந்தது.

பதினாலு கதாபாத்திரங்களைக்கொண்ட “வீரசௌந்தரம்” என்ற இவ்வரலாற்றுத் தழுவல் நாடகம் இரண்டரை மணி நேரம் நடைபெறுகிறது. சில உணர்ச்சியான கட்டங்களைக் கொண்ட இந்நாடகம் ரா. தணலனால் எழுதப்பட்டது. அதில் சில திருத்தங்கள் செய்து தயாரித்தவர் சு. சங்கரசிவம்.

வீரசௌந்தரம் கட்டப்பொம்மனின் வீரத் தளபதி. கட்டப்பொம்மன் நடத்திய இறுதிப் போராட்டத்தில் மரண காயம் அடைந்த சௌந்தரத்தை பாளையக்காரர் ராஜேந்திர பூபதி தம் அரண்மனையில் வைத்துக் காப்பாற்றுகிறார். அவர் மகன் சௌந்தரத்தின் உயிர்த்தோழனாக, மகள் புனிதவதி அவனைக் காதலிக்கிறாள்.

கட்டப்பொம்மனின் சிதைந்த சேனையைத் திரட்டி வெள்ளையருக்கெதிராகப் புரட்சிசெய்யத் தயாராகிறான் சௌந்தரம். பூபதி தம் குடும்பத்தையும் சொத்துகளையும் சௌந்தரத்திடம் ஒப்படைத்து உயிர் துறக்கிறார். தாயார் தம் விருப்பப்படி மற்றோர் பாளையக்காரரான பாண்டித்துரைக்குப் புனிதவதியைத் திருமணம் செய்து வைக்க முயல்கின்றார். ஆனால் அவள் வெறுக்கிறாள்.

புரட்சி வெடிக்கிறது. ஆரம்பத்தில் வீழ்ச்சியடைந்த வெள்ளையர் பின்னர் கோட்டையையே தகர்த்துவிட்டனர். இறுதிவரை சௌந்தரமும் மாற்றுடையில் புனிதவதியும் போராடி குண்டு பட்டு இறக்கின்றனர்.

புனிதவதியாக நடிக்கும் செல்வி சிவராஜலிங்கமும் அவரது தாயாராக நடிக்கும் திருமதி ஸ்ரீ பத்மநாதனுமே இந்நாடகத்திலுள்ள இரு பெண் பாத்திரங்களாவர். கொழும்பிலே மேடையேறும் நாடகங்களிலெல்லாம் செல்வி சிவராமலிங்கத்தைக் காணலாம். அவர் இன்றோர் தேர்ச்சிபெற்ற நடிகையாகிவிட்டார். “நான் என் நாட்டை முதலில் காதலிக்கிறேன். அடுத்தபடி உன்னை” என்று சௌந்தரம் கூறியபோது “அப்படியானால் இந்த அதிர்ஷ்டமான நாடு சாம்பாராகப் போகட்டும்” என்று உள்ளக் கொதிப்போடு அவர் பதில் கூறும் கட்டம் அபாரம்.

சினிமா நடிகர் டி. பாலசுப்பிரமணியம்போல் வேஷம் போட்டு, எம். ஆர். ராதாபோல் இடையிடை பேச முயலும் திரு த. க. சிவராசா சௌந்தரம் பாகத்தை நன்கு நடித்துள்ளார் என்றுதான் பலரும் ஒப்புவர். வேலைக்காரனாகவும் தளபதியாகவும் நடிக்கும்போதெல்லாம் அவரது வேஷத்தில் எவ்வித மாற்றமும் காணப்படவில்லை. பேச்சில் மாற்றம் காணப்பட்டது. உணர்ச்சியூட்டும் சில வார்த்தைக் கூட்டங்கள் மீண்டும் மீண்டும் அவர் வாயிலிருந்து உருளுகின்றன. “உனக்கு ஒரு கோட்டையும் சிறு படையும் தந்தால் என்ன செய்வாய்?” என்று பூபதி கேட்டபோது ‘அவரது நடிப்பும், பேச்சும் எல்லையையே கடந்துவிட்டது’ அற்புதம்.

சின்னப் பேந்திரனாக நடித்த திரு. விக்னேஸ்வரனின் நடிப்பு அவசர நடிப்பாக இருந்தது. எந்நேரமும் மேடையையே நோக்கிச் சொற்பொழிவாற்ற முயன்றார்.

ராஜேந்திர பூபதியாக நடித்த திரு ச. இராசரத்தினம் தம் பாகத்தை நன்கு உணர்ந்து திறம்பட நடித்தார் என்று உறுதியாகக் கூறலாம். இரு சொற்களில் கூறுவதானால் அவர் ஒரு தேர்ச்சிபெற்ற நடிகர்.

அடுத்ததாகக் குறிப்பிடப்படவேண்டியவர் வெள்ளைப் பாதிரியாக நடித்த திரு. செ. அருளம்பலம். அவரது ஆரம்ப மதப் பிரசங்கம் மிக நன்று.

நாடகத்தில் ஆறு பாட்டுகள் இடம்பெற்றன. குறிப்பிடத்தக்கதாக எப்பாட்டும் இல்லை. சந்தர்ப்பத்திற்கேற்றபடி பின்னணிச் சங்கீதம் சில இடங்களில் சிறப்பாக அமைந்திருந்தது.

உடையலங்காரம் நன்று. வேலைக்காரனாகக் காட்சியளிக்கும்போது சௌந்தரத்திற்குச் சாதாரண உடை கொடுத்திருக்கவேண்டும். பூபதி இறந்ததைக் காட்டுவதற்கு மனைவி ஒரு வெள்ளைப் புடவை உடுத்தாலே போதுமே.

செட்டிங்ஸ், ஒளியமைப்பு சுமார். கட்டப்பொம்மன் தூக்கிலிடப்பட்ட காட்சியும், சௌந்தரம்-புனிதவதி தனித் தனியே இருந்து பாடும் காட்சி அமைப்பும் அற்புதம். பீரங்கிகளின் தாக்குதலை உணர்த்த வெளியே பட்டாசு கொளுத்தப்படுவது கேலிக்கிடமாயிருக்கிறது.

தமிழரின் இன்றைய அரசியல் நிலையையும் தமிழன் தொடுக்கவேண்டிய போர் பற்றியும் மறைமுகமாக நாடகத்திலே புகுத்தியிருப்பது சந்தர்ப்பத்திற்கேற்ற சிறப்புத் தருகிறது.

பொதுமக்களிடையே இந்நாடகம் எவ்வித முடிவை ஏற்படுத்தியபோதிலும், தமிழன் வரலாற்றை அடிப்படையாகக்கொண்ட இந்நாடகத்தை அளிக்க முன்வந்தவெள்ளவத்தை இசைக்கலை மன்றத்தார் பாராட்டிற்குரியவர்களே.

—கிரன்

தமிழர் நலன்....

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

காலம் மட்டும்தான் ‘உயிரோடிருக்கும்’ என்று கூறப்பட்டது ‘ஏன் அதற்கு ஆறு மாத ஆயுள்’ என்று நான் கேட்டேன் ‘சிங்களம் மட்டுமே என பார்லிமென்ட் என முடிவு செய்தால் நாங்கள் எல்லோரும் ராஜினாமாச் செய்துவிட்டு மீண்டும் போட்டியிட வேண்டும்’ என்று தெரிவிக்கப்பட்டது. எனது யோசனை கேட்கப்பட்டபொழுது ‘நாங்கள் எல்லோரும் எங்களுடைய கூட்டு நிகழ்ச்சித் திட்டப்படி வேலை செய்ய முயற்சிக்க வேண்டுமென்றும் இரண்டு வருடங்களுக்கு மேலும் பார்லிமென்ட் கலைக்கப்படாவிட்டால் நாங்கள் ராஜினாமாச் செய்யலாமென்றும் யோசனை தெரிவித்தேன் ஆகவே ஐக்கிய முன்னணி அற்ப ஆயுள் படைத்ததாகவே இருந்தது.

சம்பவங்கள் போன போக்கைப் பார்த்தால் ஐக்கிய முன்னணி கருவிலேயே சிதைந்ததாக கருத வேண்டியதுதான். ஆகவே ஐக்கிய முன்னணி முயற்சி மாஜி யு. என். பி. தமிழ் எம். பிக்கள் தேர்தலில் வெற்றி பெற்று மீண்டும் பார்லிமென்டுக்குள் நுழைவதற்குச் செய்யப்பட்ட முயற்சி என்று திரு செல்வநாயகம் வர்ணித்தது சரியானதா தவறானதா என்பதை மேற்காட்டியவைகளிலிருந்து மக்களே முடிவு செய்துகொள்ளட்டும்.

மகத்தான 2வது வாரம்
எல்பின்ஸ்டன் றெக்ஸி
காலை 10-00, பிற்பகல் 2-00, மாலை 6-00, இரவு 9-30
ஜெமினி கணேசன், கே. ஆர். ராமசாமி,
குசேலகுமாரி, ராஜசுலோசனா நடித்த
“நீதிபதி”

மகத்தான 15-வது வாரம்!
கெயிட்டி
பிற்பகல் 2-00, மாலை 6-00, இரவு 9-30
குலேபகாவலி

மகத்தான 3வது வாரம்!
செல்லமஹால்
காலை 10-00, பிற்பகல் 2-00, மாலை 6-00, இரவு 9-30
ரேஹனா - அஜீத் நடித்த
“சாம்ராட்” (தமிழ்)

பம்பாய் மக்களின் இன்பத்திலும் - கோலாகலத்திலும் நீங்களும் பங்கெடுத்துக்கொள்ளுங்கள் !
ராஜ்கபூரின்
“ஸ்ரீ 420”
நடிகர்கள்:
நர்கிஸ் - நாதிரா - ராஜ்கபூர் - நிமோ.
இசையமைப்பு:
ஷங்கர் & ஜெய்க்கிஷன்.
பாட்டு:
ஹஸ்ராஜ் & ஷைலேந்திரா.
நடனங்கள்:
சத்தியநாராயண்.
சென்ட்ரல் போகம்பரை
கொழும்பு கண்டி
காலை 10-15, பிற்பகல் 2-30, மாலை 6-00, இரவு 9-30 மணிக்கும்
எல்லாவிதமான இலவச டிக்கட்டுகளும் சலுகைகளும் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன.
இடத்திற்கு முன்கூட்டியே பதிவு செய்யுங்கள்.

சிவாஜி கணேசன் - பத்மினி - ராகினி - தங்கவேலு நடிக்கும்
“கோடீஸ்வரன்”
சென்ட்ரல் (நாவலப்பிட்டி)
தினசரி இரவு 9-30 மணிக்கும்
ஸ்டார் (பதுளை)
தினசரி மாலை 6-30, இரவு 9-30 மணிக்கும்

நீங்களும் கேட்கலாம்!

மாணவர்களாகிய உங்களுக்கு எத்தனையோ விஷயங்களுக்கு விடை தெரியாமலிருக்கலாம். நீங்கள் கேட்கும் கேள்விகளுக்கு 'சுதந்திரன்' மாமாவினால் இப்பகுதியில் விடையளிக்கப்படும். ஆனால் கேள்விகள் பெயர் விலாசத்துடன் போஸ்ட் கார்ட்டில் மட்டும் எழுதப்பட வேண்டும். 'வளர்மதி' சுதந்திரன் மாணவர் மன்றம், C/o சுதந்திரன் தபால் பெட்டி இல. 1183 கொழும்பு -12 என்ற விலாசத்திற்கு கேள்விகளை அனுப்பி வைக்க வேண்டும்.

செல்வி வீ. சந்திரா மட்டக்களப்பு

கே: தற்போது நடைபெறும் கொழும்புப் பொருட்காட்சியின் அடிப்படை நோக்கமென்ன?

ப: பல்வேறு நாடுகளின் விவசாய அபிவிருத்தியைக் காட்டுவதன்மூலம் நமது நாட்டிலும் விவசாயத்தைப் பெருக்க உதவுவது.

கே: நீங்களும் நானும் பெற முடியாதது என்ன?

ப: அறிவு, ஆற்றல், சுகவாழ்வு, இன்பம்! இவைகளை எல்லோராலும் பெற முடியாதே!

கே: சுவாமி விபுலானந்தர் எழுதிய 'யாழ்நூல்' எந்தத் திகதியில் அரங்கேற்றம் செய்யப்பட்டது?

ப: 5-6-47, 6-6-47 ஆகிய திகதிகளில் அரங்கேற்றம் செய்யப்பட்டது.

எஸ். ஏ. பேரின்பநாயகம், மண்டூர்

கே: கிரேக்கருள் விஞ்ஞானத்தில் திகழ்ந்து விளங்குபவர் யார்?

ப: அரிஸ்டோட்டல் என்ற அறிஞர்;

எஸ் பாருக் கேகாலை

கே: பூமிக்குக் கவருசக்தி இருக்கிறது என்பதைக் கண்டுபிடித்தவர் யார்?

ப: நியூட்டன் என்ற விஞ்ஞானி

செல்வி ரோகினி வைத்திலிங்கம் பருத்தித்துறை

கே: தமிழில் கவிஅரசர் என்றவுடன் கம்பர் என்பார்கள். அவருக்கு பின்னுள்ள யாரை ஒப்பிடலாம்?

ப: சுப்பிரமணிய பாரதியாரைக் கூறலாம்.

கா வீரசிங்கம், நிவித்திகலை;

சுப்புதம்பி, கொழும்பு.

சி பஞ்சாட்சரம், சங்கானை

மூ குணரெட்ணம், யாழ்ப்பாணம்

கே: உலகிலுள்ள ஏழு அதிசயங்கள் யாவை?

ப: 1. சைனாவின் மாபெரும் மதில் 2. ரோட்ஸ் தீவிலுள்ள 'கோலோகஸ்' என்னும் பிரமாண்டமான சிலை 3. இந்தியாவிலுள்ள தாஜ்மஹால் 4 இத்தாலி பிசாவின் சரிவந்த கோபுரம் 5. பாபிலோன் தொங்கு தோட்டம் 6. எகிப்து பிரமிட் கல்லறைகள் 7 லண்டன் கிளியோபெத்ராவின் ஊசிக் கோபுரம்.

ந பொ. கனகலிங்கம் நல்லூர்

கே: உலகில் அதிகமாக விற்பனையாகும் பத்திரிகை எது?

ப: 'ரீடர்ஸ் டைஜஸ்ட்' என்னும் பத்திரிகை.

ஏ. எல். எம் முகைதீன் பாவா அக்கரைப்பற்று

கே: உலகில் கணிதத்தில் வல்லுனர் யார்?

ப: ஐயன்ஸ்டைன்

வளர் மதி

சுதந்திரன் மாணவர் மன்றம்.

'வளர்மதி' பூர்த்திக் கதைப் போட்டி விதிகள்

சந்திராவின் படம்

முடிவு திகதி 10-3-56.

★ 'வளர்மதி' சுதந்திரன் மாணவர் மன்ற பூர்த்திக் கதைப் போட்டியில், 20 வயதுக்குட்பட்ட எல்லா மாணவ மாணவிகள் இளைஞர்களும் பங்குபற்றலாம்.

★ கீழே கொடுக்கப்பட்டிருக்கும் கதையை 'சந்திராவின் படம்' என்ற தலைப்பிற்கேற்ப 'பூல்ஸ்காப்' காகிதத்தின் இரண்டு பக்கங்களுக்கு மேற்படாமல் பூர்த்தி செய்து, பூர்த்திக் கதைப் போட்டிப் பத்திரத்தையும் நிரப்பி அனுப்பவேண்டும்.

★ பூர்த்திக் கதைகள், 'வளர்மதி' சுதந்திரன் மாணவர் மன்றம், C/o சுதந்திரன், தபால் பெட்டி இல: 1183, கொழும்பு 12 என்ற விலாசத்திற்கு 10-3-56க்கு முன்னர் அனுப்பிவைக்கப்படவேண்டும்.

★ போட்டிக்கு வரும் பூர்த்திக் கதைகளில் சிறந்த கதைக்கு பத்து ரூபாய் பெறுமதியான முதல் பரிசும், 2ம், 3ம் கதைகளுக்கு மாமாவின் விருப்பம்போல் பரிசுகளும் வழங்கப்படும். அதைவிட தகுதிவாய்ந்த ஏழு கதைகளை அனுப்புபவர்கள் பெயர்களும் வெளியிடப்படும் இப்பத்திரத்தைப் பூர்த்திபண்ணி கதையுடன் இணைத்து அனுப்பவேண்டும்.

"வளர்மதி" - பூர்த்திக் கதைப் போட்டி

பெயர்...

விலாசம்...

....

....

கையொப்பம்.

சந்திராவின் படம்

அவள் கண்கள் கலங்கின. முகம் சிவந்தது கண்ணீர்த் துளிகள் கன்னத்தால் வழிந்து நிலத்தில் உருண்டன. குஞ்ஞுளினி அழுதுவிட்டாள்! விக்கி விக்கி வேதனை தீருமட்டும் அவள் அழுதாள் பாவம்...... குஞ்ஞுளினியினால் வேறு என்னதான் செய்ய முடியும்.........? மணி பன்னிரண்டு அடித்து ஓய்ந்தது அவள் தூங்கவில்லை. இரவின் அமைதியிலே அவள் பட்டு இதயம் மட்டும் தூங்காமல் படபடத்துக்கொண்டிருந்தது.........

குஞ்ஞுளினியின் இதயத்திலே எண்ண அலைகள் இப்படி மோதிச் சரிவதன் காரணம் என்ன? அவள் உள்ளத்தை வாட்டும் நிகழ்ச்சியை அவளால் மீண்டும் நினைக்கவே முடியவில்லையே............ மறந்துவிட்டால் தேவலைதான்; ஆனால்—?

துணிவுடன் அன்று காலை பாடசாலையில் நடந்த நிகழ்ச்சியை நினைத்துப் பார்த்தாள் குஞ்ஞுளினி. அவள் எண்ணத் திரையிலே அவள் சிநேகிதி சந்திரா வந்து நின்றாள். சிந்தனைக் கயிறு நிமிர்ந்தது. நிகழ்ச்சிகள் பின்னலாரம்பித்தன..................

(இவ்விடத்திலிருந்து பூர்த்தி செய்யப்படவேண்டும்.)

'வளர்மதி—சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம். கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூர்த்தி செய்து அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப்பத்திரங்களை 'வளர்மதி''யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து ''வளர்மதி'' C/o சுதந்திரன், தபால் பெட்டி இல. 1183, கொழும்பு 12 என்ற விலாசத்திற்கு அனுப்பிவைக்கவேண்டும். இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும். அத்துடன் அத்தாட்சி பத்திரமும் வழங்கப்படும்.

வளர் மதி

சுதந்திரன் மாணவர் மன்றம்

அங்கத்தவர் மனுப்பத்திரம்

இல: 3

பெயர்.......................................வயது..............

பாடசாலை...

விலாசம்...

....

....

பெற்றோர் அல்லது ஆசிரியர் கையொப்பம் கையொப்பம்

என்ன புத்தகம்?

அன்று வெள்ளிக்கிழமை முதல் பீரியட் தமிழ் பாடமாக இருந்தது. தமிழ் ஆசிரியரும் கையில் சில புத்தகங்களுடன் வகுப்பில் நுழைந்தார். எல்லோரும் வணக்கம் தெரிவித்துவிட்டு அமர்ந்தனர். ஆசிரியர் எல்லோரையும் பார்த்து மாணவர்களே நீங்கள் இலக்கிய புத்தகத்தை எடுத்து படியுங்கள் நான் உங்களுக்கு சில கேள்விகள் தரப்போகின்றேன் என்றார்.

எல்லோரும் இலக்கிய புத்தகங்களை எடுத்து படிக்க ஆரம்பித்தார்கள். திடுமென ஆசிரியர் தன் இடத்தைவிட்டு எழுந்து கடைசி பெஞ்சில் உள்ள வேலுவிடம் சென்றார். அடே வேலு! உன்னை இலக்கிய புத்தகம் படிக்கச் சொல்ல, நீ என்ன புத்தகம் படிக்கிறாய்? என்று சொல்லிக்கொண்டே வேலுவின் கன்னத்தில் இரண்டு அறைகள் வைத்தார். வேலு கன்னத்தை தடவிக்கொண்டே சார் நான் இலக்கிய புத்தகம்தான் படித்தேன் என்றான் இதை கேட்ட ஆசிரியருக்கு இன்னும் கோபம் அதிகமானது என்னடா! ஏமாற்ற பார்க்கிறாய்? குமுதத்தை படித்துவிட்டு இப்போது இலக்கிய புத்தகம் படித்ததாக சொல்லி என்னை மிரட்டப் போகிறாயா? என்று சொல்லிக்கொண்டே கீழே கிடந்த குமுதத்தைஎடுத்துவிரித்துப் பார்த்தார். அவரின் முகம் சோர்வடையலாயின ஏனென்றால் அது குமுதம் அல்ல இலக்கிய புத்தகத்துக்கு வேலு குமுதத்தின் அட்டையை உறையாக போட்டிருந்தான்.

—எம். ஏ. சத்தியநாதன்

தெரிந்து கொள்ளுங்கள்!

—என் பி கே. லிங்கம்—

★ உலகில் மலைகள் நிறைந்த இடம் ரஸ்மேனியா என்னும் தீவாகும்.

★ தொலை பேசி (டெலிபோன்) என்னும் கருவியைக் கண்டு பிடித்தவர்—கிரஹாம் பெல்.

★ ஒலி அலைகள் விநாடிக்கு 186 000 மைல் செல்லுகின்றன

★ நிறமழை பெய்வதைப் பற்றி அறிவீர்களா? 1608 ஐக்ஸ் (Aix) என்னுமிடத்தில் சிவப்பு மழை பெய்தது. இங்கிலாந்தில் 1903 ல் கறுப்பு மழை பெய்தது 1854 ல் மொராசயர் என்னுமிடத்தில் மஞ்சல் நிற மழை பெய்தது.

★ வான சாஸ்திரிகள் இதுவரை சுமார் நூறு ரேடியோ நட்சத்திரங்களைக் கண்டு பிடித்திருக்கின்றனர். இவை மற்றைய நட்சத்திரங்களைப் போல் நம் கண்ணுக்குத் தெரியக் கூடிய ஒலியைத் தரமாட்டா. ஆனால் இவை சதா ரேடியோ அலைகளை வீசிக்கொண்டிருக்கின்றன.

(தொடரும்)

மாமா பதில்

சி த. ராஜா திருகோணமலை

கன்னித் தமிழும் யாழ்ப்பாணமும் நல்லவை

அ. சிவகந்தரம், திரியாய்

''காலை மலர்வதைப் பார்'த்தேன் சுந்தரம்! அழகாகவே இருக்கின்றது

செல்வி ஜி பி. லில்லிவில்லியம் நாவலப்பிட்டி

1, 2, 3 இலக்க மனுப்பத்திரங்கள் 1-1-56ம் திகதிய சுதந்திரன் 'வளர்மதி'யில் வெளியாகியிருக்கின்றன; அவைகளில் வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட 3 மனுப்பத்திரங்களைப் பூர்த்திசெய்து அனுப்பவும்.

செல்வி வீ சந்திரா மட்டக்களப்பு

கேள்விகளோடு நிறுத்திவிட்டீரே! கட்டுரை, கதைகளும் எழுதி அனுப்பலாம்;

எஸ் பத்மநாதன், ஊறணி

'வளர்மதி'யில் வெளியாகும் மனுப் பத்திரங்களை மட்டுமே நிரப்பி அனுப்பவேண்டும் மருமகனே!

வீ. புஷ்பராசலிங்கம், மானிப்பாய்

'பேனா நண்பர்கள்'—யோசனையை அமுல்நடாத்த இப்போது முடியாதே!

க. பாலசுந்தரம், காத்தான்குடி

பீ எம். ஏ ஜுனுப், புத்தளம்

ஒரு இலக்க மனுப்பத்திரம் 3 தடவை பிரசுரிக்கப்படும்.

க. யோட்ஜ், ஊர்காவற்றுறை

''எழுந்திரு மாணவா'' நல்ல முயற்சி. ஆனால் வெளியிட முடியாதே...... சுருக்கமாக வேறு கட்டுரை எழுதி அனுப்பவும்.

ப. இராமக்குட்டி, திருக்கோவில்

விடுகதைத் தொகுதியை அனுப்பிவைக்கவும். சொந்தப் பெயரிலே வெளியிடலாமே!

செல்வி செல்லத்தம்பி செல்லப்பாக்கியம், அல்வாய்

உமது கவிதையைப் படித்தேன. 3வது மனுப்பத்திரத்தையும் அனுப்பிவைக்கவும்;

செல்வி வீ. பத்மாவதி, கல்லடி, உப்போடை

'எதையும் தாங்கும் இதயம்' எல்லோருக்கும் அவசியம் வேண்டும்தான்! உமது கட்டுரையை வெளியிடுவேன்.

க பவழகாந்தன். நொச்சிமுனை

3ம இலக்க மனுப்பத்திரம் பிரசுரமாகி இருக்கிறதே!

ஜெ முஹம்மத் சகீன், முன்வது கொடை

தபாலில் பதில் எழுத மாமாவுக்கு நேரமில்லையே ......அங்கத்தவராகச் சேர நிபந்தனைகளைப் படிக்கவும்;

பெ இளங்கோவன் கொழும்பு

எம்.கே சாகுல்ஹமீது, கல்முனை

மிகவும் பெரிய கட்டுரை; சுருக்கமாக எழுதி அனுப்பினால் 'வளர்மதி'யில் இடம் பெறலாம்.

யாழ்ப்பாணம்

இலங்கை என்னும் மணித்தீவில்
இளமை யென்னும் எழிலுடனே
பழமை வாய்ந்த நகராக
பாங்குடன் விளங்கும் யாழ்நகரே

தரணி யெங்கும் ஆண்டவனும்
தமிழன் வாழும் நகராகும்
வளங்கள் மிக்க நன்னகராம்
வல்லோர் வாழும் பொன்னகராம்

பனைகள் நிறைந்த யாழ்நகராம்
பாவலர் பிறந்த பழநகராம்
நாவலர் வாழ்ந்த நன்னகராம்
நாடோர் புகழும் யாழ்ப்பாணம்

—சி. த. ராஜா,
திருகோணமலை.

கழகச் செய்திகள்:

தனித் தமிழ் நாடு கோருவோர் இனத்தை காட்டிக் கொடுத்தோர்

இவர்களின் நயவஞ்சக வலைக்குள் தமிழ் மக்கள் விழமாட்டார்கள்

"தமிழ்ப் பேசும் மக்களின் உரிமைகளனைத்தும் பறிபோய் தத்தளித்துக் கொண்டிருக்கும் இந் நேரத்தில் அவர்களை இன்னும் ஏமாற்றலாம் என்று நினைத்து சிலர் ஐக்கிய முன்னணி என்ற போர்வைக்குள் "தனித் தமிழ் நாடு" என்னும் லேபல்களோடு பவனி வருகின்றனர். இந்த நயவஞ்சக வேஷதாரிகளின் வலைக்குள் தமிழ்ப் பேசும் மக்கள் இனி ஒருபோதும் சிக்கமாட்டார்கள் என்பது முக்காலும் நிச்சயம்" இவ்வாறு சென்ற வாரம் பெரிய போரதீவில் நடைபெற்ற தமிழரசு வாலிப முன்னணி பொதுக் கூட்டத்தில் இயக்கச் செயலாளர் திரு. பூ. செல்லத்துரை பேசுகையில் கூறினர்.

கூட்டத்திற்கு திரு. சி. சோமசுந்தரம் தலைமை வகித்தார்.

திரு. செல்லத்துரை தொடர்ந்து பேசுகையில் மேலும் கூறியதாவது:

திட்டமான அரசியல் நோக்கமும், இலட்சியமுமற்ற சிலர் "தனித் தமிழ் நாடு" என்ற கோஷத்தை கிளப்பிவிட்டிருப்பது பெரும் வேடிக்கையாய் இருக்கிறது. ஐக்கிய முன்னணி என்பது யு. என். பி ஒத்துழைப்பு தமிழர்களின் புதிய கூடாரம் என்பது பிரசித்தமாகிவிட்டது. 1948ல் தமிழ் பேசும் மக்கள் ஏமாந்ததுபோல் மீண்டும் ஏமாந்துவிடக்கூடாது என்று எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன் என்று கூறினர்.

பின்னர் கீழ்கண்ட தீர்மானங்கள் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேறின:

[1] சமஷ்டியின் அவசியத்தை விளக்கித் துண்டுப் பிரசுரங்கள் விநியோகித்தல்.

[2] தமிழரசுக் கட்சித் தலைவர்களை வரவழைத்து கூட்டங்கள் நடத்துவது.

[3] 20-ந் திகதி நடக்கவிருக்கும் உரிமைப் போருக்கான நிதி வசூலித்தல், திட்டங்கள் வகுத்தல்.

ஆளும் கட்சியின் மொழித் தீர்ப்புக்கு எதிர்ப்பு

சென்னையிலுள்ள கோகலே மண்டபத்தில் இலங்கையின் சுதந்திர தின விழா அன்று சென்னையிலுள்ள இலங்கைத் தமிழ் மாணவர் அனைவரும் கூடினர். அக்கூட்டத்திற்கு வழக்கறிஞர் சின்னத்தம்பி தலைமைதாங்கினர். செல்வன் ம. க சபாரத்தினம் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டார். அத்தருணம் திரு செங்கல்வராயன் முன்னைநாள் மேயர், தோழியர் அருள் மொழியார் ஆசிரியை, பிரசன்டேசன் கன்வென்ட், கவிஞர் கா.மு. ஷரீப் 'தமிழ் முழக்கம் ஆசிரியர் ஆகியோர் முக்கிய பேச்சாளராக திகழ்ந்தார்கள்.

கூட்டத்தின்போது இலங்கை மொழி சம்பந்தமாக ஓர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பெற்றோர் ஆசிரியர் சங்கம்

பொலநறுவை கரும்பு ஆராய்ச்சி நிலைய அரசினர் தமிழ்ப் பாடசாலையில் சென்ற 28-1-56ல் தலைமை ஆசிரியர் திரு சி. இராமநாதர் தலைமையில் பெற்றோர் ஆசிரியர் சங்க கூட்டம் ஆரம்பமாயது.

திரு எம். சிவலிங்கம் கல்வி என்னும் விஷயம்பற்றிப் பேசினர். திரு வி. ஆர். குமாரசாமி பெற்றோர் ஆசிரியர் சங்கமும் அதன் பலனும் என்னும் விஷயம்பற்றிப் பேசினர்: தலைமையாசிரியர் திரு க. சபாபதி பெற்றோர்கள் ஆசிரியர்கள் ஆகியோரின் ஒத்துழைப்பு என்பது பற்றி பேசினர்.

போஷகர்; கரும்பு ஆராய்ச்சி நிலைய அதிபர், தலைவர்: தலைமையாசிரியர் திரு க. சபாபதி, காரியதரிசி: திரு. ச கா வக்குட்டி. தனாதிகாரி: திரு தம்பிராசா;

மேலும், முத்துச்சாமி தேவர், பாலகிருஷ்ணன் யோண்சிங்கம், க இராமநாதர், சின்னையா, கிருஷ்ண பிள்ளை, ரங்கசாமி, சொக்கலிங்கம் ஆகியோர்களைக் கொண்ட ஒரு நிர்வாக சபையும்தெரிவுசெய்யப்பட்டது.

தப்லீக் ஜமாஅத் புத்தளம்

புத்தளம் தப்லீக் ஜமாஅத்தார் 4—2—56ல் அல் ஹாஜ் எச். எஸ். இஸ்மாயில் தலைமையின் கீழ முதலைப்பாலி என்ற கிராமத்திற்குச் சென்றது: 5-2-56ல் மேற்படி ஜமாஅத்தார் ஜனாப் எச். எம. ஏ. பாச்சா அமீர் தலைமையின்கீழ் P கண்டகுடா என்ற கிராமத்திற்குச் சென்று "முஸ்லிம்கள் முஸ்லிம்களாக வாழவேண்டும் — இஸ்லாமிய முறைப்படி நடக்கவேண்டும்"என்ற அடிப்படையின் பேரில் மௌலவிகளான எஸ். என். எஸ். மீரான்லெவ்வை, கே. வி. எல். அப்துல் ஹமீது, ஜனாப்களான எச். எம். முகம்மது பாச்சா, கே அபூசாலிகு, எம். ஐ. மஹ்பூபு, நெய்னு மரைக்கார், எச். எப. ஏ. லாகீர், சி. எஸ் ஹுசைன், ஏ. ஏ. அசன் ஆகியோர்கள் பேசியபின் தனித் தனி ஒவ்வோர் ஊர்களிலும் ஒவ்வோர் ஜமாஅத் நியமிக்கப்பட்டது.

சுதுமலை கி. மு. சங்கம்

"ஆயிரக்கணக்கான மைல்களுக்கப்பால் தமிழன் வாழ்ந்தாலும் தமிழன் தமிழிலேயே பேசினான்—தமிழிலேயே எழுதினான் — தம்முனுடனேவேவாழ்ந்தான். தமிழை அவனிடமிருந்து பிரிக்கமுடியாது. இன்று சிங்களத்தை அவன்மீது திணிக்க முற்பட்டால், திணிப்பவர் ஏமாற்றம் அடைவார்களேயன்றித் தமிழன் ஒருகாலும் ஏமாற மாட்டான்."

இவ்வாறு பண்டிதர் க. தம்பாபிள்ளையவர்கள் சுதுமலை கிராம முன்னேற்றச் சங்கமண்டபத்தில் 3-2-56ல் திரு ச. இரத்தினம் மாறுதலாகிச் செல்வதையிட்டுச் சுதுமலை கிராம முன்னேற்ற சங்க சனசமூக நிலைய நிர்வாகிகளால் அளிக்கப்பட்ட பிரியாவிடைக் கூட்டத்தில் பேசும்போது கூறினர். கூட்டத்திற்கு திரு. சி. சுப்பிரமணியம் தலைமைவகித்தார்.

அகில இலங்கைச் சுயபாஷா இயக்க உபதலைவர் திரு க. தம்பிராசா, திருவாளர்கள்: சி சுப்பிரமணியம், க. பேரம்பலம், எஸ். இரத்தினம் முதலியோர் சொற்பொழிவாற்றினர்.

செந்தமிழ் கலைவிருத்திக் கழகம்

நாவலப்பிட்டி சென் அன்ட்ருஸ் கல்லூரிச் செந்தமிழ் கலைவிருத்திக் கழகத்தின் பொதுக் கூட்டம் சென்ற 31-1-56ல் கல்லூரி மண்டபத்தில் திரு க. இரத்தினம் தலைமையின்கீழ் ஆரம்பமாயது.

பின்னர் சங்க உத்தியோகஸ்தர்களாக கீழ் காணுவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு க. இரத்தினம், செயலாளர்: இரா. சந்திரசேகரன், கூட்டுச் செயலாளர்கள்: ஏ. எம். கே. ராஜா, எஸ். மிரங்க ராஜன், மாணவர் தலைவர்: ஏ கிருஷ்ணசாமி, பத்திராதிபர்: ஆ நற்குணம், கூட்டு பத்திராதிபர்: அ. பெரியசாமி

ஈற்றில் செல்வன் இரா. சந்திரசேகரனின் நன்றியுரையுடனும், தலைவரது முடிவுரையுடனும் கூட்டம் இனிது முடிவுற்றது.

மக்கள் முன்னேற்றச் சங்கம்

மக்கள் முன்னேற்றச் சங்கத்தின் செயற்குழு கூட்டம் சிந்துப்பிட்டி தெருவிலுள்ள சங்கப் பணிமனையில் சென்ற 6-2-56ல் தோழர் எம். ரணசிங்கா தலைமையில் கூடிற்று.

அவ்வமயம் சங்கத்தின் ஆக்க வேலைகள் குறித்து பல தீர்மானங்களும், "சிந்துப்பிட்டித் தெரு" என்ற பெயரை நீக்கிவிட்டு "சமாதான தெரு" என்று மாற்றுமாறு கொழும்பு நகர மேயரிடம் மகஜர் ஒன்று சமர்ப்பிக்கும் தீர்மானமொன்றும் நிறைவேற்றிய பின் துணைச் செயலாளராக தோழர் அ. மரியதாஸ் தெரிவுசெய்யப்பட்டார். ஈற்றில் செயலாளர் ஜே. சோமசுந்தரம் நன்றி நவில கூட்டம் இனிது முடிவுற்றது.

சங்கானையில் காந்தி விழா

சங்கானை, மாவியவத்தை சன சமூக நிலையத்தின் சார்பில் காந்தியின் சிரார்த்த தின விழா வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது திரு. எம். கார்த்திகேசு விழாவிற்குத் தலைமை வகித்து. காந்தி அடிகளின் இலட்சியத்தை மக்கள் கடைப்பிடித்து வாழ வேண்டும் என்று கூறினர்.

திரு. பொ. நாகரத்தினம் என்பவரால் "குடிசைக் கைத் தொழிலும்-காந்தி அடிகளும்" என்னும் பொருள் பற்றியும், திரு அரியரத்தினம் ஆசிரியரால் "சுதந்திரப் போராட்டமும் காந்தி அடிகளும்" என்ற விடயம் பற்றியும் திரு. கு. பொன்னையா என்பவரால் "தீண்டாமையும் காந்திஜீயும்" என்ற பொருள் பற்றியும் சொற்பொழிவாற்றப்பட்டது.

ஈற்றில் பொதுச் செயலாளர் த. நாகராசன் என்பவரால் காந்தி அடிகள் வழிகாட்டியபடி ஈழ நாட்டுத் தமிழ் பேசும் மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து தமிழ் மொழிக்காகவும், தமிழ் பேசும் மக்களின் உரிமைக்காகவும் போராடி வெற்றி காண வேண்டும் என்று குறிப்பிட்ட பின் நன்றியுரை கூறப்பட்டு விழா இனிது முடிவுற்றது.

மாணவர் தேர்ச்சிச் சங்கம்

வெலிகம அரசினர் கனிஷ்ட பாடசாலை, மாணவர் தேர்ச்சிச் சங்கத்தின் 2-ம் வருட பொதுக் கூட்டம் சென்ற 27-1-56 ல் பாடசாலை மண்டபத்தில் தலைமையாசிரியர் தலைமையில் மாணவன் ஏ. எப். முகம்மதுவின் 'திருகுரான்' பாராயணத்துடன் ஆரம்பமானது. பல ஆசிரியர்களும், மாணவர்களும் பேசிய பின், புதுவருட உத்தியோகத்தர் தேர்தலில் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:- காரியதரிசி: ஏ. எம் முகம்மது, உப-காரியதரிசி, ஜே. எஸ். ஹாரிஸ் மவ்லானா, "அந் நூர்" பத்திரிகையின் கூட்டு ஆசிரியர்கள்: ஏ. ஸி. எப். பஷீருபு, எம். டி. எம். ஸனூஸி விளையாட்டு சங்க காரியதரிசி எஸ். டி. எம். நஸீம், விளையாட்டுக் கப்டன்: ஏ. ஸீ. எம். பாரூக், ஸப் கப்டன் ஹனீபா.

சுதந்திர தினத்தன்று உண்ணாவிரதம்

தமிழ் மொழியைப் புறக்கணித்து தமிழ் இனத்தை அழிக்கும் சுதந்திர தினத்தைப் பகிஷ்கரித்து சாம்பற்றீவு மாங்கனாய் அம்மன் கோவிலில் ஒரு வீரப் பெண்மணியும் ஐந்து ஆண்களும் உண்ணாவிரதம் இருந்தனர்.

சிவானந்தாவில் விவேகானந்தர் விழா

கல்லடி உப்போடையில் மிளிரும் சிவானந்த வித்தியாலயத்தில் சுவாமிவிவேகானந்தர் பிறந்த தின விழா சென்ற 3-2 56ல் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

சுவாமி நடராஜானந்தாஜி அவர்கள் விழாவுக்கு தலைமைதாங்கினர். வித்தியாலய ஆசிரியரான திரு க. இராகவன் விவேகானந்தரது இலட்சியங்களை இனிதாக எடுத்துக் கூறினர்.

பின்பு திரு தவராசா விவேகானந்தரின் கொள்கைகளைப்பற்றி ஆங்கிலத்தில் எடுத்துரைத்தார். வித்தியாலய மாணவன் எஸ். கிருஷ்ணன், எம். துரையப்பா, எஸ். சுந்தரநாதன் முதலியோர் விவேகானந்தரின் வாழ்க்கைச் சரித்திரத்தைச் சுருக்கிக் கூறினர்கள்.

நவாலி இளம் கமக்காரர் கழகம்

நவாலி தெற்கு சனசமூக நிலயத்தினதும், கிராமமுன்னேற்றச் சங்கத்தினதும் ஆதரவின் கீழ் சென்ற 6-2-56-ல் கலை அரசு திரு. க. சொர்ணலிங்கம் இல்லத்தில் முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்டது. அத்தருணம், வலிகாமம் மேற்கு விவசாயப் போதனாசிரியர் திரு. ஏ. சோமசுந்தரம், நவாலி கிராமத் தலைவர் திரு. பி. பரராஜசேகரம், திரு டப்ளியூ என் தேவகடாட்சம் என்போர் இளைஞர் விவசாய சங்கத்தையிட்டு அறிய விரிவுரைகள் நிகழ்த்தினர். ஈற்றில் சங்க உத்தியோகத்தர் கீழ்க் கண்டவாறு ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர். போஷகர்கள்: கலை அரசு. கே. சொர்ணலிங்கம் திரு. பி. பரராஜசேகரம், திரு. ஐ பொன்னுத்துரை தலைவர்:- திரு. டப்ளியு என் தேவகடாட்சம். உபதலைவர்:- செல்வன். வி. சபாரத்தினம். காரிபதரிசி; திரு. என். பரராஜசிங்கம். உபகாரியதரிசி:- செல்வன் என். நவரத்தினராசா. தனாதிகாரி:- செல்வன். எஸ். பாலசுப்பிரமணியம். இன்னும் 5 பேர் கொண்ட வொரு செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

ஆசிரியருக்கு பிரிவுபசாரம்

"நேரு ரஷ்யாவில் கூறியதுபோல் என் இருதயத்தை இங்கேயே விட்டுப் போகிறேன். என் ஆசிரிய வாழ்க்கையில் முதன் முதல் சந்தித்த பிள்ளைகளும் உடன் ஆசிரியர்களும் நீங்களாக இருப்பதுதான் அதற்காய காரணம்."

இவ்வாறு நுவரெலியா தமிழ் - சிங்கள பாடசாலையிலிருந்து நானுஓயா சிங்கள-தமிழ் பாடசாலைக்கு மாற்றலாகிச் செல்லும் ஆசிரியர் திரு வி. சபாபதிப்பிள்ளை தமக்களிக்கப்பட்ட பிரிவுபசாரக் கூட்டத்தில் நன்றி செலுத்திப் பேசுகையில் குறிப்பிட்டார்.

சிறந்த அச்சு வேலைகளுக்கு
அழகான எழுத்துக்கள் அவசியம்

நவீன முறைப்படி அச்செழுத்துக்களை வார்க்கும் உயர்தரமான இயந்திர சாதனத்தை நாம் புதிதாக நிறுவியுள்ளோம் என்பதை நமது நேயர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

8, 10, 12, 14, 16, 18 பொயிண்ட்களில் தமிழ், ஆங்கில எழுத்துக்களும், ஸ்பேஸ், குவாட்ஸ் போன்ற இதர உபகரணங்களும் வார்க்கும் திறமை வாய்ந்தது எங்கள் இயந்திரம். அத்தோடு சாதாரண எழுத்துக்களையும், அலங்கார எழுத்துக்களையும் வார்க்க முடியும்.

நாம் இப்பத்திரிகையில் உபயோகிக்கும் புது எழுத்துக்கள் நம்மிடம் விற்பனைக்குண்டு. இவ்வெழுத்துக்கள் உயர்தரமான உலோகத்திலும், தரம் சற்று குறைந்த உலோகத்திலும் விலைக்குத் தக்கபடி கிடைக்கும். வேண்டியவர்கள் விவரத்திற்கும் விலைப் பட்டியலுக்கும் எழுதவும்;

10 பொயிண்ட் ரோமன்
10 பொயிண்ட் போல்ட்
12 பொயிண்ட் ரோமன்
12 பொயிண்ட் போல்ட்
14 பொயிண்ட் போல்ட்
18 பொயிண்ட் போல்ட்

தேய்ந்த பழைய எழுத்துக்கள் வைத்திருக்கும் அச்சகங்கள் அந்த எழுத்துக்களைக்கொண்டு எங்களிடம் புதிய எழுத்துக்களைக் குறைந்த கட்டணத்தில் திரும்ப வார்த்து எடுத்துக்கொள்ளலாம்.

சுதந்திரன் டைப் பௌண்டரி,
194 ஏ. தட்டாதெரு, கொழும்பு—12.

இத்தீவகத்தில் ஏககாலத்தில் 6 திரைகளில்
வெற்றி முரசு கொட்டும் 2-வது மகத்தான வாரம்!

கிங்ஸ்லி - **ஸபையர்** - **வெலிங்டன்**

கொழும்பு கொழும்பு யாழ்ப்பாணம்

விஜயா - **மொடர்ன்** - **ஸ்ரீபாத**

மட்டக்களப்பு பதுளை ஹட்டன்

வர்ணிபத்திற்கு வந்த கும்பனியார் வல்லரசாக மாற, சதிசெய்ததை எதிர்த்து தமிழ்நாடு எரிமலையாகக் குமுறி எழுந்த காலம் அது!

ஆரண்யத்தில் அரசியாக அவள் வாழ்ந்தபோதிலும், அந்தரங்கத்திலே பதி சேவைக்காகத் தவித்து நிற்கிறுள்! கயவர் கூட்டத்தைக் கதிகலங்கச் செய்பவள், கணவன் அன்பிற்குக் கண்கலங்கி நிற்கிறுள் ......ஆனுல்! பரிசுக்கு ஆசைப்பட்டு தன் மருமகளைக் காட்டிக்கொடுக்க முன்வருகிறுன் நயவஞ்சகனுன தருமலிங்கம்.



ஆற்றில் ராணி ரங்கம்மாளின் படகு! அதைச் சுற்றி அரசாங்கத்தாரின் படைகள்! ராணி ரங்கம்மாள் கைது செய்யப்பட்டாளா? கொள்ளைக்காரி என்று தன்னை இகழ்ந்து ஒதுக்கிய கணவனை, கடவுளாக எண்ணி தரிசனம் செய்யச் சென்ருளே; அந்த பாக்யம் அவளுக்குக் கிடைத்ததா? இதயத்தைப் புல்லரிக்கச் செய்யும் இணையற்ற கதையை சித்தரிக்கிறது மகேஸ்வரி.

வீரமும், காதலும் ஒருங்கே அமையப்பெற்ற ஒரு சிறந்த சரித்திரக் கதை!

கடலோடி வெள்ளையர் தமிழ் நாட்டைச் சூறையாடச் சதிசெய்த காலத்து நிகழ்ந்த அற்புதமான சம்பவங்களை உள்ளடக்கிய சிறந்த தமிழ்ப் பேசும் சித்திரம்!

மாடர்ன் தியேட்டர்ஸாரின்

மகேஸ்வரி

ஜெமினி கணேசன், சாவித்திரி, தங்கவேலு,
எம். என். ராஜம், சி. எஸ். பாண்டியன்,
ஏ. கருணாநிதி முதலியோர் நடித்தது.

இப்பத்திரிகை கொழும்பு தட்டாதெரு 196-ம்இல்லத்தில் வசிக்கும் எஸ். டி. சிவநாயகம் அவர்களால் சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின்சார்பாக தட்டாதெரு, சுதந்திரன் அச்சகத்தில் பதிப்பித்து 1956 பெப்ரவரி 19-ந் திகதி பிரசுரம்செய்யப்பட்டது.